

நயினாதீவு 6ம் வட்டாரம்

அமரர்

# திருமதி. சொர்ணம்மா தம்பிமுத்து

அவர்களின்

## சிவபதப்பேறு குறித்த நினைவுமலர்

05.09.2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெற்றதாலன்னை பெறுமுயி ரனைத்தும்
பேணலாலன்னை பெற்றிடுவோர்

உற்றதாலன்னை விரும்பியவனைத்தும்
உதவலா லன்னை யெக்கலையுஞ்

செ ற்றதாலன்னை யுலகொடு வானுந்
தொழுதலா லன்னை யென்றென்றும்

பற்றற் ங்கருணை பொழிதலாலன்னை
பராபரை நாக பூஷணியால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சமர்ப்பணம்

மாதர்குல திலகமாய் வாழ்வு தனில் ஒளியேற்றி
அன்பு எனும் நெய் வார்த்து அறிவு எனும் திரியிட்டு
எம் வாழ்வு சிறப்புறவே அணையாமல் காத்திட்டாய்

உன் வாழ்வு சிறந்திடவே உயர்பதியாம் நயினைவளர்
ஒப்பில்லாத் தாயவளைத் தேடித்தான் விரைந்தனையோ
தாயடியை அணைத்திடவே சேய்களெமை அகன்றனையோ

எக்கணமும் அணையாது எம்மவர்க்கு வழிகாட்டும்
அற்புதத் தாயவளின் பொன்மலரடியிணையில்
நன்றியுடன் நாமளிக்கும் இந்தமலர் காணிக்கை

- குடும்பத்தினர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



தோற்றம்: 03.08.1922

மறைவு: 07.08.2008

அமரர்

# சொர்ணம்மா தம்பிமுத்து

## திதி நிர்ணய வெண்பா

சப்தமி நன்னாளில் சங்கமிக்கும் வளர்பிறையில்
உத்தமியாம் சொர்ணம்மா உமையவளின் திருவருளை
பெற்றவளாய் சர்வதாரி ஆடித்திங்கள் அணைந்ததொரு
வியாழன் கூடிச் சென்ற திதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காரிய சித்தி மாலை

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் யானை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

சகல காரியங்களிலும் சித்தி பெற யானை முகனைத்துதித்து இந்தப் பாடலைப் பாடினால் ஒருவர் தான் எடுத்த காரியமும் எளிதில் நிறைவேறும்.

1. பந்தம் அகற்றும் அநந்த குணப்
பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து கரக்குமோ
சந்த மறை ஆகமங்கலைகள்
அனைத்தும் எவன்பால் தக வருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம்.

2. உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருளெவனவ்
வுலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளியாவன்?
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டுங் களைகண் எவன் அந்த
உலக முதலாங் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இடர்கள் முழுவதும் எவனருளால்
எரிவீ ழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றோம்

4. மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத்
திறத்தினானும் உயிர்க்கு நலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றிஅறிவிப் பான் ஏவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

5. செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப் படும்அப் பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன்யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில்
ஊட்டி விடுப்பான்எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும்
விமலன் யாவன் விறங்குவர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன்எண் குணன் எவன்அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்

7. மண்ணின் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன்நீர் இடைநான்காய்
நண்ணி அமர்வான்எவன் தீயின்
மூன்றாய் நவில்வான் எவன்வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான்எவன்வான் இடை ஒன்றாம்
அண்ணல் எவன் அக்கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம்.

8. பாச அறிவில் பசு அறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்?
பாச அறிவில் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன் யாவன்?
பாச அறிவும் பசு அறிவும்
பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக் கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம்.

இந்தக் காரியசித்தி மாலையைக் காலை, மதியம், மாலை மூன்று வேளைகளிலும் விநாயகரை எண்ணி எட்டுநாட்கள் பாடுபவர்கள் நினைத்த காரியம் சித்திக்கும். சதுர்த்தி விரத தினத்தன்று எட்டு முறை பாடினால் எட்டுச்சித்திகளும் கைகூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

கணபதி துணை

# பஞ்ச புராணம்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம் – (தனித் திருத்தாண்டகம்)

அருளியவர் – திருநாவுக்கரசு நாயனார்

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்போமல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்ல ராகில்
அங்கமெலாம் குறைந்தழுக தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே

## திருவாசகம் – வாழாப்பத்து

அருளியவர் – மாணிக்கவாச சுவாமிகள்

பாரொடு விண்ணாய் பரந்தவெம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேனார்க் கெடுத்துரைக்கேன்
ஆண்ட நீ யருளிலை யானால்
வார்கடலுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்றருள் புரியாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிசைப்பா - கங்கைகொண்ட சோளேச்சரம்
அருளியவர் - கருவூர்த்தேவர்

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரிய நீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றும் நான் மறக்கேன்
முன்னம்மா லறியா ஒருவனாம் இருவா
முக்கணா நாற்பெருந் தடந்தோள்
கன்னலே! தேனே! அமுதமே! கங்கை
கொண்டசோ ளேச்சரத்தானே

திருப்பல்லாண்டு - திருநெடுங்களம்
அருளியவர் - சேந்தனார்

மிண்டு மனத்தவர் போமின் கண்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடி குடி
யீசற் காட் செய்மின் குழாம் புகுந்
தண்டங் கடந்த பொருளள
வில்லதோ ரானந்த வெள்ளப்பொருள்
பண்டுமின்று மென்று முள்ள
பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே

திருப்புராணம் - திருநெல்வேலி
அருளியவர் - சேக்கிழார்

சென்றகாலத்தின் பழுதிலாத் திறமும்
இனி எதிர்கலத்தின் சிறப்பும்
இன்று எழுந்தருளப் பெற்ற பேறிதனால்
என்றைக்கும் திருவருளுடையோம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வெற்றி கொள் திருநீற்றொளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம் என்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்புகழ் - திருப்பரங்குன்றம்
அருளியவர் - அருணகிரிநாதர்

முத்தைத்தரு பத்தித்திருநகை
அத்திக்கிறை சத்திச்சரவண
முத்துக்கொருவித்துக்குரபரனெனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித்திருவரு
முப்பத்துமு வர்க்கத்தமரரு மடிபேணப்
பத்துத்தலை தத்தக்கணைதொடு
மொற்றைக் கிரி மற்றைப்பொழுதொரு
பட்டப்பகல் வட்டத்திகிரியி லிரவாக
பத்தற்கிர தத்தைக்கடவிய
பச்சைப்புயன் மெச்சித்தருபொருள்
பட்சத்துடன் ரட்சித்தருளுவ தொருநாளே
தித்தித்திசை யொக்கப்பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப்பயிரவி
திக்கொக்கா டிக்கழுகொடு கழுகாடத்
திக்குப்பரி வட்டகலைகொடு
சித்தரப்பவு ரிக்குத்திகுதிகு
திக்குத்திக் திக்குத்திரிகட மெனவோதும்
கொத்துப்பாறை கொட்டக்களமிசை
குக்குக்குகு குக்குக்குகுகுகு
குத்திப்புதை புக்குப்படியென முதுகூகை
கொட்புற்றெழு நட்பற்றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக்குலகிரி
குத்துப்பட வொற்றிப்பொரவல பெருமாளே

**வாழ்த்து**

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்

# திருமதி தம்பிமுத்து சொர்ணம்மா அவர்களின் வாழ்க்கை பயணத்தில்...

அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் எழுந்தருளி அருள்பாலிக்கும் உயர்பதியாம் நயினாதீவில் உயர்சைவ வேளாளர் குலத்தில் அமரர். வைத்திலிங்கம் குமாரசாமி செல்லம்மா தம்பதிகள் செய்த தவப்பயனால் அவர்கள் தம் தலைமகளாக 1922 ஆவணி 3ம் நாள் அன்னையவர் அவதரித்தார்.

அவர்தம் உடன்பிறப்புகளாக அமரர்களான திரு. பாலசுந்தரம் திரு .இராமச்சந்திரன் ஆகியோருடன் திரு. சாந்தலிங்கம் எனும் அன்புத்தம்பியர் இவரும் ஆசைத்தங்கையாக தனலட்சுமியும் வாய்த்தனர். இவர் தம் 12ம் வயதில் தாயார் உயிர்நீத்த போது தன் ஆருயிர் உறவுகட்கெல்லாம் அன்னையாகித் தன் தந்தையுடன் சேர்ந்து இன்னல் மிகப்பட்டுத் தன் சகோதரர்களை அன்புடன் அரவணைத்து வளர்த்தெடுத்தார்.உரிய பருவத்தில் தன் தாய்மாமன் மகனான திரு. வெ.க.த. தம்பிமுத்து அவர்களைக் கரம்பற்றி இல்லறம் எனும் நல்லறம் தனில் இணைந்தார்.

*"மனைத்தக்க மாண்புடையன் ஆகித் தற்கொண்டான்*
*வளத்தக்கான் வாழ்க்கைத் துணை"*

எனும் குறள்மொழிக்கொப்ப தன் கணவருடன் இல்வாழ்க்கைக்கு ஏற்ற பண்புகள் அனைத்தையும் உடையவராக வாழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெறுமவற்றுள் யாம் அறிவது இல்லை அறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற"

என்பதற்கிணங்க சச்சிதானந்தன், சிவானந்தன், அருளானந்தன், அம்பிகை, குகானந்தன், அம்பாலிகை, அமுதாம்பிகை எனும் நன்மக்களைப் பெற்று மகிழ்ந்தார்.

ஒருவர்க்குக் கிடைத்தற்கரிய அழிவில்லாத செல்வம் அவர் பெற்ற கல்வியே என்பதை உணர்ந்திருந்த இவர்களும் தம் மக்களுக்குச் சிறந்த கல்வியை அளிக்க எண்ணித் தாம் மெய்வருந்திக் கட்டிய மனையை விட்டு யாழ்நகர் வந்தனர். வந்த நாள் முதல் இறுதிநாள் வரை தன் சொந்த மண்ணிற்குச் செல்ல வேண்டுமென்ற சிந்தனையேயன்றி வெறொன்றுமில்லை அன்னையவர்க்கு.

சீரோடும் சிறப்போடும் தம்மக்களை வளர்த்தெடுத்து உரிய பருவமதில் அவர்கட்கு உகந்த வாழ்க்கைத் துணைகளையும் சேர்த்து வைத்தனர். அவர்கள் மணவாழ்க்கையில் நற்பேரன் பேர்த்திகளையும் பெற்று மகிழ்ந்தனர்.

"சிறப்பு ஈனும் செல்வம் பெறினும் பிறர்க்கு இன்னா
செய்யாமை மாசற்றார் கோள்"

என்பது போல் பெரும் செல்வத்தைப் பெறுபவராக இருந்தாலும் பிறருக்குத் தீங்கு செய்யாது மனத்தூய்மையுடன் அனைவரையும் ஆதரித்து நயினாதீவு மக்கள் அனைவராலும் போற்றப்படும் உத்தமியாகத் திகழ்ந்தார். எந்நேரமும் தன் கணவருக்குத் தொண்டு செய்வதையே தன் பணியாகக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறம் தனில் நல்லறமாய் சான்றோர் போற்றிய விருந்தோம்பல் தளைத்திடவே எந்நேரமும் தன் கணவருடன் கைகோர்த்து நின்றார். அலைகடல் தாண்டிவரும் அடியவர் பசி தீர்த்திடவே அமுதசுரபியில் அயராது பாடுபட்டார். தள்ளாத நிலையிலும் தன் கணவர் நினைவுடனே பகலிரவாய் "அப்பு! அப்பு!" என்று அழைத்த வண்ணமேயிருந்தார்.

"மண்ணில் பிறப்புண்டேல் அனைவருக்கும் ஓர்நாள் இறப்புண்டு" என்பது இயற்கைவிதி. அவ்விதிக்கு எமது அன்னையாரும் விதிவிலக்கின்றி இறையடிசேர்ந்து விட்டார். உலகத்தில் வாழவேண்டிய நெறியில் நின்று வாழ்ந்து வானுலகத்தில் தெய்வமாகிவிட்டார் எம் அன்னை.

சுமங்கலியாய்ச் சொர்ணம்மா தெய்வத்தாய் நாகம்மை
பதங்களையே பற்றிய நாள் பௌர்ணமியின்
முன்பிறையாம்-இதம்பெறவே
சப்தமி நன்னாளில் சங்கமித்தாள் அவளிணையை
உத்தமியாய் வாழ்வாள் உறைந்து....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை செம்மணத்தம்புலம்
# ஸ்ரீ வீரகத்திவிநாயகப் பெருமான்
# துதி

செஞ்சடையில் விஞ்சுகுளிர் கங்கை நனி பொங்குமெழில்
சங்கரனின் அங்க மதனில்
தங்கவொரு பங்குபெறு மங்கைதவ கொஞ்சிமகிழ்
கும்பமுக ஞானசுதனே
மிஞ்சுகவின் மஞ்ஞைஏறே வஞ்சி மிக அஞ்ச மா
தங்கமென வந்த பொருளே
மஞ்சுலவு கஞ்சமலர் மஞ்சரி இலங்கு பணை
புங்கமணி மார் பழகனே
வஞ்சமது தஞ்சமடை நெஞ்சமுடை வஞ்சர் நெறி
கொஞ்சமெனு மணுகாமலே
மஞ்சுமரவிந்த மலர் பாதமிணை தந்துவெனை
துங்கமுறவே ஆளுவாய்
அஞ்சீத மங்குல் பொழிலான்றவேர் நயினை
வரு செம்மணத்தம் புலத்தே
சேர்வுற்ற சிறீ வீரகத்தி விநாயகனெனச்
சிறப்புற்ற பிள்ளையாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் விருத்தம்

வாரண முகத்தன் ஞான
வடிவினன் வினைகள் நீக்கும்
காரணன் கண்கள் மூன்றும்
கரங்களோ ரைத்துங் கொண்ட
பூரணன் புவன மெல்லாம்
பொருந்திய வுந்தி வாய்ந்த
சீர்திரு புராண மேலோன்
திருவடி சென்னி வைப்பாம் (1)

மண்ணக மதனிற் போத்து
வாழ்வினை யழித்து மாய்ந்து
புண்ணக மிகுத்து பொய்மை
புக்கது வாழ்க்கை யென்று
கண்ணகம் திறந்து கொண்டேன்
காண்பது கனவாய்க் கண்டேன்
விண்ணகம் புகுந்து வாழ
வேண்டினேன் அருள்வாய் தேவா (2)

## வேறு

ஓங்காரத் துள்ளுருவா யொளிர்வாய் போற்றி
ஒதுகயா சுரணையடர்த் தொழித்தாய் போற்றி
ஆங்காரங் கொண்டவரை யழிப்பாய் போற்றி
அங்குசத்தால் ஆணவத்தை அடக்கி அன்பர்
பாங்காகத் தொழவருளும் பரனே போற்றி
பரித்தரிய காவிரியைப் பயந்தாய் போற்றி
வீங்குபகழ்ச் செம்மணத்தம் புலத்து மேவும்
வீரகத்தி விநாயகனே போற்றி போற்றி (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தொழிற்கு முன்னிங்கு மிறையே போற்றி
இருவினையா மிருளகற்று மொழியே போற்றி
முத்தொழிற்கு முதலான மூர்த்தி தந்த
முதற்பொருளே மூசிகவா கனவே போற்றி
சித்தமிசை குடிகொண்ட தேவே போற்றி
தீங்கரும்பி னின்சுவையே தேனே ஞானம்
வித்தைமிகு செம்மணத்தம் புலத்து மேவும்
வீரகத்தி விநாயகனே போற்றி போற்றி (4)

ஐங்கரனே யுன்பாதம் போற்றி போற்றி
அறுசமயத் தொன்றாக ஆனாய் போற்றி
பொங்கவரச் சிவனார்தம் புதல்வா போற்றி
புண்ணியர்க்கு நண்ணியருள் புரிவாய் போற்றி
துங்கமுறு பாரதநற் கதையை மேரு
தொட்டெழுத ஓர்மருப்புத் துணித்தாய் போற்றி
மங்கையொரு பங்கினனே யுலக மென்று
வலம்வந்த மாமுகனே போற்றி போற்றி (5)

## விநாயகர் வெண்பா

செம்மணத் தம்புலத்துச் சித்தி விநாயகனை
எம்மனத்தி லென்று மிருத்தினால் – தம்வலிசெட்(டு)
ஓடி வினைமறையும் ஒண்ஞானம் செல்வமெலாந்
தேடிவரும் கோடிநன்மை தேர் (1)

பாடப் பணித்தான் பரமன் திருப்புகழை
ஆடப்பணிப்ப தவன்செயலே – நீடுவினை
போக்குமரும் போதகத்தைப் போற்றிப் புகழ்த்திடுவோம்
நாக்கிருக்கும் போதுவந்து நாம் (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியொடு காதலுடற் கட்டழகு பட்டழுந்தி
வல்லிரய மானபின்னோ வாழ்த்துவீர் – நல்லறிவீர்
வினைதீர் விநாயகமுன் வீழ்த்திறைஞ்சிப் பாக்கள்
புனையாதோ பொல்லாத வாய் (3)

வாயார வாழ்த்தி மனதாற் தியானிக்கச்
சாயாத வல்வினையும் சாயுமே – ஓயாது
கெண்டா மணியொலிக்கும் கேழில் விநாயகன்றாள்
மன்றாடி வாழ்வீரிம் மண் (4)

மண்ணென்றும் பெண்ணென்றும் மாய்ந்து மனதொடிந்து
புண்ணின்ற நெஞ்சே புகலக்கேள் – எண்ணுகிலா
வெம்மனத்தார் காணாத வீநரகத்தி நாயகன்வாழ்
செம்மணத் தம்புலமே சேர் (5)

அக்கரவம் பூண்டோ னடியார் இடர்கடியத்
தக்கவனென் றன்று தருமைந்தன் – இக்குமொழி
வல்லபைதன் நாயகனை வாழ்த்தி வழிபட்டால்
அல்லற் பிறவி யறும். (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாக பூஷணி அம்மன்
# தியான சுலோகம்

நயினைத்வீப நிவாசனீம் நதிகிருதாம்
ஆனந்த சந்தாயினீம் பக்தாரிஷ்ட நிவாரிணீம்
விதி சுதையிர் நாகை புரா பூசிதாம்
நாகானாம் ஜனநீதி லோக வதனை
கியாதாம் சுபாம் சாஸ்வதாம்
நௌ மித்துவாம் பரதேவதாம்
மம மனோ பீஷ்டார்த்த சித்திப்ரதாம்
அன்யோன்ய கர்த்தா கிருதி மகில
ஜகன் மாதரம் நாகபூஜ்யாம்
ஆலிங்காதி பிரிவிருத்த ஸ்தன பரநிமிதா
துங்கலிங்கே நிஷண்ணாம்
நயினைத் துவீயே நிவாகாம்
நகஜன சுகதாம்
சர்வ சம்பத் பிரதார்த்ரீம்
வந்தே கைலாசாநாதபிரியதம
கிரகனீம் வாசவாத்தியேஸ்து வந்தியாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாக பூசணியம்மை நவராத்திரி தோத்திரம்

க. இராமச்சந்திரா

எனக் கென்றோர் தனிவரம் யான் கேட்கவில்லை
என் இனத்தார் வாழவென்றே கருதவில்லை
உனக்கெல்லா உயிர்களுமே சொந்தமென்றே
உண்மையை யான் ஒரு போதும் மறந்ததில்லை
சினங்கொண்டு தீங்கிழைக்குந் தீயர் தாமும்
சீலமுற வேண்டுமென்றே வேண்டுகின்றேன்
தனக்கொருவ ரொப்பில்லாத் தாயே! இந்தத்
தாரணியில் சாந்தியைத் தருவாய் நீயே

முந்நாளில் முருகனுக்குச் சக்தியீந்தாய்
முனிவர்க்குந் தேவர்கட்கும் முதன்மையீந்தாய்
பிந்நாளில் சங்கரர்க்கும் பெருமையீந்தாய்
பேரின்பக் காதல் வளம் பெருக வைத்தாய்
இந்நாளில் இராமகிருஷ்ணர் ரமணர் போன்ற
இணையற்ற ஞானியரை உலக்கு கீந்தாய்
இந்நாட்டைச் சொந்தமென்றும் இரு இனத்தார்
இணங்கி வாழ்ந்திடச் செய்தல் அரிதோ அன்றாய்?

அருளுவாய் அனைத்துயிர்க்கும் அன்னையாகி
ஐந்தொழில்கள் புரி ஆதி சக்தியேநின்
கருணையின்றி கணக்கில்லாக் கஷ்டமுற்றுக்
கதறிநிற்கும் உணிர்களுளத் தின்று சூழ்ந்த
இருளகல வழியேதும் இல்லையென்ற
ஈடேற்ற உறுதியுடன் இந்த ஏழை
உருகி நின்றுன் சந்நிதியில் கேட்டயாவும்
உவந்தளிப்பதுன் கடனாம் ஒப்பில் தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமிகள் பாடிய

# நயினை நாகேஸ்வரி தோத்திரமாலை

## காப்பு

ஐம்புலனோட டாணவத்தை அறமிதித்து
அன்பர்தனக் கின்பந் தந்து
உம்பருல கரசியற்கும் திருமாற்கும்
வரமருளே ரம்பா வென்று
வம்பலையக் கயமுகனார் சிரமரிந்து
அமரர்குல வாழ்வாய் வந்த
அம்பலவா ணானந்த விநாயகன்தான்
பரவிவினை யகற்றி வாழ்வாம்.

## நூல்

கற்பகக் கன்றைக் கடம்பனைத்
தந்த கனகவரை
அற்புத மோன அருளாழி
ஞான அமிர்த வல்லி
தற்பரை வாமம் தழைத்தே
சரம சராதி தரு
நற்பதி யேஎனைப் பெற்ற
சதானந்த நாகம்மையே. 1

பெற்றதாய் பார்க்கப் பிள்ளையான் வருந்திப்
பிறப்பெனும் சாகரத்தாழ
நற்றவ மில்லா என்னை நீ விட்டால்
நியாயமோ நல்லுரையாகச்
செற்றவக் கரையி லேறியான் உய்யத்
துணை உனை யன்றியோ ருளர் சொல்
கற்றவர்க் கினியாய் நயினையம் பதிவாழ்
கண்மணி நாகபூசணியே. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகை அமலை அரியவர்கள் கெட்டா
ஆரணி பூரணி கௌரி
நம்பினோர்க் கின்பம் தருமனோன் மணியே
நற்றவரோ டுறவாக
வெம்பி வாடததுன் சேயெனைச் சேர்ந்து
விடுவதுன் கடன்வினை நீக்கித்
தம்பிரான் மோன சற்குரு போகம்
சேர்த்தருள் நாகபூசணியே. 3

தந்தருள் ஞான சாதனம் சத்தியம்
தவறிலா நெறிபொறை அறிவு
பந்தமால் எய்யாப்பக்தி பேரன்பு
பகலிரவுன் அரவிந்த
அந்தமே யில்லா அடியிணை மாறா
தருள்புணர்ந் தோங்கு நற்றியான
சிந்தையாய் மோன தேசிகன் திருத்தாள்
தந்தருள் நாகபூசணியே. 4

சேர்த்தருள் அன்னே தீவினை கழியச்
ஜெனனமு மரணமு மொழியக்
காத்தருள் என்னை நின்கையில் தந்தேன்
கருணையே ஒளிவிழி பரப்பிப்
பார்த்தருள் ஈன்ற பகவதி ஆயி
பங்கயத் தாள்முடி சூடி
நீந்தருள் பாவ நிலைகெட மோன
நிலையருள் நாகபூசணியே. 5.

பாவமே விளையும் பாழ்வினை ஏதும்
பற்றிடா திருக்க நின்பாலே
தாகமே மறவா தோர்நிலை பக்தி
தண்ணளி வள மருள் ஞான
யோகமே உதவி உலகெலா மீன்ற
உத்தம ருக்குற வாகிப்
பாகமே நீங்காப் பரபரா னந்த
பதமருள் நாகபூசணியே. 6.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றவர்க் கினியாய் நயினையம் பதிவாழ்
காரணி நாரணன் தங்காய்
மற்றவ ரறியா மரகத வரையின்
வாமமே வளர்பசுங் கொடியே
நற்றவ நிலையின் சேயெனை இருத்தி
நாதநா தாந்தமும் காட்டி
முற்றுமாய் நிறைந்த பூரணா னந்த
முத்திதா நாகபூசணியே. 7.

முத்தியாங் கரையைப் பற்றியே யுய்யும்
முன்னதாய் முரணலை மோதி
வற்றிடா மாய வாரிதி வித்தி
மயங்கி யா னாழ்ந்திடா வாறு
சத்தியாய்ச் சிவமாய்த் தனிப்பரந் தாளே
தானுமாய் நின்ற தற்பரையே
சித்ததெலாம் வல்லாய் சேயெனைக் காத்தாள்
திருமணி நாகபூசணியே. 8.

காத்தெனையாளும் கனகமா வரையே
கமலையும் காயையும் மருங்கே
நீந்தவர் அமரர் கருடகெந் திருவத்
நின்பணி புரிபவர் அன்னே
வேர்த்தவ ராய் நின் றுயிர்த்திர ளாட்டு
வினையெல்லாம் பற்றி நீறாகப்
பார்த்தருள் விழியைப் பரப்புதி யீன்ற
பார்ப்பதி நாகபூசணியே. 9.

பார்ப்பதி யேக பதியரசன் பங்கி
பங்கயச் சிருட்டிபல் லுயிர்க்கும்
கார்ப்பதி பதியாய்க் கதிதரு கங்கா
நங்கையே கருணைமா கடலே
சீர்ப்பதி யாகித் தெளிவுற ஈன்ற
சேயென உணர்த்தி ஈத்து என்றே
பார்த்துள ராதாண்ட ருள்புரி ஞான
அம்பிகை நாகபூசணியே. 10.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினை வரகவி நாகமணிப்புலவர் பாடிய

# நயினை மான்மியம்

## சரஸ்வதி துதி

மருப்பாளை மலர்க்கமலத் துறைவாளை
வழிபடுவார் மாசு தீர்க்கும்
விருப்பாளை யுடையணிமெய் வெளுப்பாளைக்
கொடுத்தபொருள் விட்டு நீங்கத்
திருப்பாளை யெவர்களுந்தித் திப்பாளை
நான்முகத்தோன் செய்ய நாம்
திருப்பாளை யெனைக்கரை சேர்த்திடுவாளை
என்னாளு மேத்து கிற்பாம்.

## தோத்திரம்

உள்ளத் துணர்வார்க் குணர்வாகி
யுறைவாய் நின்சீ றடிபோற்றி
விள்ளற் கரிதாம் சக்திகளாய்
விரிந்தாய் நின்சீ றடிபோற்றி
அள்ளற் பிறவிக் கடல்கபடப்பார்க்
கருள்வாய் நின்சீ றடிபோற்றி
எள்ளிற் றயில மெனவுலகோடு
இருந்தாய் நின்சீ றடிபோற்றி
தாயே யானா யுன் சரணந்
தமரெ யானா யுன் சரணஞ்
சேயே யானா யுன்சரணந்
திருவே யானா யுன்சரணங்
காயே யானா யுன்சரணங்
கனியே யானாயுன் சரணந்
நாயேற் கன்று கலைமகள்போ
நயந்தே யளித்தா யுன் சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினைதீவு நாகபூஷணி அம்பாள்
# திரு ஊஞ்சல் பாடல்கள்

காப்பு

சீர்பூத்த தென்னிலங்கை தன்னில் மேவும்
திரைபூத்த கடனயினை நகரில் வாழும்
ஏர்பூத்த நாகேசு வரியைப் போற்றி
இசைபூத்த செந்தமிழா லூஞ்சல் பாட
ஆர்பூத்த சடைமௌலி யரனா ரீன்ற
அருள்பூத்த வறிவிச்சை தொழிலென் றோதும்
கார்பூத்த மும்மைமத களிற்றின் பாதம்
கரம்பூத்த மலர்கொண்டே கருதி வாழலாம்.

பலனோங்கு செம்பவளங் கால்க ளாக
பகர்வைர ரத்தினமே விட்ட மாக
குலனோங்கு வெண்டரளங் கயிற தாக
கூறரிய மாணிக்கம் பலகை யாக
வலனோங்கு மூஞ்சன்மிசை யினிது வைகி
மலர்மகளுங் கலைமகளும் வடந்தொட் டாட்ட
நலனோங்கு திருநயினை நகரில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல் 1

உவகையொடு மலரயன்மால் கரங்கள் கூப்ப
ஓசைமணி வாயிலட்ட பாலர் காப்ப
தவமறையோர் தூபமொடு தீபங் காட்ட
தாழ்ந்துகண் நாதர்புகழ் மாலை சூட்ட
அவரிடப துவசமகல் வானந் தூர்ப்ப
அனந்தன்முத லுரகர்செய செயவென் றார்ப்ப
நவையறுசீர் நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல் 2

கொம்பினோடு துடிமுரசு முழவ மோங்க
குடைகளுட னாலவட்டம் குழுமி யோங்க
தும்புருநா ரதர்வேத கீதம் பாட
தொண்டரக மகிழ்ந்துசுக வாழ்வு கூட
வம்பவிழு மலர்மாரி யமரர் பெய்ய
வரமுனிவ ரடிபரவி யாசி செய்ய
நம்புமடி யவர்க்கருளி நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல் 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னநடை யயிராணி கவிகை தாங்க
அயிலைநிகர் விழியரம்பை களாசி யேந்த
வன்னமுலை யுருவசிவெண் கவரி வீச
மணிகொள்கிரு தாசிகமண் டலங்கைக் கொள்ள
மின்னிடைமே னகைவெளிலை பாகு நல்க
வியந்துதிலோத் தமைவிகித நடனஞ் செய்ய
நன்னயஞ்சேர் நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 4

மதிமுகமா லினிபனிநீர் வாசந் தூவ
மயிலைநிகர் சுகேசைமல ரடிக ணீவ
விதிமுறைமங் கலைமுதலோ ராலஞ் சுற்ற
வேதியர்தம் மகளிர்சுப வசனஞ் சாற்ற
அதிவினய மொடுசுமனை யாடி காட்ட
அன்பினநிந் திதைசுகந்த வருக்க நீட்ட
நதியுலவு நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 5

கோலமுறு வைரமணிச் சுட்டி யாட
குலவுமெழின் மாணிக்கத் தோடு மாட
வாலியமுத் தாரமொடு மதாணி யாட
வயங்குவளை தொடியுடனங் கதமு மாட
சாலவொளிர் பாடகமுஞ் சிலம்பு மாட
தண்டையொடு பாதசரந் தயங்கி யாட
ஞாலமுக மெனவிளக்கு நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 6

முந்துதவ மாதர்துதி கூறி யாட
முகமனொடு புனன்மாதர் முன்னின் றாட
வந்தனையோ டுரகமட மாத ராட
வரையிலுறை மாதரடி வணங்கி யாட
கந்தருவ மாதரிசை பாடி யாட
கருதரிய புவிமாதர் களிகொண் டாட
நந்துதவழ் கழனிசெறி நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரணியே யம்பிகையே யாடீ ரூஞ்சல்
அந்தரியே சௌந்தரியே யாடீ ரூஞ்சல்
பூரணியே புங்கவியே யாடீ ரூஞ்சல்
புராதனியே புராந்தகியே யாடீ ரூஞ்சல்
காரணியே காருணியே யாடீ ரூஞ்சல்
கன்னிகையே கண்மணியே யாடீ ரூஞ்சல்
நாரணியே நாயகியே யாடீ ரூஞ்சல்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 8

பனிவரையில் வருமுமையே பரையே போற்றி
பகருமற மெண்ணான்கும் வளர்த்தாய் போற்றி
தனிமுதலாம் பரமனிடத் தவளே போற்றி
தணப்பில்பல சக்திவடி வானாய் போற்றி
இனிமைமிகு மாரமுதே கனியே போற்றி
எவ்வுயிர்க்குந் தாயாகி இருந்தாய் போற்றி
நனிகுலவு நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 9

ஆவாழி யந்தணரோ டரசர் வாழி
அரியதவ மகநிகமா கமமும் வாழி
தாவில்குல மங்கையர்கள் கற்பும் வாழி
சைவசம யமுமறமும் தழைத்து வாழி
பாவார்வெண் ணீறுபஞ்சாட் சரமும் வாழி
பாடியவூஞ் சற்றமிழும் பாரில் வாழி
நாவலர்கள் புகழ்நயினை நகரும் வாழி
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 10

- *ஸ்ரீலஸ்ரீ ம. அரமசிங்கப் புலவர்*

## இக்காலத்தில் பாடப்படும் பாடல்

சீர்வாழி சிவ சமயம் வாழி வாழி
தேவாதி தேவுமெல்லாத் தேவும் வாழி
பார்வாழி மதிதொறுமும் மாரி வாழி
பசுக்குலம்வே தியர்தருமம் பலவும் வாழி
நீர்வாழி நயினைநக ருறைவோர் வாழி
நீடாயு என்னசொர்ணம் நிறைந்து வாழி
ஏர்வாழி இராமசந்திர மகிபன் வாழி
இனம்வாழி இவ்வூஞ்சல் வாழி மாதோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு
# நாகேஸ்வரியம்மை பதிகம்

சந்திரபூ ரணரத்ன தங்ககோ டக்கிரிட
தண்ணின்ற தவழ வட்டத்
தனபதியை நிகர்மன்ன ரடிதொழச் சதுரங்க
தானைவெள் ளங்கள் சூழச்
சிந்துரப் பகைமைபிடர் பீடிகை யிருந்தெண்டி
சாமுகமு மேயி றைஞ்சத்
தேவேந்திர சுகமுற் றிருப்பவர்க ளுன்பாத
சேவைபுரி பவர்க ளன்றோ
மந்திர காரண ரூபரூ பாதிசிவ
மகமாயி புவன நேசி
வாலசுந் தரிகௌரி நயினைமாநகர் க்கண்
வைகியருள் செய்யு மொருதாய்
நந்துறு கரன்பிரம னங்கமணி கங்களொடு
நஞ்சமணி பிறங்கு களமே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே. 1

சோடுற்ற நவரத்ன கும்பியும் மேலிட்ட
தொங்கலும் அகில ளாவிச்
சொருகிட்ட கொண்டையுஞ் சுட்டியும் மலர்க்கையால்
தொட்டிட்ட சிந்தூ ரமும்
தோடுற்ற கொந்தழக மரகதப் கொப்புமார்
துணைவிழியி லெழுது மையும்
துகளற்ற வெண்டரள முருகுநற் பவளவாய்த்
துவருமொளிர் நளின முகமும்
தேடுற்ற செங்கமல பொற்பதமு மழகான
திருவுருவு மறிவி னாலே
தெரிசிக்க வருடந்து நீடாயு ளும்பெருஞ்
செல்வ முந்தர வேண்டுநீ
நாடுற்ற பலவளமு முறையுமெழில் நயினா
நகர்க்கண் மருவுங் கௌரியே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரணத் துபநிடத வக்கரத் தொனியாகி
யாகாய வட்ட மாகி
அறுகோண மிருகோண முக்கோண நாற்கோண
மாகிநிற மைந்து மாகிக்
காரணத் துருவாகி யருவாகி யாவுமாய்க்
காக்குமுன் பெருமை யெளிதோ
கருணைப்பிர வாகமா மானந்த வெள்ளங்
கசிந்தூ றுபே ராழியே
ஏரணைத் திடுமருத வேலிசூழ் நயினா
வெனும்பதி சிறந்து மேவும்
யாமள சௌந்தரீ கோமள சொரூபியே
ராசபர மேசு வரியே
நாரணற்கொரு சகோதரி யென்ன வந்தருளும்
நாக பூஷணீ நாரணீஇ
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே. 3

சக்திபை ரவிகௌரி அக்கணியு முக்கணீ
சடாதரி சடாட்ச ரத்தி
சங்கரி சுமங்கலி மதங்கியரு ளம்பிகை
சவுந்தரி சண்ட சண்டி
உத்தமி பராபரை மனோன்மணி சிவானந்தி
யுமையிமைய முதவு மங்கை
உலகுதவு மன்னையா மளைபொன்னினம்பலவ
ருடனிட மகிழ்ந்து மேவும்
நித்தியகல் யாணிசாம் பவிபுவன கௌமாரி
நிமலமக மாயி யென்றே
நெஞ்சில்நித முந்நினைவு தந்துனை வணங்கவரு
நின்னடி யவர்க் கருளுவாய்
நத்துலவு சுத்தமணி யெய்ந்துநயி னாநகரில்
நாளுமுறை யாழின் மொழியே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகமது கூனித் தளர்ந்துரோ மம்வெளுத்
தைம்புல னொடுங்கி மேலாம்
அறிவழிந் தைமே லெழுந்ததீ தத்தினுயி
ரணுகுமக் காலை தனிலே
வேகவெங் கடமைபிடர் நெளியவரு ஞமனெற்கு
விடுகயிறு முடுகி யடுமுன்
வினையேனை யஞ்சலென் றுனதுநா யகருடன்
வெள்ளை விடைமீ தேறியே
பாகமுற வந்துநின் றடிமைகொண் டெனையும்நீ
பாதுகாத் தருள வேண்டும்
பைங்குலைத் தெங்கிளஞ் சோலைசெறி நயினைநகர்
பண்பு கொண்டுறை செல்வியே
நாகமடர் தாருவன மேவுமுனி வோர்களுறை
நாடிவரு கோப விடமார்
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே. 5

மாற்றிற் சிறந்தபொற் குவையென்ன வளர்சாலி
வயலிற் கிடந்த நத்தம்
மடையிற் றவழ்ந்தேறி மனையிற் புகுந்துழவர்
மனைமுன்றி லீனு முத்தை
ஆற்றிற் சிறந்திடத் தண்டுலங் களையுநீர்
அள்ளிப் புறத்தின் மேவி
அருகுற்ற சோலையினு மிகுதுற்ற வாவியினு
மரவிந்த வோடைக ளினும்
காற்றிற் சிறந்துலவு கால்கொண் டுலாவக்
கயற்கண்ணி வந்து மோதக்
கமுகினிற் றெங்கினிற் கதலியில் வருக்கையிற்
கனியு மடலுஞ் சிதறியே
நாற்றிக்கு மேகமழு மதுமாரி சொரியுநயி
னாநகரி னண்ணு முமையே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்கய மருப்பென நிமிர்ந்தடி பருத்திறுகி
மணிவா ரறுத்து விம்மி
வட்டமிட் டெழுகும்ப முலைமுகங் காட்டியிரு
மகரவிழி வலை வீசியே
மின்கய மதன்சாலுள் விட்டடைத் துளபெரு
வெறுக்கையைப் பற்றி யேற்கும்
வேசியர் தனக்கடிமை செய்விக்கு மென்னைமுன்
வினைநூறி யருளு தவுவாய்
பொங்கிடு நெடுந்திரைப் புணரிநாற் றிசையும்
பொருந்தநடு மேவி யுலகிற்
புகழ்பெருகு நயினைமா நகரினி லிருந்துமிகு
புதுமைதரு புனித தாயே
நன்கிய விளம்பிறையொ டொன்றைவேண் டிச்சடில
நண்புகொண் டிடுநஞ் சுமார்
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே. 7

சம்புசிவ சங்கர திகம்பர நடம்புரி
சமர்த்தாதி யாதி யாய
தற்பர மதிச்சடில முக்குண சதுர்ப்புய
சதாசிவ சிவா சிவாய
எம்பரம வென்றுபதி னெண்கணமு மிம்பரு
மிறைஞ்சிவரு கணவ ருடனே
இங்கித முடன்கயிலை தங்கியுறை யம்பிகையி
னின்புக ழியம்ப வெளிதோ
அம்புமய மடந்தைய ரரம்பையர் வயந்தழுவு
மரியநவ சக்தி களெலா
மன்பினொடு தொண்டுசெயு முந்தனர விந்தபத
மந்தநிழல் தந்த ருளுவாய்
நம்பிவரு தொண்டர்பெற மங்கல மிகுந்தநயி
னாநகரி னண்ணு முமையே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தான சொசியச் சினக்கும் கடாதடக்
கைமலை முகத் தவுணனைக்
கால்கொண் டுதைத்துவன் றோலுரித் துப்போர்த்த
காதலனை மன் றாடியே
முந்தாத ரத்தினொடு மிருநாழி நெற்பெற்று
முடிவிலா துயிர்க ளுய்ய
முப்பத் திரண்டறந் தன்னையுத வியவன்னை
மூவுலகு நீயா கையால்
சிந்தா குலங்கொண்டு திரியநான் முறையோ
தினந்தினம் சொல வேண்டுமோ
திருவுள மிரங்கியே சற்றுன் கடைக்கண்
திருப்பினால் வெகு பாரமோ
நந்தாத வரமுதவு நங்கையே நயினா
நகர்க்கண் மருவும் கௌரியே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே. 9

சீர்தங்கு தண்சுனை யெனச்சேர் மனத்திற்
றிளைத்துக் குழைத் தரும்பும்
செஞ்சரண கஞ்சமலர் தஞ்சமெனு மென்புன்
சிரக்கஞ்ச மீதில் வைத்தே
ஏர்தங்கு நல்லருட் பேறுதவி நெஞ்சத்
திடுக்கண் தவிர்த்து அஞ்சேல்
என்றுமுன் நின்றெமக் கீடேற்ற முதவுவார்
யாருன்னை யின்றி யம்மா
பேர்தங்கு மகிலாண்டடுக்குமதி லூறுபொருட்
பிரிவுஞ் சராசர மெனும்
பேருயிர்க் ளுந்தந்து பாதுகாத் தருளுமுன்
பெருமையாம் பாட வெளிதோ
நார்தங்கு சற்குணத் தொண்டருய வென்றுநயி
னாநகரி னண்ணு முமையே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அபிராமி அந்தாதி

## காப்பு

தார்அமர் கொன்றையும் சண்பக
மாலையும் சாத்தும்தில்லை
ஊரர்தம் பாகத்து உமைமைந்தனே!
உலகுஏழும் பெற்ற
சீர்அபிராமி அந்தாதி எப்போதும்
என் சிந்தையுள்ளே
கார்அமர் மேனிக் கணபதியே!
நிற்கக் கட்டுரையே.

## நூல்

உதிக்கின்ற செங்கதிர், உச்சித்
திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம்
போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக்
குங்குமத் தோயம்என்ன
விதிக்கின்ற மேனி அபிராமி
என்தன் விழுத்துணையே. 1

துணையும், தொழுந்தெய்வமும், பெற்ற
தாயும், சுருதிகளின்
பணையும், கொழுந்தும், பதிகொண்ட
வேரும், பனிமலர்ப்பூங்
கணையும், கருப்புச்சிலையும், மென்பாசாங்
குசமும், கையில்
அணையும் திரிபுர சுந்தரி
ஆவது அறிந்தனமே. 2

அறிந்தேன் எவரும் அறியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறையை, அறிந்துகொண்டு
செறிந்தேன், உனது திருவடிக்கே:
திருவே! வெருவிப்
பிறிந்தேன், நின்அன்பர் பெருமை
எண்ணாத கரும நெஞ்சால்
மறிந்தே விழும் நரகுக்குஉற
வாய மனிதரையே! 3

மனிதரும், தேவரும், மாயா
முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே!
கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும், பாம்பும்,
பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும்என் புந்தி
எந்நாளும் பொருந்துகவே. 4

பொருந்திய முப்புரை, செப்புரை
செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல்
மனோன்மணி! வார்சடையோன்
அருந்திய நஞ்சு அமுதாக்கிய
அம்பிகை! அம்புயம்மேல்
திருந்திய சுந்தரி, அந்தரி
பாதம்என் சென்னியதே! 5

சென்னியது உன்பொற் திருவடித்
தாமரை; சிந்தையுள்ளே
மன்னியது உன்திரு மந்திரம்;
சிந்துர வண்ணப்பெண்ணே!
முன்னிய நின் அடியாருடன்
கூடி முறைமுறையே
பன்னியது, என்றும் உந்தன்
பரமஆகம பத்ததியே! 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ததியுறு மத்தில் சுழலும்என்
ஆவி, தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருதுகண்
டாய்! கமலாலயனும்,
மதியுறு வேணி மகிழ்நனும்
மாலும், வணங்கிஎன்றும்
துதியுறு சேவடியாய்! சிந்துர
ஆனன சுந்தரியே! 7

சுந்தரி எந்தை துணைவி, என்
பாசத் தொடரையெல்லாம்
வந்தரி, சிந்துர வண்ணத்தினாள்,
மகிடன் தலைமேல்
அந்தரி, நீலி, அழியாத
கன்னிகை, ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத்தாள் மலர்த்
தாள்என் கருத்தனவே. 8

கருத்தன எந்தைதன், கண்ணன,
வண்ணக் கனகவெற்பில்
பெருத்தன, பால்அழும் பிள்ளைக்கு
நல்கின, பேர்அருள்கூர்
திருத்தன பாரமும்; ஆரமும்,
செங்கைச் சிலையும், அம்பும்
முருத்துஅன மூரலும், நீயும்அம்மே!
வந்துஎன் முன்நிற்கவே. 9

நின்றும் இருந்தும் கிடந்தும்
நடந்தும் நினைப்பதுஉன்னை;
என்றும் வணங்குவது உன்மலர்த்
தாள்; எழு தாமறையின்
ஒன்றும் அரும்பொருளே! அருளே!
உமையே! இமயத்து
அன்றும் பிறந்தவளே! அழியா
முத்தி ஆனந்தமே! 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தமாய், என் அறிவாய்,
நிறைந்த அமுதமுமாய்,
வான் அந்தமான வடிவுடையாள்,
மறை நான்கினுக்கும்
தான்அந்த மான சரணார
விந்தத் தவளநிறக்
கானம்தம் ஆடரங்காம் எம்பிரான்
முடிக் கண்ணியதே. 11

கண்ணியது உன்புகழ்; கற்பதுஉன்
நாமம்; கசிந்துபத்தி
பண்ணியது உன்இரு பாதாம்
புயத்தில்; பகல்இரவா
நண்ணியது உன்னை நயந்தோர்
அவையத்து; நான் முன்செய்த
புண்ணியம் ஏது? என் அம்மே!புவி
ஏழையும் பூத்தவளே! 12

பூத்தவளே புவனம் பதி
னான்கையும், பூத்தவண்ணம்
காத்தவளே! பின் கரந்தவளே!
கறைக் கண்டனுக்கு
மூத்தவளே! என்றும் மூவா
முகுந்தற்கு இளையவளே!
மாத்தவளே! உன்னை அன்றி,
மற்றுஓர்தெய்வம் வந்திப்பதே? 13

வந்திப்பவர் உன்னை, வானவர்
தானவர் ஆனவர்கள்;
சிந்திப்பவர், நல் திசைமுகர்
நாரணர்; சிந்தையுள்ளே
பந்திப்பவர், அழியாப் பரமானந்தர்;
பாரில் உன்னைச்
சந்திப்ப வர்க்(கு) எளிதாம்
எம்பிராட்டி! நின் தண்ணளியே. 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணளிக்கு என்று முன்னேபல
கோடி தவங்கள் செய்வார்,
மண்அளிக்கும் செல்வமோ பெறு
வார்? மதி வானவர்தம்
விண்அளிக்கும் செல்வமும், அழியா
முத்தி வீடும்அன்றோ?
பண் அளிக்கும் சொற் பரிமள
யாமளைப் பைங்கிளியே! 15

கிளியே! கிளைஞர் மனத்தே கிடந்து
கிளர்ந்து ஒளிரும்
ஒளியே! ஒளிரும் ஒளிக்குஇடமே!
எண்ணில் ஒன்றும் இல்லா
வெளியே! வெளிமுதற் பூதங்களாகி
விரிந்த அம்மே!
அளியேன் அறிவு அளவிற்குஅள
வானது அதிசயமே! 16

அதிசய மான வடிவுடை
யாள்! அரவிந்தமெல்லாம்
துதிசயஆனன சுந்தர வல்லி!
துணை இரதி
பதிசய மானது அபசய
மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாக அன்றோ, வாம
பாகத்தை வவ்வியதே? 17

வவ்விய பாகத்து இறைவரும்
நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும், உங்கள் திருமணக்
கோலமும், சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்துஎன்னை ஆண்ட
பொற்பாதமும் ஆகிவந்து,
வெவ்விய காலன்என் மேல்வரும்
போது, வெளிநிற்கவே! 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநின்ற நின் திருமேனியைப்
பார்த்து, என் விழியும்நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்டது
இல்லை; கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்றது
என்ன திருவுளமோ!
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும்
மேவி உறைபவளே! 19

உறைகின்ற நின்திருக் கோயில், நின்
கேள்வர் ஒருபக்கமோ?
அறைகின்ற நான்மறையின் அடியோ?
முடியோ? அமுதம்
நிறைகின்ற வெண்திங்களோ?
கஞ்சமோ? என்தன் நெஞ்சகமோ?
மறைகின்ற வாரிதி யோ? பூர
ணாசல மங்கலையே! 20

மங்கலை, செங்கல சம்முலை
யாள், மலையாள், வருணச்
சங்குஅலை செங்கைச் சகல
கலாமயில், தாவுகங்கை
பொங்கு அலை தங்கும் புரிசடையோன்
புடையாள், உடையாள்
பிங்கலை, நீலி, செய்யாள், வெளியாள்
பசும்பெண் கொடியே. 21

கொடியே இளவஞ்சிக் கொம்பே
எனக்குவம்பே பழுத்த
படியே! மறையின் பரிமளமே!
பனிமால் இமயப்
பிடியே! பிரமன் முதலாய
தேவரைப் பெற்றஅம்மே!
அடியேன் இறந்து இங்கு இனிப்பிறவாமல்
வந்து ஆண்டு கொள்ளே! 22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளேன் மனத்தில்நின் கோலம்அல்
லாது, அன்பர் கூட்டம்
தன்னை விள்ளேன்; பரசமயம்
விரும்பேன்; வியன்மூவுலக்கு
உள்ளே அனைத்தினுக்கும் புறம்பே!
உள்ளத்தே விளைந்த
கள்ளே களிக்கும் களியே
அளியஎன் கண்மணியே! 23

மணியே! மணியின் ஒளியே!
ஒளிரும் மணிபுனைந்த
அணியே! அணியும் அணிக்கு அழகே!
அணு காதவர்க்குப்
பிணியே! பிணிக்கு மருந்தே!
அமரர் பெருவிருந்தே!
பணியேன் ஒருவரை, நின்பத்ம
பாதம் பணிந்தபின்னே! 24

பின்னே திரிந்துஉன் அடியாரைப்
பேணிப் பிறப்புஅறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண்டேன்;
முதல் மூவருக்கும்
அன்னே! உலகுக்கு அபிராமி
என்னும் அருமருந்தே!
என்னே? இனிஉன்னை யான்மற
வாமல்நின்று ஏத்துவனே! 25

ஏத்தும் அடியவர் ஈரேழு
உலகினையும் படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவராம்;
கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழல்அணங் கே! மணம்
நாறும்நின் தாள்இணைக்(கு)என்
நாத்தங்கு புன்மொழி ஏறிய
வாறு நகையுடைத்தே! 26



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைத்தனை வஞ்சப் பிறவியை;
உள்ளம் உருகும்அன்பு
படைத்தனை; பத்ம பதயுகம்
சூடும் பணிஎனக்கே
அடைத்தனை; நெஞ்சத்து அழுக்கை
எல்லாம்நின் அருட்புனலால்
துடைத்தனை; சுந்தரி! நின்அருள்
ஏதென்று சொல்லுவதே! 27

சொல்லும் பொருளும் என, நட
மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே!
நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும்அவர்க்கே
அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவ
லோகமும் சித்திக்குமே. 28

சித்தியும், சித்தி தரும்தெய்வம்
ஆகித் திகழும்பரா
சத்தியும், சத்தி தழைக்கும்
சிவமும், தவம்முயல்வார்
முத்தியும், முத்திக்கு வித்தும்,
வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும், புத்தியின் உள்ளே
புரக்கும் புரத்தைஅன்றே. 29

அன்றே தடுத்துஎன்னை ஆண்டுகொண்
டாய்; கொண்ட(து) அல்லஎன்கை
நன்றே? உனக்கினி நான்என்
செயினும், நடுக்கடலுள்
சென்றே விழினும், கரையேற்றுகை
நின் திருவுளமே
ஒன்றே! பலஉருவே! அருவே!
என் உமையவளே! 30



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமையும் உமையொரு பாகரும்
ஏக உருவில்வந்துஇங்கு,
எமையும் தமக்குஅன்பு செய்யவைத்
தார்;இனி எண்ணுதற்குச்
சமையங்களும் இல்லை; ஈன்றுஎடுப்
பாள்ஒரு தாயும்இல்லை;
அமையும், அமையுறு தோளியர்
மேல்வைத்த ஆசையுமே! 31

ஆசைக் கடலில் அகப்பட்(டு),
அருள்அற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லற்படஇருந்தேனை, நின்
பாதம் என்னும்
வாசக் கமலம் தலைமேல்
வலியவைத்(து) ஆண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லுவேன்! ஈசர்
பாகத்து நேரிழையே! 32

இழைக்கும் வினைவழியே அடும்
காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந்து, 'அஞ்சல்'
என்பாய்;அத்தர் சித்தம்எல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை
யாமளைக் கோமளமே!
உழைக்கும்பொழுது, உன்னையே 'அன்னையே'
என்பன், ஓடிவந்தே. 33

வந்தே சரணம் புகும்
அடியார்க்கு, வானுலகம்
தந்தே, பரிவொடு தான்போய்
இருக்கும் சதுர்முகமும்,
பைந்தேன் அலங்கற் பருமணி
ஆகமும், பாகமும், பொற்
செந்தேன் மலரும், அலர்கதிர்
ஞாயிறும், திங்களுமே. 34



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்கட் பகவின் மணம்நாறும்
சீறடி சென்னிவைக்க,
எங்கட் கொருதவம் எய்தியவா?
எண் இறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவம்எய்துமோ?
தரங்கக் கடலுள்
வெங்கட் பணிஅணை மேல்துயில்
கூறும் விழுப்பொருளே! 35

பொருளே! பொருள்முடிக்கும் போகமே!
அரும் போகம்செய்யும்
மருளே! மருளில் வரும்தெருளே!
என் மனத்துவஞ்சத்(து)
இருள்ஏதும் இன்றி ஒளிவெளி
ஆகியிருக்கும் உன்றன்
அருள் ஏ(து) அறிகின்லேன்,
அம்புயஆதனத்து அம்பிகையே! 36

கைக்கே அணிவது கன்னலும்
பூவும்; கமலம்அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து
மாலை; விடஅரவின்
பைக்கே அணிவது பன்மணிக்
கோவையும் பட்டும்; எட்டுத்
திக்கே அணியும் திருவுடை
யான்இடம் சேர்பவளே! 37

பவளக் கொடியில் பழுத்தசெவ்
வாயும், பனிமுறுவல்
தவளத் திருநகை யும்துணையா,
எங்கள் சங்கரனைத்
துவளப் பொருது, துடிஇடை
சாய்க்கும் துணைமுலையாள்
அவளைப் பணிமின் கண்டீர்
அமராவதி ஆளுகைக்கே. 38



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுகைக்(கு) உன்தன் அடித்
தாமரைகள்உண்டு; அந்தகன்பால்
மீளுகைக்(கு) உன்தன் விழியின்
கடைஉண்டு; மேல்இவற்றின்
மூளுகைக்(கு) என்குறை நின்குறையே
அன்று; முப்புரங்கள்
மாளுகைக்(கு) அம்பு தொடுத்தவில்லான்
பங்கில் வாள்நுதலே! 39

வாணுதல் கண்ணியை, விண்ணவர்
யாவரும் வந்துஇறைஞ்சிப்
பேணுதற்கு எண்ணிய எம்பெரு
மாட்டியைப் பேதைநெஞ்சில்
காணுதற்கு அண்ணியள் அல்லாத
கன்னியை, காணும்அன்பு
பூணுதற்(கு) எண்ணிய எண்ணம்அன்றோ,
முன்செய் புண்ணியமே! 40

புண்ணியம் செய்தனமே மனமே!
புதுப் பூங்குவளைக்
கண்ணியும், செய்ய கணவரும்
கூடி, நம் காரணத்தால்
நண்ணி இங்கேவந்து, தம்அடி
யார்கள் நடுஇருக்கப்
பண்ணி, நம் சென்னியின்மேல்
பத்மபாதம் பதித்திடவே. 41

இடங்கொண்டு விம்மி, இணைகொண்டு
இறுகி இளகி,முத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண்டு
இறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட
நாயகி! நல்அரவின்
படங்கொண்ட அல்குல் பனிமொழி,
வேதப் பரிபுரையே. 42



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபுரச் சீறடிப் பாசாங்குசை,
பஞ்சபாணி, இன்சொல்
திரிபுர சுந்தரி, சிந்துர
மேனியள், தீமைநெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக்
குனிபொருப் புச்சிலைக்கை,
எரிபுரை மேனி இறைவர்செம்
பாகத்து இருந்தவளே! 43

தவளே இவள் எங்கள்
சங்கரனார் மனைமங்கலமாம்;
அவளே அவர்தமக்(கு) அன்னையும்
ஆயினள்; ஆகையினால்,
இவளே கடவுளர் யாவர்க்கும்
மேலை இறைவியுமாம்;
துவளேன், இனிஒரு தெய்வம்உண்
டாகமெய்த் தொண்டு செய்தே. 44

தொண்டு செய்யாது, நின்பாதம்
தொழாது, துணிந்(து)இச்சையே
பண்டு செய்தார் உளரோஇலரோ?
அப்பரி(சு) அடியேன்
கண்டு செய்தால், அது கைதவமோ
அன்றிச் செய்தவமோ?
மிண்டு செய்தாலும் பொறுக்கைநன்றே.
பின் வெறுக்கைஅன்றே. 45

வெறுக்கும் தகைமைகள் செய்யினும்,
தம்அடியாரை மிக்கோர்
பொறுக்கும் தகைமை புதிய(து)அன்றே;
புதுநஞ்சை உண்டு
கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம்
கலந்த பொன்னே!
மறுக்கும் தகைமைகள் செய்யினும்
யான்உன்னை வாழ்த்துவனே. 46



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் படிஒன்று கண்டுகொண்டேன்:
மனத்தே ஒருவர்
வீழும் படிஅன்று; விள்ளும்படி
அன்று; வேலைநிலம்
ஏழும், பருவரை எட்டும்
எட்டாமல், இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே
கிடந்து சுடர்கின்றதே. 47

சுடரும் கலைமதி துன்றும்
சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக்
கொடியைப் பதித்துநெஞ்சில்,
இடரும் தவிர்த்(து), இமைப் போ(து)இருப்பார்
பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும்
தோயும் குரம்பையிலே? 48

குரம்பை அடுத்துக் குடிபுக்க
ஆவி, வெங் கூற்றுக்(கு)இட்ட
வரம்பை அடுத்து மறுகும்அப்போது,
வளைக்கை அமைத்து
அரம்பை யடுத்த அரிவையர்
சூழவந்(து), 'அஞ்சல்' என்பாய்,
நரம்பை அடுத்த இசைவடி
வாய்நின்ற நாயகியே! 49

நாயகி, நான்முகி, நாராயணி,
கை நளினபஞ்ச
சாயகி, சாம்பவி, சங்கரி,
சாமளை, சாதிநச்சு
வாயகி மாலினி, வாராகி,
சூலினி, மாதங்கிஎன்று
ஆயகியாதி உடையாள் சரணம்
அரண் நமக்கே. 50



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரணம் பொருள்என்(று) அருள்
ஒன்(று)இலாத அசுரார்தங்கள்
முரண் அன்(று) அழியமுனிந்த
பெம்மானும் முகுந்தனுமே,
'சரணம் சரணம்' எனநின்ற
நாயகிதன் அடியார்,
மரணம் பிறவி இரண்டும்எய்தார்,
இந்த வையகத்தே. 51

வையம், துரகம், மதகரி,
மாமகுடம், சிவிகை,
பெய்யும் கனகம், பெருவிலை
ஆரம், பிறைமுடித்த
ஐயன் திருமனை யாள்அடித்
தாமரைக்கு அன்புமுன்பு
செய்யும் தவமுடை யார்க்(கு)
உளவாகிய சின்னங்களே. 52

சின்னஞ் சிறிய மருங்கினில்
சாத்திய செய்யபட்டும்,
பென்னம் பெரிய முலையும்,
முத்தாரமும், பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலும், கண்
மூன்றும் கருத்தில்வைத்துத்
தன்னந் தனிஇருப் பார்க்(கு)இது
போலும் தவம்இல்லையே. 53

இல்லாமை சொல்லி, ஒருவர்தம்
பால்சென்று, இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல்,
நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம்பால்
ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை
பாதங்கள் சேர்மின்களே. 54



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின் ஆயிரம் ஒரு மெய்வடி
வாகி விளங்குகின்ற
அன்னாள், அகமகிழ் ஆனந்த
வல்லி, அருமறைக்கு
முன்னாய், நடுஎங்குமாய், முடிவாய
முதல்வி தன்னை
உன்னாது ஒழியினும் உன்னினும்,
வேண்டுவது ஒன்றில்லையே. 55

ஒன்றாய் அரும்பிப் பலவாய்
விரிந்(து), இவ்வுல(கு)எங்குமாய்
நின்றாள், அனைத்தையும் நீங்கிநிற்பாள்
என்தன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா!
இப்பொருள் அறிவார்
அன்(று) ஆலிலையில் துயின்ற
பெம்மானும் என்ஐயனுமே. 56

ஐயன் அளந்தபடி இருநாழி
கொண்(டு), அண்டமெல்லாம்
உய்ய அறம்செயும் உன்னையும்
போற்றி, ஒருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும்
கொண்டு சென்றுபொய்யும்
மெய்யும் இயம்பவைத்தாய்: இதுவோ
உன்தன் மெய்யருளே? 57

அருணாம் புயத்தும், என் சித்தாம்
புயத்தும், அமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல்
நல்லாள், தகை சேர்நயனக்
கருணாம் புயமும், வதனாம்
புயமும், கராம்புயமும்,
சரணாம் புயமும் அல்லால்
கண்டிலேன், ஒரு தஞ்சமுமே. 58



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சம் பிறி(து)இல்லை ஈதுஅல்ல(து)
என்று, உன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன்;
ஒற்றை நீள் சிலையும்
அஞ்(சு)அம்பும் இக்(கு)அலராகி நின்றாய்!
அறியார் எனினும்,
பஞ்(சு)அஞ்சும் மெல்லடியார் அடியார்
பெற்ற பாலரையே. 59

பாலினும் சொல்இனி யாய்!பனி
மாமலர்ப் பாதம்வைக்க,
மாலினும், தேவர்வணங்க நின்றோன்
கொன்றை வார்சடையின்
மேலினும், கீழ்நின்று வேதங்கள்
பாடும்மெய்ப் பீடம்ஒரு
நாலினும், சாலநன்றோ அடியேன்
முடை நாய்த்தலையே? 60

நாயே னையும் இங்(கு)ஒரு
பொருளாக நயந்துவந்து,
நீயே நினைவின்றி ஆண்டுகொண்
டாய், நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந்தாய்;
என்ன பேறுபெற்றேன்!
தாயே, மலைமகளே, செங்கண்
மால்திருத் தங்கைச்சியே! 61

தங்கச் சிலைகொண்டு, தானவர்
முப்புரம் சாய்த்து, மத
வெங்கண் கரிஉரி போர்த்த
செஞ்சேவகன் மெய்அடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட
நாயகி, கோகநகச்
செங்கைக் கரும்பும், மலரும்எப்
போதும் என்சிந்தையதே. 62



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேறும் படிசில ஏதுவும்
காட்டி, முன் செல்கதிக்குக்
கூறும் பொருள், குன்றில் கொட்டும்
தறி, குறிக்கும் சமயம்
ஆறும் தலைவி இவளாய்
இருப்பது அறிந்திருந்தும்,
வேறும் சமயம்உண்(டு) என்று
கொண்டாடிய வீணருக்கே. 63

வீணே பலிகவர் தெய்வங்கள்
பால்சென்று, மிக்கஅன்பு
பூணேன்; உனக்(கு)அன்பு பூண்டு
கொண்டேன்; நின்புகழ்ச்சியன்றிப்
பேணேன், ஒருபொழுதும்; திரு
மேனிப்ரகாசம் அன்றிக்
காணேன் இருநில மும், திசை
நான்கும், ககனமுமே. 64

ககனமும் வானும் புவனமும்
காண, விற் காமன்அங்கம்
தகனம்முன் செய்த தவப்பெரு
மாற்குத் தடக்கையும்செம்
முகனும் முந்நான்கு இருமூன்றுஎனத்
தோன்றிய மூதறிவின்
மகனும் உண்டாயதன்றோ?வல்லி
நீசெய்த வல்லபமே. 65

வல்லபம் ஒன்றறியேன்; சிறியேன்
நின் மலரடிச்செம்
பல்லவம் அல்லது பற்றுஒன்று
இலேன்; பசும் பொன்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய்,
வினையேன் தொடுத்த
சொல்அவ மாயினும், நின்திரு
நாமங்கள் தோத்திரமே. 66



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோத்திரம் செய்து தொழுதுமின்
போலும்நின் தோற்றம் ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில்
வையாதவர் வண்மை, குலம்,
கோத்திரம், கல்வி, குணம்குன்றி,
நாளும் குடில்கள்தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்குஉழலா
நிற்பர் பாரெங்குமே. 67

பாரும், புனலும், கனலும், வெங்
காலும், படர்விசும்பும்;
ஊரும் முருகு சுவைஒளி
ஊறுஒலி ஒன்றுபடச்
சேரும் தலைவி, சிவகாம
சுந்தரி சீறடிக்கே
சாரும் தவம் உடையார்
படையாத தனம்இல்லையே. 68

தனம்தரும்; கல்வி தரும்;ஒரு
நாளும் தளர்வுஅறியா
மனம்தரும்; தெய்வ வடிவும்
தரும்; நெஞ்சில் வஞ்சம்இல்லா
இனம்தரும்; நல்லன எல்லாம்
தரும்அன்பர் என்பவர்க்கே,
கனம்தரும் பூங்குழலாள்
அபிராமி கடைக்கண்களே. 69

கண்களிக் கும்படி கண்டுகொண்
டேன், கடம் பாடவியில்:
பண்களிக்கும் குரல் வீணையும்,
கையும், பயோதரமும்,
மண்களிக்கும் பச்சை வண்ணமும்
ஆகி, மதங்கர்குலப்
பெண்களில் தோன்றிய எம்பெரு
மாட்டிதன் பேரழகே. 70



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத
வல்லி, அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத்
தாள், பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள
யாமளைக் கொம்பிருக்க,
இழவுற்று நின்றநெஞ்சே! இரங்கேல்!
உனக்கு என்குறையே? 71

என்குறை தீரநின்று ஏத்துகின்
றேன்;இனி யான்பிறக்கின்,
நின்குறையே அன்றி யார்குறை
காண்?இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற
நேரிடை மெல்லியலாய்!
தன்குறை தீர, எம் கோன்சடை
மேல்வைத்த தாமரையே. 72

தாமம் கடம்பு; படைபஞ்ச
பாணம்; தனுக்கரும்பு;
யாமம் வயிரவர் ஏத்தும்
பொழுது;எமக்கென்று வைத்த
சேமம் திருவடி; செங்கைகள்
நான்கு, ஒளி செம்மை; அம்மை
நாமம் திரிபுரை; ஒன்றோ(டு)
இரண்டு நயனங்களே. 73

நயனங்கள் மூன்றுடை நாதனும்,
வேதமும், நாரணனும்,
அயனும் பரவும் அபிராம
வல்லி அடிஇணையைப்
பயன்என்று கொண்டவர், பாவையர்
ஆடவும் பாடவும், பொன்
சயனம் பொருந்து தமனியக்
காவினில் தங்குவரே. 74



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்குவர் கற்பகத் தாருவின்
நீழலில்; தாயர்இன்றி
மங்குவர், மண்ணில் வழுவாப்
பிறவியை; மால்வரையும்,
பொங்குவர் ஆழியும் ஈரேழ்
புவனமும் பூத்தஉந்திக்
கொங்குஇவர் பூங்குழலாள்திரு
மேனி குறித்தவரே. 75

குறித்தேன் மனத்தில், நின்கோலம்
எல்லாம்;நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற
நேர்வழி; வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப்
பிரான்ஒரு கூற்றைமெய்யில்
பறித்தே குடிபுகுதும் பஞ்ச
பாண பயிரவியே! 76

பயிரவி! பஞ்சமி! பாசாங்
குசை! பஞ்ச பாணி! வஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி!
காளி! ஒளிரும்கலா
வயிரவி! மண்டலி! மாலினி!
சூலி! வராகிஎன்றே
செயிர்அவி நான்மறை சேர்திரு
நாமங்கள் செப்புவரே. 77

செப்பும் கனக கலசமும்
போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம
வல்லி அணிதரளக்
கொப்பும், வயிரக் குழையும்,
விழியின் கொழும்கடையும்,
துப்பும் நிலவும் எழுதிவைத்தேன்
என் துணைவிழிக்கே. 78



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிக்கே அருளுண்(டு) அபிராம
வல்லிக்கு; வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்(டு)
எமக்கு;அவ் வழிகிடக்கப்,
பழிக்கே சுழன்று, வெம்பாவங்களே,
செய்து, பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம்
மோடு என்ன கூட்(டு)இனியே? 79

கூட்டியவா என்னைத் தன்அடி
யாரில், கொடியவினை
ஓட்டியவா, என்கண் ஓடியவா,
தன்னை உள்ளவண்ணம்
காட்டியவா, கண்ட கண்ணும்
மனமும் களிக்கின்றவா,
ஆட்டியவா நடம் ஆடகத்
தாமரை ஆரணங்கே. 80

அணங்கே! அணங்குகள் நின்பரி
வாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை; வாழ்த்துகிலேன்
நெஞ்சில்; வஞ்சகரோடு
இணங்கேன்; எனதுஉன(து) என்று
இருப்பார்சிலர் யாவரொடும்
பிணங்கேன்; அறிவொன்றி லேன்; என்
கண்நீவைத்த பேரளியே! 81

அளி ஆர் கமலத்தில் ஆரணங்கே!
அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர்திரு
மேனியை உள்ளுந்தொறும்
களியாகி, அந்தக் கரணங்கள்
விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின், எங்ஙனே மறப்பேன்
நின் விரகினையே? 82



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரவும் புதுமலர் இட்டு, நின்
பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல்லார்,
இமையோர் எவரும்
பரவும் பதமும், அயிரா
வதமும், பகீரதியும்
உரவும் குலிசமும், கற்பகக்
காவும் உடையவரே. 83

உடையாளை, ஒல்குசெம் பட்(டு)
உடையாளை, ஒளிர்மதிச்செஞ்
சடையாளை, வஞ்சகர் நெஞ்சடையாளை,
தயங்கும் நுண்ணூல்
இடையாளை, எங்கள் பெம்மான்
இடையாளை, இங்கென்னைஇனிப்
படையாளை, உங்களையும் படையா
வண்ணம் பார்த்திருமே. 84

பார்க்கும் திசைதொறும் பாசாங்
குசமும், பனிச்சிறைவண்(டு)
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும்,
கரும்பும்,என் அல்லல்எல்லாம்
தீர்க்கும் திரிபுரையாள் திரு
மேனியும், சிற்றிடையும்,
வார்க்குங்கும் முலையும், முலைமேல்
முத்து மாலையுமே. 85

மால்அயன் தேட மறைதேட,
வானவர்தேட நின்ற
காலையும் சூடகக் கையையும்
கொண்டு, கதித்தகப்பு
வேலை வெங்காலன் என்மேல்
விடும்போது, வெளிநில்கண்டாய்!
பாலையும் தேனையும் பாகையும்
போலும் பனிமொழியே! 86



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத
நின்திருமூர்த்தி, எந்தன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற
தால்;விழியால் மதனை
அழிக்கும் தலைவர் அழியா
விரதத்தை, அண்டமெல்லாம்
பழிக்கும் படி,ஒரு பாகம்
கொண்(டு)ஆளும் பராபரையே! 87

பரம்என்(று) உனை அடைந்தேன்
தமியேனும், உன்பத்தருக்குள்
தரம்அன்(று) இவன்என்று தள்ளத்
தகாது; தரியலர்தம்
புரம்அன்(று) எரியப் பொருப்புவில்
வாங்கிய, போதில்அயன்
சிரம்ஒன்று செற்ற கையான்இடப்
பாகம் சிறந்தவளே! 88

சிறக்கும் கமலத் திருவே! நின்
சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும்நின் துணைவரும்
நீயும், துரியமற்ற
உறக்கம் தரவந்து, உடம்போ(டு)
உயிர்உறவு அற்(று)அறிவு
மறக்கும் பொழு(து), என் முன்னே
வரல்வேண்டும் வருந்தியுமே. 89

வருந்தா வகை என் மனத்
தாமரையினில் வந்துபுகுந்து
இருந்தாள், பழைய இருப்பிடமாக;
இனி எனக்குப்
பொருந்தாத ஒருபொருள் இல்லை;
விண்மேவும் புலவருக்கு
விருந்தாக, வேலை மருந்தானதை
நல்கும் மெல்லியலே! 90



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்லிய நுண்இடை மின்அனை
யாளை, விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்அனை
யாளைப் புகழ்ந்து, மறை
சொல்லிய வண்ணம் தொழும்அடி
யாரைத்தொழும் அவர்க்கு
பல்லியம் ஆர்த்துஎழ, வெண்பகடு
ஊரும் பதம் தருமே. 91

பதத்தே உருகி, நின்பாதத்திலே
மனம்பற்றி, உன்றன்
இதத்தே ஒழுக, அடிமை கொண்
டாய்;இனியான் ஒருவர்
மதத்தே மதிமயங் கேன்;அவர்
போனவழியும் செல்லேன்!
முதல்தேவர் மூவரும் யாவரும்
போற்றும் முகிழ்நகையே! 92

நகையே இஃதுஇந்த ஞாலம்எல்
லாம்பெற்ற நாயகிக்கு
முகையே, முகிழ்முலை மானே
முதுகண்; முடிவில்அந்த
வகையே பிறவியும் வம்பே;
மலைமகள் என்பதுநாம்;
மிகையே, இவள்தன் தகைமையை
நாடி விரும்புவதே 93

விரும்பித் தொழும் அடியார்விழி
நீர்மல்கி, மெய்புளகம்
அரும்பித், ததும்பிய ஆனந்த
மாகி, அறிவிழந்து,
சுரும்பிற் களித்து, மொழிதடு
மாறி, முன் சொன்னஎல்லாம்
தரும் பித்தர் ஆவரென்றால்,
அபிராமி சமயம்நன்றே! 94



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றே வருகினும், தீதே
விளைகினும், நான்அறிவ(து)
ஒன்றேயும் இல்லை; உனக்கே
பரம்; எனக்(கு) உள்ளஎல்லாம்
அன்றே உனதென்(று) அளித்து
விட்டேன்; அழியாதகுணக்
குன்றே! அருட்கடலே! இம
வான்பெற்ற கோமளமே! 95

கோமள வல்லியை, அல்லியந்
தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை, ஏதம்
இலாளை, எழுதரிய
சாமள மேனிச் சகலகலா
மயில் தன்னைத்தம்மால்
ஆமளவும் தொழு வார், எழு
பாருக்கும் ஆதிபரே. 96

ஆதித்தன் அம்புலி, அங்கி,
குபேரன், அமரர்தங்கோன்,
போதில் பிரமன், புராரி,
முராரி, பொதியமுனி,
காதிப் பொருபடைக் கந்தன்,
கணபதி, காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர்
போற்றுவர் தையலையே. 97

தைவந்து நின் அடித்தாமரை
சூடிய சங்கரற்குக்,
கைவந்த தீயும் தலைவந்த
ஆறும் கரந்ததுஎங்கே?
மெய்வந்த நெஞ்சின் அல்லால்,
ஒருகாலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகல்அறியா
மடப் பூங்குயிலே! 98



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குயிலாய் இருக்கும் கடம்பா
டவியிடை; கோலவியன்
மயிலாய் இருக்கும் இமயாசலத்
திடை; வந்(து)உதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில்;
கமலத்தின்மீது அன்னமாம்
கயிலாய ருக்(கு) அன்றுஇமவான்
அளித்த கனங்குழையே. 99

குழையைத் தழுவிய கொன்றையந்
தார்கமழ் கொங்கைவல்லி,
கழையைப் பொருத திருநெடுந்
தோளும், கருப்புவில்லும்,
விழையப் பொருதிறல் வேரிஅம்
பாணமும், வெண்ணகையும்,
உழையைப் பொருகண்ணும், நெஞ்சில்
எப்போதும் உதிக்கின்றவே! 100

## *நூற்பயன்*

ஆத்தாளை, எங்கள் அபிராம
வல்லியை, அண்டமெல்லாம்
பூத்தாளை, மாதுளம் பூநிறத்
தாளை, புவி அடங்கக்
காத்தாளை, ஐங்கணை பாசாங்
குசமும் கரும்பும்அங்கை
சேர்த்தாளை, முக்கண்ணியைத்
தொழுவார்க்கு ஒருதீங்கில்லையே.

*முற்றிற்று.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமி பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவாராத நட்பும்
கன்றாக வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியிலாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள்வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்புமுதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டுகண்டாய்
அலையாளி அறிதுயில் கொள்மாயனது தங்கையே
ஆதிகடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THOMAS EDISON

I will not say I failed 1000 times, I will say that I discovered there are 1000 ways that can cause failure - -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழக் கற்றுக் கொள்

## (அ) ஆற்றலே (சக்தி) வாழ்க்கை

இவ்வுலகம் ஆற்றலை (சக்தியை) வணங்குகிறது. பலவீனத்தையல்ல என்பதை இளைஞர்கள் நன்றாக உணரவேண்டும். 'கிரிக்கெட்' மைதானத்தில், பலம் உள்ளவன் நான்கு 'ஸிக்ஸர்' அடித்தால், ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கைதட்டி உற்சாகமாக ஆரவாரித்து, அவனைத் தோளின் மீது வைத்துக் கொண்டு கொண்டாடுவதில்லையா? அது அவன் திறமை. ஆற்றலுக்கு அளித்த கௌரவம் அல்லவா? ஆற்றலை, அனைவரும் பக்தியுடனும், கௌரவத்துடனும் காண்கின்றனர். திறமையுடையவனாக இருந்தால் உறவினர் அனைவரும் நன்மை செய்வர். திறமையற்றவனாக இருந்தால் நெருங்கிய உறவினரே பகைவர் ஆவர்" என்று ஸ்ரீ புரந்தரதாஸர் கூறியிருப்பது எவ்வளவு உண்மை! தாய் – தந்தையரால் அன்புடன் பேணி வளர்க்கப்பட்ட குழந்தை வளர்ந்து பலவீனனாகி, நோயுற்றவனாகி, திறமையற்றவனாகியும், மூடனாகவும் இருந்தால் மனிதர்கள் என்ன கூறுவார்கள் தெரியுமா? "எதற்காக இவன் பிறந்தான்? குலத்திற்கே களங்கம்" என்று கூறுவதில்லையா? ஆம், திறமையுடையவனுக்கு அனைவரும் நண்பர்கள். திறமையற்றவனை அனைவரும் ஒதுக்குவர் மூலையிலே தள்ளி விடுவார்கள். உடலும், உள்ளமும் நன்றாக உள்ள நாம் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள வாய்ப்புக்களை நல்ல முறையிலே பயன்படுத்திக் கொண்டு, நம் ஆற்றலைப் பல விதங்களிலே பெருக்கிக் கொள்ள வேண்டும். உடல், உள்ளம், அறிவு, நீதிநெறி போன்றவற்றின் பலத்துடன், நாம் ஆன்ம சக்தியையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். "ஆற்றலே வாழ்வு பலவீனமே மரணம்" இது மிகப் பெரிய உண்மையாகும். "ஆற்றலே, நன்மைநிறைந்த நீண்டவாழ்வின் ரகசியமாகும் – பலவீனமும் கவலையும் துயரங்களின் மூலம்" என்று கூறிய சுவாமி விவேகானந்தர், "பலம் உடையவர்களாக, இரும்பைப் போல சதை, செழிப்பான நரம்புமண்டலம், மின்னலைப் போன்ற ஆற்றல் இவற்றை வளர்த்துக் கொண்டு, உங்கள் காலின் மீது நிற்கவேண்டும் என்று மீண்டும் மீண்டும் கூறியுள்ளார். பலவீனமானவன்தான் அழிவதுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமின்றி, மற்றையோரிடத்தும் வற்றும்தன்மையையும், துன்பத்தையும் ஏற்படுத்தி விடுகிறான். தொன்றுதொட்டு நம் முன்னோர்கள் கூறியுள்ள முக்கியமான அறிவுரை, "ஆற்றலை வளர்த்துக் கொள்" என்பதுதான் "வலிமையற்று இருக்க வேண்டாம், பலவீனனாக இருக்க வேண்டாம்" என்று ஸ்ரீ கிருஷ்ணன் அருச்சுனனுக்கு அறிவுரை செய்தான் தேவதைகளும் பலவீனமானவர்களையே அழிக்கிறார்கள் வலிமை நிறைந்தவர்களை அல்ல "என்று பொருள் பொதிந்த கூற்று உள்ளது." குதிரையைப் பலி கொடுப்பதில்லை. யானையைப் பலி கொடுப்பதில்லை. புலியைக் கொடுப்பதோ இல்லவே இல்லை. ஆனால் ஆட்டைப் பிடித்துப் பலி கொடுக்கிறார்கள் ஐயோ, விதியும் பலவீனத்தையே அழிக்கிறது."

நம்மை பலவீனமடையச் செய்யும் நூற்றுக்கணக்கான கதைகள், நிகழ்ச்சிகள், சாதனங்கள், தார்மீகம் மற்றும் அரசியல் விருப்பு – வெறுப்புக்கள் நாள் தோறும் தோன்றிக் கொண்டிருக்கலாம், அவை இளைஞர்களின் மனங்களில் அச்சத்தை ஏற்படுத்தவும் கூடும். ஆனால் வாழ்க்கை, எவ்வளவுதான் நம்பிக்கையின்மையை அளிப்பதாக விருப்பினும், அதனைத் தாண்டி மேலே ஏறுவதற்கு வேண்டிய ஆற்றல் நம்மிடமே உள்ளது. நம் அருகிலேயே உள்ளது. நம் மனத்தின் ஆழத்திலேயே உள்ளது. சாதி, மதம், குலம், கோத்திரம் என்னும் வேறுபாடு இன்றி ஒவ்வொரு மனிதனின் மனத்தின் ஆழத்திலே மரணமற்ற வலியற்ற தெய்வீக சக்தி உள்ளது. மனோதத்துவ விஞ்ஞானி இன்று இதைக் கூறும் நிலையிலுள்ளார் ஒட்டு மொத்தமாக நமக்கு வேண்டிய மார்கதரிசனம் 'ஆற்றல்' உதவி, உற்சாகம் அமைதி என்றும் இவைபோன்ற வாழ்வினை விளங்கவைக்கும் அம்சங்கள் நம்மிடையே உள்ளன இவ்வளவு அளவற்ற ஆற்றலை உள்ளே வைத்துக் கொண்டு, அடிமையைப் போல நடப்பதற்குக் காரணம் என்ன? ஒன்று அறியாமை மற்றொன்று, இளவயது முதற்கொண்டே வளர்த்துக்கொண்டு வந்த மறுக்கும் தன்மை. ஒவ்வொரு மறுக்கப்பட்ட அல்லது விலக்கப்பட்ட எண்ணம், அல்லது விலக்கப்பட்டதன்மை உள்ளே உள்ள அளவற்ற ஆற்றலை மட்டுப்படுத்தி, நம்மை பலவீனம் உடையவர்களாகச் செய்து விடுகிறது. ஒவ்வொரு ஆன்ம நம்பிக்கையை வளர்க்கும், மற்றும் ஆக்க பூர்வமான எண்ணமும் நம் மேன்மையான வளர்ச்சிக்கு உதவுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் எதிர்காலத்தை வடிவமைத்துக் கொள்பவர் நீங்களே என்பதை மறக்க வேண்டாம். எல்லாப் பொறுப்புக்களையும் ஏற்பதற்கு ஆயத்தமாகி, மிஞ்சியுள்ள செயல்களைக் குறித்து எண்ணியபடி வீணாகக் காலத்தைக் கழிக்கவேண்டாம். நல்ல, நிலைத்த எதிர் காலம் உங்கள் முன்னே இருக்கிறது. நீங்கள் இந்தச் செய்தியை எப்பொழுதும் நினைவிலே கொள்ள வேண்டும். உங்கள் ஒவ்வொரு எண்ணம் பேச்சு, மற்றும் செயல் என்னுமிவையே உங்கள் எதிர்காலத்தை விளங்கவைக்கும் உணவாக விளங்கும், கெட்ட எண்ணம், கெட்ட செயல்கள், கொடுமையான புலியைப் போல உங்கள் மேல் பாய்வதற்கு ஆயத்தமாயிருப்பின், நூற்றுக் கணக்கான நல்ல எண்ணங்களும், செயல்களும், ஆயிரக்கணக்கான தேவதைகளின் சாத்விக சக்தியினால் உங்களை எப்பொழுதும் காப்பாற்றுவதற்கு ஆயத்தமாக உள்ளன என்னும் உறுதியான நம்பிக்கை உங்கள் பக்கத்திற்கு நற்செயலின் மிகப்பெரிய முன்னேற்றும் சக்தியாக விளங்குகிறது என்னும் விவேகம் மிகுந்த சொற்களை மீண்டும் மீண்டும் மனனம் செய்ய வேண்டும்.

இச்சொற்கள் சக்தி சஞ்சீவினியின் நெருப்புப் பொறிகளன்றோ? நல்ல செயலிற்கு உங்களைத் தூண்டும் உற்சாகநிதியன்றோ? இவைகளைக் காற்றிலே பறக்கவிட்டு நாம் நல்ல முன்னேற்றப் பாதையிலே முன்னேற இயலுமா? உங்களுக்கு இந்த விஷயம் தெரியுமா? ஒவ்வொரு உடல் தொடர்பான உணர்வு. மற்றும் வெளிப்புற தூண்டுதலிற்கு உங்கள் செயல்கள் என்னுமிவை, மூளையின் பத்தாயிரம் மில்லியன் அணுக்களின் மீது தம் முத்திரையைப் பதிக்கின்றன இந்த வலிமை நிலைபெற்று நாள்தோறும் வளர்ந்துகொண்டே செல்கிறது. இவைகளின் ஒட்டுமொத்தமே, உங்கள் தனித்தன்மை அல்லது தனிமனிதச் சிறப்பியல்பு மற்றும் நடத்தையாகும். ("கடவுள் நம் தவறுகளை மன்னிக்கலாம் ஆனால் நம் நரம்பு மண்டலம் மன்னிப்பதில்லை" என்று மனோதத்துவ விஞ்ஞானி கூறியுள்ளார்.)[1]

---

1. The Lord may forgive our Sins, but the Nervous system never does

*- William James*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லதோ, கெட்டதோ உங்கள் வினைப்பயனை நீங்களே வகுத்துக் கொள்கிறீர்கள், அதனால் ஸாமு வேல்ஸ் மாயில்ஸ் கூறுவதைப் போல, "நல்லதொரு ஆலோசனை செய்யுங்கள் அது உங்களை நல்ல செயலிற்கு முன்னேற்றும். ஒரு நல்ல செயலைக் கைக் கொள்ளுங்கள் அது உங்களை நல்ல செயலிற்கு முன்னேற்றும். ஒரு நல்ல செயலைக் கைக் கொள்ளுங்கள் அது உங்களை நல்ல வழக்கத்திற்கு ஈர்க்கும். ஒரு நல்ல வழக்கத்தை மேற்கொண்டால் அது உங்கள் நடத்தையை மேன்மைப்படுத்தும். நல்ல நடத்தையால் உங்களுக்கு நல்ல பயன் ஏற்படவே செய்யும், பழக்கத்தினால் மேன்மையடையும் வழிமுறைகளின் அறிவு இங்கு புலப்படுகிறது.

இனியாவது நீங்கள் சிறிது விழிப்பு அடைவீர்களா? அற்புத இயந்திரமான உங்கள் உடல், உள்ளங்களில் அடங்கியுள்ள உறங்கும் ஆற்றலை எழுப்பி, அதனால் நல்ல பயன்களை அடைவீரா? ஆம் நீங்கள் அப்பொழுது உங்கள் வாழ்க்கையிலே விரைவாக மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளவியலும்.

எப்படி என்று கேட்கிறீர்களா? ஒரு வழியுள்ளது.

அது முறையான ஒழுங்கு வரையறைகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நாள்தோறும் நாம் வாழும் வாழ்க்கையின் எல்லா பக்கங்களுக்கும் முறையான ஒழுங்கு வரையறைகளை வகுத்துக் கொள்ள வேண்டும், ஏற்படுத்திக்கொண்ட நேரங்களில், எடுத்துக் கொண்ட செயலையாற்றும் கலை அது. சிலருக்கு இந்த நெறிமுறை இளம்பருவத்திலிருந்தே இயல்பாகவே இருக்கக் கூடும். இன்னும் சிலர் முயற்சியினால் இக்கலையைக் கற்க வேண்டியிருக்கும்.

எடுத்துக் கொண்ட செயல்களை, நாள்தோறும் ஒழுங்கான முறையிலே காப்பதே நிஷ்டையாகும். நிஷ்டையில்லாமல் எந்த முன்னேற்றமும் இல்லை. நம் ஞானப்பெருக்கானது உண்மையான ஆற்றலாகி பரிணமிக்க வேண்டுமெனின், நியமங்களைக் காப்பதிலே உறுதியான நிஷ்டை இருக்கவேண்டும். நியமம் அற்ற வாழ்க்கையால், எந்தச் செயலிலுமே வெற்றியை அடைய மாட்டோம் உங்கள் ஆற்றல் பெருக வேண்டுமெனின்; நீங்களே நியமங்களைக் காக்க வேண்டும் ஆம் உங்களுக்கு நீங்களே உங்கள் பகைவனாகவியலும். நீங்களே உங்கள் நண்பனாகவும் ஆகவியலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை

வாழ்க்கை ஒரு சவால் ;
அதனைச் சந்தியுங்கள் ;
வாழ்க்கை ஒரு பரிசு ;
அதனை ஏற்றுக்கொள்ளுங்கள் ;
வாழ்க்கை ஒரு சாகசப் பயணம் ;
அதனை துணிவுடன் மேற்கொள்ளுங்கள் ;
வாழ்க்கை ஒரு சோகம் ;
அதனைக் கடந்து வாருங்கள் ;
வாழ்க்கை ஒரு துயரம் ;
அதனைத் தாங்கிக் கொள்ளுங்கள் ;
வாழ்க்கை ஒரு கடமை ;
அதனை நிறைவேற்றுங்கள் ;
வாழ்க்கை ஒரு வினோதம் ;
அதனைக் கண்டறியுங்கள் ;
வாழ்க்கை ஒரு பாடல் ;
அதனைப் பாடுங்கள் ;
வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் ;
அதனைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் ;
வாழ்க்கை ஒரு புனிதப் பயணம் ;
அதனைப் புகழுடன் முடித்து விடுங்கள் ;
வாழ்க்கை ஒரு உறுதிமொழி ;
அதனை நிறைவேற்றுங்கள் ;
வாழ்க்கை ஒரு காதல் ;
அதனை அனுபவியுங்கள் ;
வாழ்க்கை ஒரு உணர்வு ;
அதனை உணர்ந்து கொள்ளுங்கள் ;
வாழ்க்கை ஒரு போராட்டம் ;
அதனை எதிர்கொள்ளுங்கள் ;
வாழ்க்கை ஒரு புதிர் ;
அதற்கு விடை காணுங்கள் ;
வாழ்க்கை ஒரு இலக்கு ;
அதனை எட்டிப் பிடியுங்கள் ;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணமே வடிவம்

மனித வாழ்க்கையை மேம்படுத்தும் மிகவும் முக்கியமான செய்திகள், ஆலோசனைகள், மற்றும் எண்ணங்கள் என்பது விளக்கைப் போல மிகவும் தெளிவானதாகும். முன்னேற்றப் பாதையிலே நடக்க வேண்டும் என எண்ணும் எந்த மனிதனும் ஆலோசனையின் பெருமாற்றலைப் புரிந்து கொள்ளவேண்டும். ஒவ்வொரு ஆலோசனையும் அச்சம், மற்றும் ஐயங்களுடன் கூடிய வெளிப்படுத்திச் செயல் படுத்தினால் அது தடையுடையதாக முடிகிறது. ஒவ்வொரு ஆலோசனையையும் ஆன்ம நம்பிக்கை மற்றும் விருப்பத்துடனும் கூடி வெளிப்படுத்திச் செயல் படுத்தினால் அது செயலைச் செய்து முடிப்பதிலே முடிவடைகிறது. மனத்தின் ஆற்றலைக் குறித்து ஐயத்திற்கு இடமற்ற ஒரு விதி உள்ளது.

(“மேன்மையான ஆலோசனைகள்; அத்தகைய மேன்மையான ஆலோசனைகளினிடையே ஈர்க்கப்படுகின்றன” இதனை எளிமையான முறையிலே கூற வேண்டுமாயின்) – நல்ல ஆலோசனைகளைச் செய்து கொண்டு சென்றால், அவை நல்ல மனிதர்களிடையே, பொருள்களிடையே நம்மைக் கொண்டு செல்கிறது.

கெட்ட ஆலோசனைகளைச் செய்து கொண்டு சென்றால், அவை கெட்ட மனிதர்களிடையே கெட்ட பொருள்களிடையே நம்மை இழுக்கின்றன.

நவீன முறைகளைக் கொண்டு ஆராய்ந்து, ‘உண்மை’ என்று உணரப்பட்ட, அறியப்பட்ட இந்த ஆலோசனையை இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் கௌதமபுத்தர் அளித்துள்ள அறிவுரைகளுடன் ஒப்புட்டுக் காணுங்கள்.

“இப்பொழுது நாம் எப்படி இருக்கிறோம் என்பதற்கு நாம் செய்துள்ள யோசனைகளின் பயன்தான் காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசனைகள்தான் நாம் இப்பொழுது உள்ள நிலையின் அடிப்படையாகும். நம் ஆலோசனைகளிலிருந்தே அது உருவாகியுள்ளது. ஒரு மனிதன் நன்மைபயக்கும் ஆலோசனைகளுடன் பேசினால், அதற்கு ஏற்றால் போல் நடந்து கொண்டால், மனிதர்களை நிழல் பின் தொடர்வது போல நன்மை என்றென்றும் விடாது அவனைப் பின்தொடரும். ஒரு மனிதன் கெட்டதையே ஆலோசனை செய்து, அதற்குத் தகுந்தாற் போல பேசினால், நடந்து கொண்டால் வண்டியை இழுக்கும் எருதின் கால்களை சக்கரங்கள் பின் தொடர்வதைப் போல துயரம் அவனைப் பின்தொடரும்" என்றும் நிலைத்த உண்மையைத் தெரியவைக்கும் மகாத்மாவின் இந்த அரிய வாக்கியங்கள், ஆலோசனையின் பெருமைக்குப் பிடித்த கைக்கண்ணாடியைப் போல விளங்குகிறது.

இதுவரைக்கும் கணக்கற்ற, சாரமற்ற, கீழான ஆலோசனைகளிலே நாம் மூழ்கியிருந்திருக்கலாம். முன்னேற்றப் பாதையிலே முன்னேற வேண்டுமெனின் இன்றிலிருந்து ஒவ்வொன்றாக நல்ல யோசனைகளை நம்முடையவையாக ஆக்கிக் கொண்டு, நம் வாழ்க்கையைக் கண்டிப்பாகத் திருத்திக் கொள்ளவியலும். உடலிலே அழுக்கும் ஒட்டிக்கொண்டால் "அழுக்கு" "அழுக்கு" என்று கத்தினால் அது போகாது. அழுக்கை அழுக்கால் எடுத்து வீசவியலாது நல்ல நீரைக் கொண்டு தூய்மை செய்ய வேண்டும், அதைப் போன்றே நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும், நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும். அப்பொழுது மெல்ல மெல்ல கெட்ட எண்ணங்கள் அகன்றுவிடும். உண்மை வழியிலே நடந்து, மற்றும் "தான்" என்னும் அகம் பாவத்திலிருந்து விடுதலைபெற்ற மஹாத்மாக்களின், வாழ்க்கையைக் குறித்த பொன்மொழிகளை மனனம் செய்வது, இவ்வழியிலே நமக்கு மிகவும் உதவும்.

எண்ணங்களின் உண்மையான உருவம், மற்றும் இயல்புகள் குறித்து சில ஆய்வுகள் இவ்விதம் உள்ளன. "ஒருமுறை ஒரு ஆலோசனையைச் செய்து கொண்டால், அதே எண்ணம் மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்திலே தோன்றும் சம்பவமும் ஏற்படலாம் ஒரு எண்ணத்தை ஐந்து, பத்து, அல்லது இருபது முறைகள் திரும்பத் திரும்ப எண்ணினால், அது நம் மனத்தின் ஒரு பகுதியாகி விடுகிறது. நாம் முயற்சி செய்து அதைக் குறித்து எண்ணாமல் இருந்தாலும், அது நம் மனத்தின் ஆழத்திலே நிலைபெற்றிருக்கும். வாய்ப்பு வரும் பொழுது மேலே எழுகிறது. உங்கள் மனத்திலுள்ள ஒரு ஆற்றல் மிகுந்த எண்ணம் உங்கள் மீது மட்டுமின்றி, உங்கள் அருகிலிருக்கும் மற்றவர் மீதும் தன் ஆற்றலை வெளிப்படுத்தும். எண்ணத்தின் ஆற்றல் எத்தகையது எனின் ஒரு மனிதனின் கேட்டினை நீங்கள் எண்ணிக் கொண்டிருந்தால், அம்மனிதனும் உங்கள் கேட்டினை அறியாமல் எண்ணும் படியும் ஆகலாம் பிறர் குறித்து நல்ல எண்ணங்களை நீங்கள் எண்ணினால், அவரும் உங்கள் குறித்து நல்ல எண்ணங்களையே அளிப்பர்"

"எண்ணங்கள் அலையைப் போன்று அசைகின்றன தமக்கு உறுதியாவதற்கு ஏற்ற மனத்தைத் தேடுகின்றன" என்று ஸ்ரீ அரவிந்தர் கூறியுள்ளார். 'தெளிவாகக் காணும்படி எண்ணங்கள், வெளியிலிருந்து மனத்தினுள் செல்கின்றன என்பதை ஸ்ரீ லேலெ அவர்கள் கூறும்வரையிலே நான் அறிந்திருக்கவில்லை. அவர் கூறியபடியே மனத்தை நிலைப் படுத்தினேன் மலையின் மீதுள்ள அமைதியான இடத்தைப் போல மனமும் அமைதியானது. அப்பொழுது. ஒவ்வொன்றாக எண்ணம் உருவத்துடன் என் அருகில் வருவதைக் கண்டேன் அவைகளை வெளியிலேற்றி, என் முழுமையாக எண்ண அலைகளற்று இருக்கச் செய்தேன்' என்றும் அவர் கூறினார்.

நீங்கள் எத்தகைய எண்ணங்களை வரவேற்று ஏற்றுக் கொண்டு இருக்கிறீர்கள்? எத்தகைய எண்ணங்களை வெளியேற்றுகிறீர்கள்? 'சிங்கத்தைப் போல பார்ப்பது' என்பது நல்லதல்லவா? (சிங்கம் முன்பாக செல்வதற்குமுன் ஒருமுறை பின்னால் திரும்பிப் பார்க்கும். அதைப்போல பின்னால் உள்ள விஷயங்களைத் திறனாய்ந்து முன்னால் நடப்பது) இரவு உறங்குவதற்கு முன், எத்தகைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணங்கள் நம்மை ஆள்கின்றன என்பதைக் குறித்து நாம் மிகுந்த விழிப்புடன் இருக்க வேண்டும். அப்பொழுது விழிப்புடன் உள்ள நம் மனம் அமைதியடைவதற்குத் தயார் செய்து கொள்ளும். அடங்கிய மனம் நல்ல, கெட்டதை ஆராயச் செய்வதில்லை. கொடுத்ததை ஏற்று, தன்னிடத்திலுள்ளதையும் சேர்த்து சரியான நேரத்திலே, விழப்புணர்வு உள்ள மனத்தை அடைகிறது. கணினிக்கு (கம்பியூடர்) நீங்கள் தவறான குறிப்புக்களை அளிப்பதைப் போல சினம், வெறுப்பு போன்ற எண்ணங்களையும், மற்ற நஞ்சு நிறைந்த எண்ணங்களையும் அசைபோட்டுக் கொண்டிருந்தால் உங்கள் உறக்கத்திற்குக் கண்டிப்பாக கேடு விளைவிக்கும் அதுமட்டுமின்றி, விழித்து எழுந்தவுடன் உங்கள் தனிமனித இயல்பிற்கு ஊறுவிளைவிக்கும் மறுக்கத் தக்க செயலிலே ஈடுபடுத்திவிடும் எனவேதான் புகழ் பெற்ற எழுத்தாளர் விக்டர் ஹ்யூகோ, "உறங்குவதற்கு முன்பு மேன்மையை எதிர்பார்த்தல் அன்பு, பொறுமை என்னுமிவற்றை உங்கள் தலையணையாக வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது மகிழ்ச்சியுடன் நல்ல இயல்புகளுடன் காலையிலே நீங்கள் துயில் எழுவீர்கள்."

சித்திரகுப்தன் இருக்கிறான், நினைவிருக்கட்டும்.

## பயிற்சியின் அற்புதங்கள்

சாமுவேல்ஸ்ம்யால்ஸ் தன்னுடைய "தன் உதவி" என்னும் புத்தகத்திலே ராபர்ட்பீல் அவர்களைக் குறித்த ஒரு அழகான உதாரணத்தை அளித்துள்ளார். இளம்பருவத்திலிருந்தே பீல் அவர்களுக்குச் சொற் பொழிவாற்றும் கலையைக் கற்பிப்பதற்கு அவர் தந்தை அவரை (பீல் அவர்களை) ஒரு மேடையிலே நிற்க வைத்து பேசும்படி உற்சாகப் படுத்திக் கொண்டிருந்தார். ஞாயிற்றுக் கிழமையன்று மாதா கோயிலிலே கேட்ட சொற்பொழிவை பீல் அவர்கள் மீண்டும் செய்ய வேண்டியிருந்தது. முதன் முதலிலே எவ்வித முன்னேற்றமும் இருக்கவில்லை. படிப்படியாக, முறையான இடைவிடாத முயற்சியினால் சிறப்பான அரிய ஒரு முனைப்பான நினைவாற்றலைப் பெற்றார். நீண்ட நேரம் செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பொழிவுகளை எவ்விதக் குறிப்புமின்றி, தங்குதடையின்றி, ஒரு சொல்லைக் கூட விடாமல் விவரிக்கும் திறமையைப் பெற்றார். பின்னால் சட்டமன்றத்தில் எதிர்த்தரப்பினரின் பல வகையான கேள்விகளுக்கு முறையாகப் பதிலளிக்கும் அவர் அற்புத நினைவாற்றல் அனைவருக்கும் வியப்பளித்தது.

அந்த ஆற்றலின் வளர்ச்சிக்கு இளம்பருவத்திலேயே அவர் தந்தையின் உற்சாகத்துடன், அவர் பழக்கத்தில் கொண்டுவந்த பயிற்சியின் விஷயம் போன்றவை அனைவருக்கும் தெரிந்து இருக்கவில்லை, எழுதப் படிக்கத் தொடங்கும் முன்பே முறையான பயிற்சியால் வேத உபநிடதங்களை, ஆயிரக்கணக்கான சுலோகங்களை மனப்பாடல் செய்து தலைமுறை தலைமுறைகளாக வந்த, சொல்திறமை மிக்க செல்வத்தை ஒரு எழுத்தும் தப்பாது அடுத்த தலைமுறைக்கு வகுத்தளித்த ஒரு சாதனையை நம் மனிதர்கள் சாதித்தனர். நினைவாற்றலின் இந்த உறுதியான முயற்சியில் இயந்திர கதியிருந்தாலும், பயிற்சியினால் அடையக் கூடிய அற்புதத் திறமைக்கு உயிருள்ள, கண்கூடான உதாரணமாக விளங்குகிறது.

ஆங்கில மொழியிலே "HABIT" என்னும் சொல்லிற்குச் சமமாக நாம் கன்னட மொழியிலே பயன்படுத்தும் சொல் 'அப்யாஸம்' என்பதாகும். கெட்டபழக்கத்தைச் 'சட' என்று (கன்னட மொழியில்) கூறுவதுண்டு. "Practice" என்னும் சொல்லை அப்யாஸம் என்றே மொழிபெயர்க்கும் முறை வந்து விட்டது, ஆனால் 'சாதனை' அல்லது 'அனுஷ்டானம்' என்பவை பழக்கமான சொற்களாகும். மீண்டும் மீண்டும் செய்யும் முயற்சி அல்லது சாதனையால் 'பழக்கம்' என்பது கைகூடும்.

'சர்க்கஸ்' ஆட்டத்திலே பயிற்சி பெற்ற ஆட்டக்காரர்கள் செய்து காட்டும் ஸாஹஸங்கள், பழக்கத்தினால் அடையத்தக்க அற்புத ஆற்றல் மற்றும் சாதனைகளுக்கு மனத்தை ஈர்க்கும் உதாரணங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அமெரிக்காவில் கூஏரு" என்னும் புத்தகத்திலே அங்கு கண்ட ஸர்க்கஸ்ஸில், ரஷ்யா நாட்டின் ஸர்க்கஸ் நிபுணர்கள் காட்டிய வியக்கவைக்கும் அரிய நிகழ்ச்சிகளை எழுத்தாளர்கள், அழகாக, நேரில் பார்ப்பது போல விவரித்துள்ளனர். நல்ல உடல் நலமுள்ள ஒரு மனிதன் மருத்துவமனைக்குச் சென்றால், அங்கு துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் நோயாளிகளின் துன்பம், துயரம், வேதனைகளை நொடியிலே கண்டு துன்புற்று அதைக்குறித்தே எண்ணுகிறான். அதைப் போன்றே ஸர்க்கஸ்ஸைப் பார்த்து விட்டு வந்தால் ஸாஹஸம் மற்றும் பயிற்சிகளின் சிறப்புக்களின் அறிவும், நம்மிடம் உற்சாக அலை ஒன்றினை எழுப்பக் கூடும். ஆனால் கற்பித்துக் கொள்வதால் மட்டும் புதிய பழக்கம் என்பது கைகூடாது அதற்குச் சாதனை எனும் நீரை இறைத்துப் பேணிக் காக்க வேண்டும்.

## உங்கள் பழக்கங்களே நீங்கள்

மனித வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் நல்லது, கெட்டது மற்றும் வரலாறு படைக்கும் பின்னிலையிலே ஆலோசனை, எண்ணம், நிகழ்த்துதல் என்னுமிவற்றிற்குத் தொடர்புடைய பயிற்சிகள் முக்கியமான பங்கு வகிக்கின்றன நல்லதோ, அல்லதோ, ஒரே செயலை மீண்டும் மீண்டும் செய்வதால் அது நம் மனம் மற்றும் நரம்பு மண்டலத்தின் எவ்வளவு உறுதியாக பரவிநிற்கிறது. என்றால், முறையான செயல்களைப் போன்றே, வாய்ப்புக் கிடைத்தால், முயற்சியின்றியே, இயல்பான எதிர்ச் செயல்கள் நடைபெறுகின்றன.

ஒய்வுபெற்ற ராணுவ வீரன் ஒருவன் வீதியிலே உணவுப் பொருட்களின் பளுவைச் சுமந்து கொண்டு சென்று கொண்டிருந்தான், தீய இயல்பு உடைய ஒரு சிறுவன், அந்த ராணுவவீரன் அவ்வழியிலே செல்வதைப் பலமுறை கண்டான். ஒருநாள், கால்வாயின் அருகிலே ராணுவவீரன் பளுவைத் தூக்கிக் கொண்டு எதையோ நினைத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தான், அப்பொழுது சிறுவன் உரத்த குரலிலே 'அடென்ஷன்' என்று கத்தினான். 'அடென்ஷன்' என்னும் சொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதில் விழுந்தவுடனே, ராணுவவீரன் தலையின் மேலிருந்த பளுவைப் பிடித்திருந்த கைகளை உடனே கீழே எடுத்து, நிமிர்ந்து நின்று 'ஸல்யூட்' அடிப்பதற்கு ஆயத்தமானான். சுமந்து கொண்டிருந்த பளு, கீழே கால்வாயில் விழுந்து சேர்ந்திருந்த பொருட்கள் அனைத்தும் சிதறிப் போயின. சிறுவனின் குறும்புத் தனத்தை உணரும் முன்பே காரியம் மீறிப்போயிற்று, நீண்டகாலம் போர்க்கல்வியின் பழக்கத்திற்கு ஆட்பட்டிருந்ததால் அவன் மனம் அக்கணமே செயலில் இறங்கியதுதான் அதன் காரணமாகும்.

பழக்கங்களின் அற்புதமான கட்டுப்பாட்டு ஆற்றலை பலர் சிந்திப்பதேயில்லை. நாம் சிக்கிக் கொண்டுள்ள மிகவும் துன்பம் நிறைந்த, வெறுப்பினை ஏற்படுத்தும் வாய்ப்பு அல்லது சூழலிலிருந்து விடுவித்துக் கொள்வதற்குத் தடையாக இருப்பதும் இத்தகைய பழக்கங்கள்தான். நாள் தோறும் இருக்கும் இடம், மற்றும் சூழலிற்குப் பழக்கப் படுவதைப் போல பொருத்தமுற இருப்பதைப் போல, நம்மையறியாமலே நம்மை நாம் பழக்கப் படுத்திக் கொண்டுள்ளோம். காலைச் சிற்றுண்டி மற்றும் 'காப்பி' அருந்திய பிறகு, புகைபிடிக்கும் பழக்கம் இருப்பவரைக் கவனியுங்கள் சிற்றுண்டி சாப்பிட்டதும் அவர் சட்டைப் பையிலே சிகரெட் தீர்ந்து போயிருந்தால் கடை, இரண்டு மைல் தள்ளி இருந்தாலும் அங்கு நடந்து சென்றாவது, சிகரெட் வாங்கிப் பிடிக்காமல் இருப்பது அவரால் இயலுமா? 'பழக்கம்' என்றால் கெட்டபழக்கங்கள் என்பது பொருள் அல்ல. எல்லாப் பழக்கங்களுமே தன் விளைவுகளின் மூலம் மனிதனைக் கட்டுப்படுத்துகின்றன, வடிவமைகின்றன. நம் சாதனை – வெற்றிகள், எண்ணம் – அறிவு, நம் விருப்பங்கள் – கற்றவை, விருப்பு – வெறுப்புக்கள், கோப – தாபங்கள், ஒளிவுமறைவுகள், தந்திரங்கள், கர்வம் – மதிப்பு, வஞ்சனை – சூழ்ச்சி, அன்பு குறித்த எண்ணங்கள் வக்கிரம் என்னுமிவை, நாம் உள்ள சூழலிலிருந்து நேராகவோ, மறைமுகமாகவோ நாம் சேகரித்து முறைப்படுத்திக் கொள்ளும் பழக்கங்கள்தான், பழக்கத்தினால் ஏற்படுத்திக் கொண்ட இப்பழக்கங்களிலிலிருந்து விடுபடுவது கஷ்டம் என்பதை உணர்த்தும் அறிவார்ந்த சொல் ஒன்று ஆங்கில மொழியில் உள்ளது. Habit - என்னும் சொல்லிலிருந்து நீங்கள் 'H' என்பதை எடுத்து விட்டால் 'a



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

bit' என்பது எஞ்சுகிறது. 'a' என்பதை எடுத்துவிட்டால் 'bit' என்பது எஞ்சுகிறது. 'b'யையும் எடுத்துவிட்டால் 'it' எஞ்சுகிறது. பார்த்தீர்களா, பழக்கங்களின் ஆழமான ஆற்றலை!

## வரலாறு படைப்பவன்

நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் குளத்தின் மேல் பகுதியிலே அலைந்தாடும் அலையைப் போன்றதாகும். குளத்திலே அலைந்தாடும் அலைதானென்றாலும் சில நிமிடங்களிலேயே மறைந்து விடுகிறது. ஆனால் மனத்திலே நாம் செய்யும் ஆலோசனைகள், எண்ணங்கள் நாம் செய்யும் செயல்கள் என்னுமிவை மறைந்தது போலத் தோன்றினாலும் மனத்தின் ஆழத்திலுள்ள அடுக்குகளிலே ஸம்ஸ்கார உருவிலே (பூர்வவாசனை) எஞ்சியிருக்கின்றன இத்தகைய பற்பல ஸம்ஸ்காரங்களே ஒருங்கிணைந்து நம் நடத்தை அல்லது (ஒழுக்கம்) உருவாகிறது. "பழக்கம் மனிதனின் இரண்டாம் இயல்பு" என்னும் ஆங்கிலப் பழமொழி உள்ளது சிந்தித்துப் பார்த்தால் பழக்கம் என்பது மனிதனின் எல்லா இயல்புகளுமே என்று உணரவியலும்.

"'நடத்தை' அல்லது ஒழுக்கம் என்பது முழுமையாக வகுத்துக் கொண்ட இச்சாசக்தியாகும்" என்று ஜான்ஸ்டுயார்ட் மில் என்பவர் விளக்கம் அளித்துள்ளார் 'இச்சாசக்தி' என்றால் செயல்களைத் தொடங்கும், ஏற்று நடத்தும் எண்ணங்களின் ஒட்டுமொத்தமாகும். அவை உறுதியுடனும், முறையுடனும், ஆக்க பூர்வமான முறையிலும் வெளிப்பட்டால், அத்தகைய மனிதனின் நடத்தை உறுதியானது என்பது பொருளாகும். யாரையுமே பயனற்ற மனிதன் என்று கூறவேண்டாம். ஏனெனில் அவன் ஒரு வரலாற்றுப் பிரதிநிதியாக விளங்குகிறான். தான் ஒரு தேர்ந்த நல்ல பழக்கங்களின் மூட்டை என்பதை உணர்த்துகிறான். பழைய பக்கங்களைப், புதிய, பயன் தரும் பழக்கங்களின் மூலம் வெல்லவியலும் நடத்தை என்றால் மீண்டும் மீண்டும் வரக்கூடிய பழக்கங்களின் மொத்தமாகும் "மீண்டும் மீண்டும் செய்யக்கூடிய செயல்களின் மூலமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தையிலே முன்னேற்றம் ஏற்படவேண்டும்" என்று சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார். ஆனால் இது நடைபெறவேண்டு மாயின், நிஷ்டையுடன் கூடிய முறையான இடையற்ற முயற்சி தேவையாகும்.

## சுற்றுச்சூழலின் வலிமை

சுற்றுச்சூழலின் வலிமையிலிருந்து (சுற்றியுள்ளவர்கள் செய்யும் செய்கைகள் போன்றவை) தப்பித்துக் கொள்வதற்குத் தகுந்த வழிகாட்டுதல் மற்றும் தீவிரமான, விருப்பத்துடன் கூடிய முயற்சிகள் இல்லாதிருந்தால், மனிதனின் வாழ்க்கை எப்படி உருவெடுக்கும் என்பதை விளக்கும் ஒரு உதாரணம் உள்ளது. சாமான்ய மனிதன் ஒருவன், கொலைகாரனாக உருவெடுக்கும் முறையினைக் குறித்து. ஆராய்ச்சி செய்த நிபுணர் ஒருவரின் கூற்று ஆகும். "முதல் முறையாக ஒரு கொலையைக் கண்கூடாகக் கண்டவன், மிகவும் வருத்தப்பட்டு தாளமுடியாத தன்மையை அடைவான். சிலகாலத்திற்கு அத்தகைய செயல்கள் நடக்கும் இடத்திற்கு அருகிலேயே இருந்தால் மெதுவாக அதற்குத் தக்கபடி சகித்துக் கொள்ளும் மனநிலையை அடைவான். நீண்டகாலம் கொலைக்காரர்களின் அருகிலிருந்து கொலை, சித்திரவதைகளைக் கண்டு, அவைகளை உணர்ந்தவன், சிறிது சிறிதாக அவைகளால் ஒரு வித துணிவு அடைந்தவனாகி எத்தகைய துன்புறுத்தும் செயல்களையும் செய்வதற்குத் தயங்கமாட்டான்" சிறைச் சாலையிலேயே வாழ்நாளின் பெரும் பகுதியைக் கழித்தவர்களுக்கு தண்டனைக் காலம் முடிந்ததும், விடுதலையடைந்து வெளியே வந்தாலும் திக்கு எதுவும் தோன்றாமல் அதிகாரியிடம் "மீண்டும் சிறைச்சாலையிலே சேர்த்துக் கொள்ளுங்கள்" என்று கேட்டுக் கொள்வதும் இதற்காகத்தான். தூய்மையற்ற இடத்திலே வசித்துக் கொண்டு, நாள் செல்லச் செல்ல மனிதர்கள், தூய்மை குறித்த எல்லா நியமங்களையும் மறந்து, அந்தச் சூழலிலிருந்து விடுபடவியலாது எப்படியோ பொருத்தமுற வாழ்கிறார்கள். சுற்றுச் சூழலின் வலிமைதான் காரணமாகும் இத்தகைய மனிதர்கள் கீழ்மையிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலேறுவது இயலுமா?

பரம்பரை மற்றும் சுற்றுச் சூழலின் மூலம் பெற்ற தீயபழக்கங்களின் ஆழமான பள்ளங்களில் சிக்கிக் கொண்டு அழிந்து கொண்டிருந்த அரக்கர்களின் சமூகத்தையே மேலேற்றுவதற்கு, அரிய தியாகம், சிரமம், மற்றும் அர்ப்பித்துக் கொள்ளும் எண்ணத்தினால் போராடிய இளைஞன் ஆங்கில வணிகன் 'டங்கன்' என்பவனின் உறுதிமிக்க முயற்சி, எத்தகைய சமூகத்திற்கும் முன்னேற்றப் பாதையிலே முன்னேறுவதற்கு வழிகாட்டவல்ல உற்சாகத்தை அளிக்கவல்லது.

1857ம் ஆண்டுவாக்கிலே, கனடா நாட்டின் வடமேற்கிலுள்ள அலாஸ்காவின் அமைதிக் கடலிலுள்ள ஒரு தீவிலே, பிரிட்டனின் வணிகனின் ஒரு படகு நங்கூரம் பாய்ந்து நின்றது. படகிலிருந்த இளைஞனான வணிகன் கடல் தீரத்திலே பயங்கரக் காட்சியைக் கண்டு நடுங்கிப் போனான் சுமார் இருபதுக்கும் மேற்பட்ட சிதைவுற்ற மனிதர்களின் பிணங்கள் அங்கு தாறுமாறாகக் கிடந்தன. இளைஞன் டங்கனின் வியக்கத்தக்க மன வேதனையைக் கண்ட படகின் அதிகாரி கீழ் வருமாறு கூறினார்.

"அவர்கள் ஸிமஷூன் இந்தியர்கள், இவர்கள் தம் முன்னே எப்பொழுதும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டு சச்சரவு செய்து கொண்டு மடிகிறார்கள். அவர்கள் அரக்கர்கள். கொலை செய்வது அவர்களுக்கு ஒரு விளையாட்டு 'குடி' என்னும் தீய பழக்கத்திற்கு முழுமையாகப் பலியானவர்கள் நாள் முழுவதும் உழைத்துக் கொண்டுவந்த 'விலங்கின் மென்மயிர்த்தோலை' (Fur) அற்ப விலைக்கு விற்று சாராயம் குடிப்பார்கள். சாராயத்திற்காக, தம் வயிற்றிலே பிறந்த பெண்குழந்தைகளை விற்கவும் தயங்காதவர்கள் இவர்கள். தந்தை, அழுது கொண்டிருக்கும் தன் பெண் குழந்தைகளை கட்டாயப் படுத்தி, பலவந்தப் படுத்திப் பணத்திற்காக சிப்பாய்களிடம் ஒப்புவிக்கும் கொடூரக் காட்சியைக் கண்ட டங்கன் அஞ்சி நடுங்கினான்.வேதனையடைந்தான். "இவர்களுக்கு ஒரு வழிகாட்டி வேண்டும். இவர்களைத் திருத்துவதற்கு ஒருவர் வேண்டும்" என்னும் எண்ணம் மனத்திலே எதிரொலித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது மனிதனை நேசிக்கும் அவன் ஒரு பீஷ்ம பிரதிக்ஞையைச் செய்தான். அதுவரைக்கும் எந்த ஒரு வெள்ளைக்காரரும் செய்யாத பெரிய செயலை தான் கைக் கொள்ள வேண்டுமென்று உறுதியான முடிவிற்கு வந்து தொண்டாற்றும் துறையிலே நுழைந்தே விட்டான். தன் வாழ்க்கையையே ஆபத்திலுள்ளவர்களுக்கு உதவுவதற்கு எனத் தீர்மானித்து அந்த நாகரிகமற்றவர்களின் நடுவிலே நிலைத்தனன், அவர்கள் மொழியைக் கற்றுக் கொண்டான். மனம் நிறைந்த அன்புச் செயலால் அவர் நம்பிக்கையைப் பெறுவதற்கு முயற்சி செய்தான். வீடு வீடாகச் சென்று அவர்களை அறிமுகம் செய்து கொண்டு தூய்மையாக இருப்பதற்கு வழிமுறைகளைக் கற்றுக் கொடுத்தான். இளைஞர்களை ஒருபக்கம் ஒன்று சேர்த்துப் பயிற்சியளித்து சிரத்தையுடன் பணியாற்றும் குழுவை ஏற்படுத்தினான் அவர்களின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டங்களைக் கைக்கொண்டான். அவர்களுக்குப் பற்பல வேலைகள் கிடைக்கும் படி செய்து, உழைப்பின் பெருமை மற்றும் உற்பத்தியின் முறைகளைத் தெரியப்படுத்தினான். தானே தேவாலயங்களைத் தோற்றுவித்து. தார்மீக எண்ணங்களைப் பெருக்கினான். அவர்களில் பலமாக வேர் விட்டிருந்த தீயபழக்கங்களை போகச் செய்வதற்கு அரிய பொறுமை மற்றும் உறுதியுடன் பல்லாண்டுகள் அயர்வின்றிப் போராட்டம் நடத்தினான். இந்தச் செயல்கள் அனைத்தையும் நிர்வகிப்பது எளிமையாக இருக்கவில்லை "நற்செயல்களை செய்யத் தொடங்கியர்களுக்கு பல தடைகள்" என்னும் கூற்று அவன் பங்கிற்குத் தினமும் அனுபவமாயிற்று. யாருக்குத் தொண்டாற்றப் புறப்பட்டானோ, அவர்களிடமிருந்தே பகை வெளிப்பட்டது. அம்மனிதர்களின் தலைவர்களிட மிருந்து பகை, கீழ்நிலையிலிருந்த மனிதர்களைத் தம் பக்கம் இழுத்துக் கொண்டு பயனடைந்து கொண்டிருந்த அப்பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்த வணிகர்களின் பகை, கிறித்தவ தர்ம அதிகாரிகளின் பகை – என்னும் எல்லாத் தடைகளையும் ஒருவனாக நின்று அளவற்ற துணிவு, உற்சாகம், ஆன்ம நம்பிக்கை, இடைவிடாத போராட்டம் என்னும் இவைகளின் பலத்தினால் எதிர்த்து நின்று வெற்றிபெற்று விளங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுபது ஆண்டுகளின் முரண்பாடு, மற்றும் பகைகளின் ஊடே அவன் எண்ணம் பயன் அளித்தது. அச்சம் தரும், கீழ்மையான அநாகரிகத்தினால் கெட்ட பெயரைப் பெற்றிருந்த 'ஸிமஷுன்' ஜாதியே இன்று அமைதியை விரும்புவதாக உயர்ந்த ஒழுக்கம் மற்றும் பண்பாடு உடையதாக விளங்குகிறது. தற்சமயம் அங்கு முரட்டுத் தனமான குற்றங்கள் நடப்பதில்லை. ஒருவர் கூட மது அருந்துவதில்லை. "பழைய பழக்கங்களைப் புதிய பழக்கங்களால் வெல்லவியலும்" என்னும் விவேகம் மிக்க கூற்றைப் பயன்படுத்தி, பரீட்சை செய்து உண்மை என்று உணரவைத்தான் டங்கன். ஆனால் எத்தனை நீண்டகால சிரமம்! 1981ம் ஆண்டிலே தன் எண்பத்து ஆறாம் வயதினிலே டங்கன் இவ்வுலகை விட்டு மறைந்தார். ஆனால் ஸிமஷன் சமூகத்தினரின் கண்மணியாகி காலைநேரத்திலே வணங்குதற்குரிய புனிதமானவனானார்.

## விபூதி பூசை

நீங்கள் யாரை முழுமனத்துடன் மதித்து அன்பு செலுத்துகிறீர்களோ, அவர்களின் இயல்புகளையும் பொன் மொழிகளையும் உங்களுடையதாகச் செய்து கொள்ளுங்கள். சுதந்திரமடைவதற்கு முன்பு மஹாத்மாகாந்தி அவர்களுக்கு நாட்டு மனிதர்கள் அனைவரும் அன்பு செலுத்தி கௌரவமளித்தனர். எத்தகைய தன்னலமற்ற தியாகிகளும் மரணத்தை வென்ற கர்மவீரர்களும் அப்பொழுது தோன்றினர்! அலெக்ஸிஸ் கெரெல் அவர் கூறுவதைக் கேளுங்கள் "உயர்ந்த இயல்புகளினால் பிரகாசிக்கும் உயர்ந்த நிலையிலுள்ள மனிதர்களைச் சிரத்தை, பக்தியுடன் காணும் 'விபூதி பூசை' மனிதனின் தேவைகளில் ஒன்று அது மனம் முன்னேற்றம் அடைவதற்கு தேவையானதாகும். மக்களால் நடத்தப்படும் ஆட்சியுள்ள நாடுகளிலே (குடியரசு) இளைஞர்களுக்கு முன்மாதிரியாகவல்ல மனிதர்கள் அனைவரும் புண்ணியப்பயனாய் சமூகத்திலே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் மட்டுமின்றி, மறைந்த மனிதர்களும் இருக்கிறார்கள். அவர்கள் நம் நடுவிலே வாழ்ந்து கொண்டே இருக்கிறார்கள் அவர் மற்றும் அவர் வாழ்வில் கூறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிகளையும் குறித்துநாம் ஆலோசனை செய்யவியலும். அவர் கூறியதைச் செவிமடுத்துச் சிந்திக்க வேண்டும். சினிமா நடிகர், நடிகைகளைக் குறித்த ஆராய்ச்சிகளைவிட கோலா, தாந்தே, ப்யாஸ்டர் என்னுமிவர்களின் ஸத்ஸங்கம் நல்லது அல்லவா!

கல்வியிலே மேம்பட்டவர்களின், வீரர்களின் உயர்ந்தவர்களின் வாழ்க்கையைக் குறித்த கதைகளில் மாறுபாடற்ற ஆன்ம சக்தியின் சாரம் அடங்கியுள்ளது. அவர்கள் வெற்றுத் தரையிலிருந்து எழுந்து நின்ற மலைச்சிகரங்களைப் போன்று உள்ளனர். நாம் எவ்வளவு உயரவியலும் என்பதையும், மனத்திலே நிறைந்துள்ள அறிவின் விருப்பத்தால், 'குறி' (இலக்கு) எவ்வளவு சிறப்பானதமாக இருக்கவியலும் என்பதையும் அவர்கள் நமக்கு உணர்த்துகிறார்கள், பூசைக்கு உரியவர்களான மனிதர்கள் இல்லையெனின் எளியவர்களுக்குத் துன்பமாகிவிடும் அந்தக் கண்ணோட்டத்திலே, நீக்ரோ சமூகத்தினரை முன்னேற்றுவதற்கு ஆக்கபூர்வ திட்டங்களுடன் உழைத்துப் போராடிய பெருந்தலைவர் பூகர் வாஷிங்டன் கூறுகிறார் "நல்ல பண்பாடு உடைய நல்ல மனிதர்களின் கூட்டுறவால் கிடைக்கும் கல்விக்கு, இணையான கல்வியை எந்தப் புத்தகமோ அல்லது விலை மதிப்பற்ற துணைப் பொருட்களோ அளிக்க வியலாது என்பது வயது ஏற ஏற என் மனத்திலே தெளிவாகவும் உறுதியாகவும் உணரப்படுகிறது."

நம் நாட்டின் நல்ல மனிதர்களும், மாகன்களும், அனுபவத்தால் ஒன்று சேர்ந்த சான்றோர், கல்வி நிபுணர்கள் என்னும் அனைவரும் இந்த ஒரு விஷயத்திலே மாறுபட்ட கருத்தினைக் கொள்ளவில்லை. கெட்ட மனிதர்களின் கூட்டுறவை எல்லா முயற்சிகளினாலும் விட்டுவிட வேண்டும். எத்தகைய கஷ்டம் வந்தாலும் நல்லவர்களின் கூட்டுறவை விட்டு விடக் கூடாது. நல்ல மனிதர்களுக்கு மதிப்பளிக்காத, அவர்களால் நல்ல வழியைப் பின்பற்றாத சமூகம் முன்னேற்றமடைய வாய்ப்பு இல்லை.

*"நல்லோர் தொடர்பு சிறந்த தேனைச் சுவைத்த தனைய*
*தீயோர் தம் கூட்டுறவு சாக்கடைச் சேறு அனையதாம்"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நல்லோருடன் தொடர்பு கொள்வது சிறந்த தேனைச் சுவைப்பது போன்றதாகும். தீயோருடன் தொடர்பு கொள்ளுதல் சாக்கடையிலுள்ள சேற்றினைப் போன்றதாகும்.) என்று ஸர்வஞ்ஜன் கூறியிருப்பது நிலைத்த உண்மையாகும். மனிதர்கள் அறிவுடன், விவேகத்துடன் கற்பதைப் போன்றே இயல்பாகத் தனக்கு அறிவு இல்லாது, ஒருவரைப் பார்த்துக் கற்கும் முறை மிகவும் பயன் உடையதாக இருக்கும். இதனை நன்கு உணர்ந்தவர்களுக்கு ஞானிகளின் விழிப்புணர்வை அளிக்கும் மொழிகள் முழுவதுமாக விளங்கும்.

## மூன்று வயதின் அறிவு

ஒரு தாய், கல்விமான் ஒருவரிடம் தன் குழந்தைக்கு என்றிலிருந்து கல்வியைத் தொடங்க வேண்டும் என்று கேட்டாளாம். கல்விமான் "குழந்தைக்கு எத்தனை வயது?" என்று கேட்டபொழுது "இப்பொழுதுதான் மூன்று வயது" என்று கூறினாளாம்" ஐயோ மூன்று ஆண்டுகளா? இன்னும் கல்வியை ஆரம்பிக்க வில்லையா? விரைந்து வீட்டிற்குச் செல்லுங்கள். கல்வியைத் தொடங்குங்கள் ஏற்கனவே மூன்று ஆண்டுகளிலே தக்கசமயம் சென்றுவிட்டனவே" என்று கூறினாராம்.

குழந்தை, இவ்வுலகின் விளக்கைக் கண்ட தினத்திலிருந்தே அதன் கல்வி தொடங்குகிறது என்று கூறுகின்றனர், மனோதத்துவ விஞ்ஞானிகள். நம் நாட்டுச் சான்றோர் குழந்தை தாயின் கர்ப்பத்திலே இருக்கும் பொழுதே கற்பதற்குத் தொடங்குகிறது என்று கூறுகிறார்கள். அதாவது தாயின் இன்ப – துன்பங்கள், விருப்பம், எண்ணங்களுக்குத் தக்கபடி அந்த அதிர்வலைகளுக்குத் தகுந்தபடி அசைகிறது அதற்குத் தக்கபடி அதன் இயல்புகள், ஒழுக்கம் உருப்பெறும் என்பது அவர்களின் கருத்தாகும். தாயின் அன்பு, மற்றும் பாதுகாவலை உணராத குழந்தை தன் நீண்ட வாழ்க்கையிலே, முழுமையான தன் இயல்புகளின் வளர்ச்சிக்குத் தேவையான முக்கியமான அம்சங்களைக் களைந்து கொண்டு விடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவேதான் "குழந்தைகளின் பள்ளிக்கூடம் வீடு" "பெரியோரின் முறையான வாழ்வு சிறியவர்களின் கை எழுத்துச் சட்ட ஏடு (copy - book)", தமக்கையின் நடத்தை வீட்டிலுள்ளோர்க்கு முன் மாதிரி", "மூன்று வயதின் அறிவு நூறு ஆண்டுகள் வரைக்கும்" என்னும் அனுபவம் நிறைந்த மொழிகள், குழந்தையின் மனத்தை வடிவமைப்பதிலே வீட்டுச் சூழ்நிலையும், மற்றும் தாய் – தந்தையாரின் பொறுப்பின் மேன்மையையும் உணர்த்துகின்றன.

'கல்வி' என்றால் எழுதுவதும், படிப்பதும்தான் என்று நாம் உணர்ந்ததைப் போல் தோன்றுகிறது. குழந்தை, பள்ளிக்கூடம் செல்லும் முன்பு, மொழியை எங்ஙனம் கற்றுக் கொள்கிறது என்று ஆராய்ந்தால் போதும், அது கற்பதன் இரகசியம் நமக்கு புலப்படும். குழந்தை, வீட்டிலுள்ளவர்கள் செய்வதைப் பார்த்தே எல்லாவற்றையும் கற்றுக் கொள்கிறது. தாய் – தந்தையரின் சகோதர – சகோதரிகளின் மொழிகளைக் கேட்ட வண்ணம் மெல்ல மெல்ல ஒலிகளை உச்சரித்து இயல்பாகவே மொழியைக் கற்றுக்கொண்டு விடுகிறது. மொழிமட்டுமன்று பெரியவர்களின் ஒவ்வொரு நடவடிக்கையையும் பின்பற்றுகிறது. பெரியவர்களின் ஆசை, விருப்பங்களை, விருப்பு – வெறுப்புக்களை, ஆக்கபூர்வமான – மறுத்து ஒதுக்கும் எண்ணங்களை, செயல்களை, வெறிச்செயல்களை அறிவற்ற நடவடிக்கைகளையும் தன்னுடையதாகச் செய்து கொள்கிறது. குழந்தையின் எதிர்காலத்தை வடிவமைப்பதிலே பெரியவர்களின் பொறுப்பு எவ்வளவு பெரியது என்பதை பலரும் கவனிப்பதில்லை.

## குழந்தைகளின் மேன்மைக்கு

இக்காலத்திலே பல தாய் – தந்தையர், தம் குழந்தைகளின் கல்விக்காக பணம் செலவு செய்வதிலே பின்னடைவதில்லை. குழந்தைகளின் எதிர்காலம் ஒளிமயமாக இருக்க வேண்டும் என்னும் அவர்களின் கனவு இயல்பானதுதான். ஆனால் தம் குழந்தைகள் கற்கும் பொழுது எத்தகைய யோசனைகளையும், எண்ணங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைத்துக் கொண்டுள்ளனர், எத்தகைய பழக்க வழக்கங்களைப் பின்பற்றுகிறார்கள் என்பதைக் குறித்து விழிப்புணர்வு அடைந்துள்ளார்களா? எழுதப், படிக்கத் தெரிந்த குழந்தைகள் வாழ்க்கைப் போரை எதிர்கொள்வதற்கு உதவி புரியும் விசாரங்களை விட, மனிதர்களின் பலவீனங்களை மனமீர்க்கும் வகையில் காட்டும் விவரிக்கும் எண்ணற்ற திரைப்படங்கள் மற்றும் எழுத்துக்கள் மூலம் போதுமான அளவிற்கு வல்லமையைப் பெற்றிருப்பார்கள். ஆராய்ச்சி செய்த விஞ்ஞானிகளை, துணிவுடன் உழைத்த மனிதர்களை, தன்னலமற்ற தியாகிகளை. செயல் வீரர்களை, தேசபக்தர்களை, சமூகத் தொண்டு ஆற்றுபவர்களை, கடவுளை நம்பி வாழ்ந்த நல்லோர்களின் வாழ்க்கையைக் குறித்த செய்திகளை அவர்கள் படிப்பதே இல்லை என்று கூறினாலும் மிகையில்லை. மனிதர்களின் ஒழுக்க மேம்பாட்டிற்குத் தேவையான துணைப் பொருட்களை, வளர்ச்சியின் மிகச்சிறந்த சமயத்திலே (கால கட்டத்திலே) அளிக்காமலிருப்பது ஒரு பெரிய துரதிருஷ்டம் மட்டுமன்று 'கல்வி நிபுணர்கள்' என்று எண்ணிக் கொண்டுள்ளவர்களின் பெற்றோர்களின் இயலாமை அல்லது தொலை நோக்கற்ற தன்மைக்குப் பிடித்த கண்ணாடியுமாகியுள்ளது. மனிதனின் நடத்தையை ஏற்படுத்துவதில் ஆலோசனை மற்றும் நல்லவகையில் உருப்பெறுவதற்கு ஏற்றவற்றை ஏற்படுத்தும் பழக்கங்களின் தகுதிகளின், விலை மதிப்பற்ற தன்மையையும், பெருமையையும் உணர்ந்தவர்களால் மட்டுமே இதனைப் புரிந்து கொள்ளவியலும்.

பழக்கங்கள் என்பது முதலிலே, சிலந்திவலையின் நூலைப் போன்றதாகும், ஆனால் காலம் செல்லச் செல்ல "இரும்புக் கம்பிகளைப்போல, நம்மை உறுதியாகப் பற்றிக் கொள்கின்றன" என்னும் பழமொழி, சிறுவயதிலிருந்தே நல்ல பழக்க வழக்கங்களை வடிவமைத்துக் கொள்ளும் தேவையைத் தெரிவிக்கின்றன. எல்லா பழக்கங்களைக் காட்டிலும் மிகவும் முக்கியமான, பெரும் பயனை விளைவிக்கிற பழக்கம் எது? "ஒரு நல்ல பழக்கத்தைப் பழக்கிக் கொள்ள நாம் வளர்த்துக் கொள்ள வேண்டிய எச்சரிக்கை அல்லது விவேகமாகும்". நல்லதனத்திலே நம்பிக்கை நல்லவனாக வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும்தீர்மானங்களே நம்மைத் தவறுகளிலிருந்து விடுபடும் வண்ணம் செய்யும் சக்தியை அளிப்பதில்லை. நாம் பழக்கப்படுத்திக் கொண்ட வேண்டாத பழக்கங்களை மறக்க வேண்டும். புதிய பழக்கங்களை நம்முடையவையாகச் செய்து கொள்ள வேண்டும். ஒருமனிதன் இருபதிலிருந்து முப்பது வயதிற்குள் அறிவு வளர்ச்சி மற்றும் செய்யும் வேலை தொடர்பான பழக்கங்களைச் சேகரித்திருப்பான். தனி மனிதனின் தூய்மை தொடர்பான நியமம் சொல் மற்றும் உச்சரிக்கும் முறை, அழகு உணர்ச்சி, அங்க சேஷ்டை, நடை என்னுமிவற்றை இருபது வயதிற்குள் கற்றுக் கொண்டு விடுகிறான் என்று கூறுகிறார்கள்.

"சில நாட்களில் உருப்பெறும் வழக்கங்களின் மூட்டைகளாக நாம் ஆகிறோம்" என்பதை, வாழ்வினை வடிவமைப்பதற்கு இயலக்கூடிய இளம்பருவத்திலேயே சிறியவர்கள் உணர்ந்து கொண்டால், அவர்கள் தம் நடத்தையின் பால் மிகுந்த கவனத்தை அளிக்கவியலும் "என்றென்னும் மாற்றவியலாத அதிருஷ்டத்தை நாம் தினமும் நெய்து கொண்டிருக்கிறோம்" என்று மனோதத்துவ விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அதனால் எழுத்துப்படிப்புடன் வாழ்க்கையை முறைப்படுத்தும் பற்பல நெறிமுறைகளை ஏற்படுத்தும் திசையிலும் பெற்றவர்களும், ஆசிரியர்களும் எவ்வளவு கவனம் செலுத்த வேண்டும்!

விடுதிப் பள்ளிக்கூடத்தில், (Residential School) கல்வி நிலையத்திலே நீண்டகாலம் பணிபுரிந்த ஒரு பெரியவர் தன் அனுபவத்தைப் பின்வருமாறு கூறினார். "நம் 'விடுதி' கல்வி நிலையத்திலே ஐந்து ஆண்டுகள் இருந்து, நன்றாகப்படித்துத் தேர்ந்து, தற்சமயம் நல்ல வேலையிலே உள்ள, மதிப்புடன் விளங்கும் பழைய மாணவனைக் கேட்டேன் "நீ வேறு இடத்திலே கற்பதற்கு அனுகூலமில்லாத இங்குக் கற்றுக் கொள்ளவியன்ற சிறந்த பழக்கம் அல்லது ஒழுங்கு முறை என்ன? "ஐயா, உங்களிடம் உண்மையைக் கூறுகிறேன். நான் முதலிலே மூன்று, நான்கு நாட்களுக்கு ஒரு முறைதான் குளித்துக் கொண்டிருந்தேன். ஐந்து ஆண்டுகள் இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து தினமும் குளிப்பது பழக்கமாகி விட்டது. இப்பொழுது ஒருநாளும் குளிக்காமல் இருப்பது இல்லை" என்று அவன் கூறினான். குளிப்பது நல்லது என்று உணர்ந்த மாத்திரத்தில் தினமும் குளிப்பது பழக்கமாகி விடுவது இல்லை. நீண்டகாலம் தப்பாமல் தினமும் குளிப்பதால் அது பழக்கவசமாகிறது. இளம் பருவத்திலிருந்தே பெரியவர்கள் தினமும் குளிக்கச் செய்திருந்தால் அது சாத்தியமாகிறது.

'விடுதி' கல்வி நிலையத்திலே இருந்த எனக்கு பலவகையான சுற்றுச்சூழலைச் சேர்ந்த மாணவர்களையும், அவர்களின் நெறிமுறைகள், திறமைகள், விருப்பங்களையும் ஆராய்வதற்கு நேரம் இருந்தது. ஒரு காலை நேரத்திலே, புதிய மாணவர்கள் முகத்தைத் தூய்மைசெய்து கொள்ளும் முறையைக் கண்டு வியப்பு ஏற்பட்டது. கல்லிலே ஒட்டிக் கொண்டுள்ள பாசியை, மணல் கொண்டு பலமாகத் தேய்ப்பது போல, பற்பசையை (Paste) Brush –ல் நிறைத்துக் கொண்டு நன்றாகச் சத்தம் வரும்படி பல் தேய்த்துக் கொண்டிருந்தனர். ஈறுகளிலிருந்தும் இரத்தம் வருமளவிற்கு அழுத்திப் பல் தேய்க்கும் பழக்கம் சிலரிடமுள்ளது. எல்லாப் பற்களும் தெளிவாகக் காணும் படியுள்ள, மண்டையோட்டைக் காண்பித்து, உணவுத் துகள்கள் பல்லின் இடுக்குகளில் எவ்விதம் சிக்கிக்கொள்கிறது. அவை பற்களை எப்படிப் பாழ் செய்கின்றன ஈறுகளுக்கு வலியாகாத வண்ணம், Brush ஐ விதவிதமான முறைகளில் பற்களின் உட்பகுதி மற்றும் வெளிப்பகுதியில் எப்படித் திருப்ப வேண்டும் என்பதை விவரித்துக் காட்டினேன். சொல்லிக் கொடுத்த புதிய முறையினைப் பின்பற்றுகிறார்களா என்பதை இரண்டு மூன்று நாட்கள் ஆராய்ந்தேன். பலரும் பழைய முறையிலேயே ஒட்டிக் கொண்டிருந்தனர். "பற்களைத் தேய்த்து, தூய்மையாக வைத்துக் கொள்ளுங்கள் என்னும் அறிவுரையின் மூலம் மாணவர்கள் அப்பழக்கத்தைப் பழக்கிக் கொள்வார்களா? நாமே செய்து காட்டி, சிலமுறை அன்பினால் சிலமுறை சிலரை அதட்டிச் சொல்லித் திருத்தி சரிசெய்து அப்பழக்கம் உறுதியாக நிலைக்க வழிசெய்ய வேண்டுமல்லவா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தட்டு, குவளை, (Tumbler) தேக்கரண்டிகளை நாமே தேய்த்துக் கொள்ளலாம். சிறிது சேமிக்கவியலும் என்று குறிப்பிட்டேன் ஆனால் அனைவரும் நான் ஒரு விவகாரஞானமற்றவன் என்பதைப் போல கேலி செய்தனர்" தொழில் நுட்பக் கல்வி நிலையத்தில், படித்துக் கொண்டிருந்த மாணவன் ஒருவன் தன் ஒரு அனுபவம் குறித்து குறிப்பிட்டான். விடுதியிலே கூட்டத்திலே (Meeting) மாணவர்களின் செயல் குழுவினர் மற்றும் பணியாளர்களின் 'இக்கட்டு' குறித்து விவாதிக்கும் பொழுது அவன் கொடுத்த ஆலோசனைக்கு, அவன் நண்பர்கள் காட்டிய எதிர்ச்செயல் அது.

"எழுதப் படிக்கத் தெரிந்து கொண்டு" 'கற்றவர்கள்' என்று உணர்ந்தவர்களில் பலர், உடலால் உழைக்கும் எந்தவொரு செயலையும் கீழாகக் காணும் பழக்கத்தை நம் நாட்டிலே வழக்கத்திலே கொண்டுள்ளனர்" கோடை விடுமுறையை முடித்து, பள்ளிக்குத் திரும்பிய மாணவன் ஒருவன் பெரியவர்களிடம் கபடின்றி பின்வருமாறு கூறினான். "ஐயா, இம்முறை வீட்டிற்குச் சென்றபொழுது தூய்மை செய்து கொள்வதற்கு முன்பும், பின்பும் 'கழிவுக்கலத்'திற்கு (Commode) நீர் ஊற்றுவதற்கு மறக்கவில்லை. அதன் முதல் நியமமுறைகளைச் செயல்படுத்தும், சரிசெய்து திருத்திக் கொள்ளும் ஏற்பாட்டிலே அவன் முதல் அடியை எடுத்து வைத்தாகிவிட்டது அல்லவா?

தனிமனித, மற்றும் சமூகத்தின் சுகாதாரப் பழக்க வழக்கங்கள். சொன்னதைக் கேட்டல், நெறிமுறைகள். காலம் குறித்த அறிவு (Time), ஒருவருக்கொருவர் உதவும் மனப்பான்மையுடன் ஒரு செயலிலே பங்கு எடுத்துக் கொள்வது, ஆசிரியர்களிடத்திலும் பெரியோர்கள் இடத்திலும், மதிப்பு, அன்புடைமை, நடத்தையிலே பணிவு, விருந்தினர், மற்றும் தானாகவே வந்த விருந்தினரை உபசரிக்கும் முறைகள், நல்லதைக் கண்டு நிறைவான மனத்துடன் புகழ்தல் என்னும் எல்லா இயல்புகளையும் பின்பற்றி நடப்பதற்குத் தக்க வழி காட்டுவோரின் மேற் பார்வையிலே வகுப்புக்கள் நடத்துவது அவசியமானதாகும். தனிமனிதனாகத் தான் நன்மையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைவதற்கும், சமூகத்திலே ஒரு மனிதனாகச் சமூகத்திற்கு நன்மைபயக்கும் வண்ணம் நடந்து கொள்வதற்கும் தேவையானது என்னும் இவை வடிவு கொள்ளாதிருந்தால் கல்வி முழுமையாவதில்லை, அதுமட்டுமல்ல ஆபத்தானதும் கூட.

## இயலாததும் இயலும்

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் ஆங்கில மாத இதழிலே, ஜப்பான் பயணத்தை முடித்துத் திரும்பியிருந்த இந்தியர் ஒருவர். "ஜப்பான் சக்திவாய்ந்த நாடாக ஆனதற்குக் காரணம் என்ன?" என்னும் கட்டுரையை வெளியிட்டிருந்தார். அவர் பெற்ற பல அனுபவங்களிலே ஒன்றிரண்டினை மட்டும் இங்கு, படிப்பவர்கள் அறியவேண்டும் என்று கொடுத்திருக்கிறேன். அவரை நூற்றாண்டிற்கு முன்னரே மனிதகுலம், சமூகத்திற்கு என ஒழுக்கமுறை அமைதி, உதவும் எண்ணம் போன்றவற்றைச் செயல்படுத்திய ஒரு நிகழ்ச்சியாகும் ஜப்பான் நாட்டிலுள்ள ஒரு கிராமத்திலே இருநாட்கள் தங்கியிருந்தேன். அங்கு ஒரு வெந்நீர் நீர் ஊற்று இருந்தது. அங்கு ஜப்பான் நாட்டின் பயணக் குழு ஒன்று வந்திருந்தது. சுமார் ஐந்நூறு வயதானவர்களும். நூற்று ஐம்பது குழந்தைகளும் அக்குழுவில் இருந்தனர். அத்தனைபேர் அங்கு கூடியுள்ளார்கள் என்பதைக் கண்கூடாகக் காணாதிருந்தால் ஊகித்து அறியும்படி இருக்கவில்லை அனைவரும் அவ்வளவு மௌனமாக இருந்துகொண்டு தம் தம் செயல்களைச் செய்வதிலே மூழ்கியிருக்கும் பழக்கத்தை முறைப்படுத்திக் கொண்டிருந்தனர். அங்கு ஒரு சபையிலே ஆயிரக்கணக்கானோர் கூடியிருந்தாலும் மௌனம் நிலவுகிறது. நடத்தையிலே நயம்மிக்க கம்பீரம். உழைப்பதிலே விருப்பம் மற்றும் ஒரு முனைப்பாடு, நெறிமுறைகள், எளிமையான வாழ்க்கை என்னும் இயல்புகளை கூட்டத்திலும் காணவியலும் என்பதை எழுத்தாளர் தம் அனுபவங்களின் ஆதாரத்தின் மூலம் விளக்கியுள்ளார். ஜப்பானியர்கள் வளர்த்துக் கொண்ட 'நன்றி மறவாகடமைக் கடன்' குறித்த சில சான்றுகளைக் கொடுத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கிழங்கினை முதன் முதலாக ஒரு கிராமத்திற்குச் கொண் சென்று, அதனை அறிமுகப்படுத்திய ஒரு ஜப்பானிய பிரஜையின் இனிய நினைவிற்காக, ஒரு நினைவுக் கம்பத்தை நிறுத்தியுள்ளார்கள், ஒரு நல்ல மரத்தை நட்டவனுக்கு, உதவிபுரிவதற்குச் சங்கத்தை அமைத்து மனிதர்களுக்கு உதவி செய்த ஒருவனுக்கு, ரஷ்யா, சைனா போர்களில் இறந்த வீரர்களுக்கு, குஸ்திப் போட்டியிலே வென்ற இளைஞர்களுக்கு, அவரவர்களின் கிராமங்களிலே ஒவ்வொரு நினைவுச் சின்னம் உள்ளது. அந்த நினைவுச் சின்னங்கள் எளிமையாக இருந்தாலும், சமூகத்தின் நல்ல வளர்ச்சிக்காக, சிறிய உதவி செய்தவர்களையும் நினைக்கும் மனிதர்களின் சிறப்பைக் குறிக்கும் சாட்சிகளாக விளங்குகின்றன. இளையவர்கள், நல்லதைக் கண்டு அறிந்து நன்றியுணர்வுடன் அதை நினைந்து கௌரவிக்கும் நல்ல முறையினை வழக்கத்திற்குக் கொண்டு வருவதற்கு உற்சாகமூட்டும் சான்றாக அது உள்ளது"

சில ஆண்டுகளுக்கு முன் கன்னடமொழியில் ஒரு புத்தகம் வெளிவந்தது. அதன் பெயர் "எக்ஸ்போ 70" அப்புத்தகத்தில், இளைஞர்களுக்கு வழிகாட்டவல்ல உறுப்பினர்களின் பயண அனுபவங்களை விவரிக்கும் இருபது கட்டுரைகள் உள்ளன. ஒவ்வொருவரும் தான் ஜப்பான் நாட்டிலே கண்ட மனிதர்களின் வாழ்வுமுறை, அந்த மக்களின் சாதனை, வெற்றிகளை மனத்தைத் தொடும் வகையிலே தெரிவித்துள்ளனர். நம்நாட்டு இளைஞர்கள் அனைவரும் படிக்க வேண்டிய புத்தகம் அது. அதில் காணப்படும் ஒரு நிகழ்ச்சியின் விவரத்தைப் படியுங்கள்.

'டோக்கியோ பல்கலைக் கழகத்திலே 37 லட்சம் புத்தகங்கள் உள்ளன. பல ஆண்டுகளாக அங்கு புத்தகம் களவு போவதில்லை. புத்தகத்தைத் தவறாகப் பயன்படுத்தும் மாணவனுக்குத் தண்டனை என்னவென்று நூலகரைக் கேட்டபொழுது, அவன் தனக்குத் தெரியாது என்று கூறி விதிமுறைகளைக் காணச் சென்றான். அத்தகைய சூழ்நிலை அவன் அனுபவத்திலே வரவில்லை அவனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படித் தெரிந்திருக்கவியலும்? ஒரு சமுதாயம், தன் இளைய தலைமுறையினருக்கு எத்தகைய உயர்ந்த நெறி முறைகளை வகுக்கவியலும்! இளம் பருவத்திலிருந்தே நல்ல பழக்கங்களைக் கல்வியை அளித்து எத்தகைய உயர்ந்த பிரஜைகளாகச் செய்ய வியலும்! ஆலோசனை செய்து பாருங்கள். 'அமெரிக்காவின் மாய உலகம்' எனப்புகழ்பெற்ற 'டிஸ்னிலேண்ட்'டிற்குத்., தினமும் நாற் பதாயிரம், ஐம்பதாயிரம் மனிதர்கள், பார்வையாளர்கள் வருகின்றனர். விடுமுறை நாட்களிலே அந்த எண்ணிக்கை ஒரு லட்சம் வரைக்கும் ஏறுகிறது. ஆனால் அங்கு எங்குமே தள்ளுவது, நுழைவது என்பது இல்லை. எத்தனை அருமையான ஏற்பாடு எனின், சில இடங்களில், ஒரு 'பர்லாங்' நீளத்திற்கு வரிசையிலே நின்றிருந்தாலும், 'நீண்டநேரமாகக் காத்து இருக்கிறோம்' என்னும் உணர்வு வருவதில்லை, மிகுந்த விரைவாகவே நம் வரிசை வருகிறது என்றே தோன்றுகிறது என்று அமெரிக்கா சென்று விட்டுத் திரும்பிய நண்பர் ஒருவர் கூறினார்.

## பழக்கத்தின் பின்னிலை

ஒரு புதிய பழக்கத்தைக் கற்றுக் கொண்டு பழக்கம் செய்து கொண்டு. உறுதி செய்து கொண்டு அதனை மனத்திலே நிலை நிறுத்துவதற்கு மிகவும் உறுதியான தீர்மானத்துடன் தொடங்க வேண்டும். அலைபாயும் தன்மை, உறுதியற்றதன்மை என்னும் இவை எத்தகைய நெறிமுறைக்கும் உட்படாத பலவீன நிலைகளாகும். இத்தகைய மனத்தின் ஆற்றல் ஒரே காலத்தில் பல இடங்களுக்குச் சென்று வீணாகிப் பயனற்றுப் போகிறது. இத்தகைய மனிதர்களால் எத்தகைய சிறந்த செயலையும் செய்ய வியலாது. சிறிய வேலையாக இருப்பினும், ஒழுங்கான முறையிலே மனத்தைச் செலுத்திச் செய்வதால், வேலை செய்யும் ஆற்றல் உற்பத்தியாகிறது.

சைக்கிள் சவாரி செய்வதிலே அனுபவம் நிறைந்தவர்களைக் கூர்ந்து கவனியுங்கள். சைக்கிளில் சவாரி செய்து கொண்டு இருக்கும் பொழுதே, நண்பர்களிடம் பேசிக்கொண்டு, சுற்றியுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையழகைச் சுவைத்துக் கொண்டு, வீதியிலே எதிர்ப்புறமாக வந்து கொண்டிருக்கும் வாகனங்கள் மற்றும் மனிதர்களின் நடுவிலே, அச்சம், குழப்பம், நடுக்கமின்றி வழிசெய்து கொண்டு முன்னால் செல்கிறான். எங்கு 'பிரேக்' போட வேண்டுமோ, அங்குதானே அதாவது கவனமிட்டு, யோசிக்காமல் சரியாக 'பிரேக்' போட்டு விடுகிறான். ஒரு பழக்கத்தால் மிகுதியான ஆற்றல் மீதப்படுத்தப்படுகிறது. பழக்கத்தினால் வந்த அந்த ஒரு வழக்கத்துடன், மற்றொரு சிறிய ஆக்கபூர்வமான பழக்கத்தையும் தொடங்கவியலும். தினமும் குளிக்கும் பொழுது கணக்குப் பாடத்தின் ஒரே சூத்திரத்தையோ, கவிதையின் துணுக்கையோ, அல்லது ஒரு சுலோகத்தையோ மனப் பாடம் செய்யவியலும். குளிப்பதும் எந்தத் தடையுமின்றி நடைபெறுகிறது. அத்துடன் சிறந்த, உயர்ந்த விஷய சேகரிப்பும் நடைபெருகிறது.

பழக்கம் வெற்றிபெற வேண்டுமாயின், நிஷ்டையுடன் இடைவிடாது சாதனை செய்வதற்குத் துணை புரியும் ஒவ்வொரு வாய்ப்பையும், எச்சரிக்கையுடன் கவனித்துப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பழைய நிலைக்கு உம்மைத் திரும்ப இழுக்கவல்ல வாய்ப்புக்களுக்கு எதிரான இடம், காலம், வாய்ப்புக்களைத் தோற்றுவித்துக் கொள்ள வேண்டும். முடிவாக உங்கள் பிரதிக்கினை, (பிரதிக்ஞை) அல்லது தீர்மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கு ஒவ்வொரு வாய்ப்பையும் பயன் படுத்திக் கொள்ளவேண்டும் இப்படிச் செய்தால் மட்டுமே, தீர்மானத்தை பங்கமுறச் செய்யும் அலைபாயும் தன்மை, தடுமாற்றம் இவைகளிலிருந்து வெளி வரவியலும். புதிய பழக்கம், மனம், நரம்புமண்டலம் இவற்றிலே ஆழமாக வேர்ஊன்றும் வரை, திட்டமிட்ட சாதனையை ஒருநாள் கூட விடக்கூடாது. ஒரு நாள் குறிப்பிட்ட காரணங்களால் 'பழக்கம்' தடைப்பட்டால், மறு நாள் எப்படியாவது, நெறிமுறை, நியமங்களிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு மனம் காரணத்தைத் தேடும்.

புகழ்பெற்ற 'பூப்பந்தாட்டக்காரர்' திரு. பிரகாஷ் படுகோணே அவர்களின் நிஷ்டையுடன் கூடிய பழக்கத்தின் அற்புத ஸாகஸத்தை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் பெற்ற விருது வெற்றிகளின் கதையைக் கேட்டு, நகரத்தின் பற்பல பகுதிகளிலே இளைஞர்கள் 'பூப்பந்தாட்ட சங்கங்களைத் தோற்றுவித்தனர். தினமும் நிஷ்டையுடன் பயிற்சி செய்வதற்கு அவர்கள் தீர்மானித்தனர். உற்சாகத்துடன் தினமும் 'கிளப்பி'ற்குச் சென்றனர். ஏழெட்டு நாட்கள் பயிற்சி செய்த பொழுது, பலவகைப் பட்ட காரணங்களால் ஒவ்வொருவராக தப்பிக்கத் தொடங்கினர். ஒரு மாதத்திற்குள்ளாகவே, அவர்கள் உற்சாகத்துடன் 'கிளப்'பும் மறைந்தது. திரு. பிரகாஷ் படுகோணே அவர்கள் இடைவிடாமல் பதினேழு ஆண்டுகள் காலம், தினமும் இடைவிடாத நிஷ்டையுடன் பயிற்சி செய்தால் ஆரம்பவீரர்களாக விளங்கிய இந்த இளைஞர்கள் பதினேழு நாட்களுக்காவது பயிற்சியைத் தொடரவியலாதவர்களாக இருந்தனர்.

வெறும் நல்ல தீர்மானம், சிறிது உத்வேகம் உற்சாகங்களே செயல் வெற்றிக்கு போதுமானதாகாது. நியமங்களிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு மனம் எப்பொழுதும் ஏதாவது வழியைத் தேடிக் கொண்டிருக்கும். நியமத்திற்குத் தலைவணங்கி, அதற்கு ஏற்ப தினமும் தப்பாமல் பொறுமையுடன் முயற்சி செய்ய வேண்டும் அல்லவா?

## தன்னைத் தானே திறனாயும் பயிற்சி

நம் தனிமனித இயல்புகளை வடிவமைக்கும் விருப்பம் நமக்கிருந்தால், நம் எழுச்சிக்கு நாமே சிற்பிகள் ஆகவேண்டுமெனின், 'சிங்கநோட்டத்தின்' (சிங்கப்பார்வையின்) பயிற்சியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்று அனுபவத்திலே உணர்ந்தவர்கள் கூறுகின்றனர், காட்டிலே திரியும் சிங்கம், சில சமயங்களில், தன் முகத்தைத் திருப்பித் தான் நடந்து வந்த பாதையைப் பார்க்கும் என்று கூறுகின்றனர், இதனை "சிங்கப் பார்வை" என்று கூறுவர், தினமும் நடைபெறும் நிகழ்ச்சிகளை, 'சிங்கப்பார்வை'யின் முறையிலே ஆராய்ந்து பார்க்க வேண்டும். "மனத்தை தினமும் ஆராய வேண்டும் தினமும் செய்யும் பாவ –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணியம் அகலும்'' என்னும் தாசரின் பொன்மொழியிலும் அப்பயிற்சியின் தேவை குறித்துக் குறிக்கப்பட்டுள்ளது. நாளின் இறுதிப் பகுதியிலே, உறங்கும் முன்பு, 'என் ஆயுளிலே வந்த இந்த ஒரு நாளை எப்படிக் கிழித்தேன் எனக்குக் கிடைத்த வாய்ப்புக்களை நான் எங்ஙனம் பயன்படுத்திக் கொண்டேன்? நாளை, அத்தகைய சமயங்களிலே எப்படி நடந்து கொள்ள வேண்டும்? இப்பொழுது செய்ய வேண்டியிருந்த செயல்களை, வெளியிலுள்ள கட்டாயத்திற்காக, அழுத்தத்துடன் முணுமுத்தபடிச் செய்தேனா என் சொந்த ஆலோசனையையும், திட்டத்தையும் அனுசரித்து உற்சாகத்துடன் செய்தேனா? இன்னும் நன்றாகச் செய்து இருக்கவியலுமோ? நண்பர்களுடன், உறவினர்களுடன் மற்றும் அக்கம்பக்கத்திலே இருப்பவர்களுடன் எப்படி நடந்து கொண்டேன்? என்னும் இவைபோன்ற கேள்விகளைக் கேட்டுக் கொண்டு, திரையிலுள்ள சித்திரத்தைப் பார்ப்பது போன்று அவற்றை அசைப்போட்டு நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கண்டு திருத்தங்களைச் செய்து கொள்ளவியலும். கண்ணாடியிலே, நம் முகத்தைக் கண்டு சரி செய்து கொள்வதைப் போல, நம்மை நாமே திறனாய்வு செய்து கொள்ளும் முறையினால் நமக்கும், பிறருக்கும் ஆகாத இயல்புகளை விட்டுவிடவும் இயலும். மேன்மையான இயல்புகளை வளர்த்துக் கொள்ளவும் இயலும் என்பதைப் பெஞ்சமின் பிராங்க்லின் அவர்கள் தன் சொந்த அனுபவத்தினால் கூறியுள்ளார்.'

பயிற்சியை மேற்கொள்வதிலே முதற் படியினைத் தாண்டிப் பிறகு மேலே உயர்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். முதலிலேயே சுமக்க வியலாத சுமையினைச் சுமந்தவனின் பாடு ஆயிற்று எனின் பிறகு செய்யும் முயற்சியிலே, உற்சாகம் குன்றும் சம்பவம் இருக்கும். முதல் முயற்சியிலே ஏற்பட்ட வெற்றி, பிறகு செய்யும் முயற்சியை வழிநடத்தும் சக்தியாக ஆகிறது. அதனால், முதன் முதலிலே, எளிய, சிறிதுநேரமே தேவைப்படும். எளியசிரமத்தினால் சாத்தியமாகும் பயிற்சிகளை நிஷ்டையுடன் சாதிக்க வேண்டும். "யாருடைய வாழ்விலே, தீர்மானம் செய்யப்பட்ட பழக்கங்கள், பயிற்சிகள் இல்லாமல், எல்லாமே உறுதியற்று, ஏற்பாடற்று காலையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுக்கையை விட்டு எழுவது இரவிலே ஓய்வு எடுத்து உறங்குவது, உணவு உட்கொள்ளுதல் ஒரு சிகரெட் பற்றவைத்துக் கொள்வது, ஒரு குவளை நீர் அருந்துவது போன்று மிகவும் சிறய செயல்களையும் எண்ணி, நினைத்துக் கடைந்து செய்ய வேண்டியுள்ளதோடு அவனைப் போலத் துயரம் உடையவன் வேறுயாருமில்லை. அவன் பாதிநேரம், என்ன செய்யலாம் என்று தீர்மானிப்பதிலும், வீணாகக் காலம் செல்கிறதே என்று வருந்துவதிலுமே வீணாகி விடுகிறது. அவன் விழிப்பு நிலையிலே செய்ய வேண்டிய, தேவையான செயல்கள் குறித்துச் செய்யவேண்டுமா? வேண்டாமா? போன்ற சந்தேகங்களே வரக்கூடாது. அவனையறியாமலேயே, பிறவி இயல்புகளுக்கு ஏற்ப அன்றைய கடமைகளை இயல்பாகக் கஷ்டப்படாமல் செய்யும் வகையிலே இருக்க வேண்டும். இம்முறையிலே அன்றாடக் கடமைகளை நிர்வகிப்பதிலே, இத்தகைய இயல்பற்றவர்கள், இன்று முதலே அதனைச் சரிசெய்து கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்'' என்று மனோதத்துவ விஞ்ஞானி கூறியுள்ளார்.

## முயற்சியே சிறப்பான பூஜை

நம் நாட்டின் புகழ்பெற்ற தத்துவநூலான, ''யோக வாஷிஷ்டத்தில்''[1] தான் செய்யும் முயற்சியைக் குறித்துக் கூறப்பட்டுள்ள மொழிகளைக் கேட்டு இருக்கிறீர்களா? ''முறையான உற்சாகத்துடன் கூடிய முயற்சியால் அடைவதற்கு இயலாத பொருள் எதுவுமே இவ்வுலகத்திலில்லை. யாராவது எந்தப் பொருளையாவது அடைய விரும்பி, அதனை அடைவதற்கு முயற்சி செய்தால், அவர் கண்டிப்பாக நல்ல பயனடைவார். ஆனால் ஏற்ற வழியிலே பின்னடிவைக்காது முன்னேறிக் கொண்டிருக்க வேண்டும். இவ்வுலகிலே பலரும் தம் சூழ்நிலைகளிலிருந்து, துயரம் ஏழ்மைகளிலிருந்து விடுபட்டு நல்ல பாக்கியசாலிகளானார்கள். அறிவுத் திறமையுடையவர்கள், முயற்சியினால் மட்டுமே மிகவும் ஆபத்தான கட்டங்களைத் தாண்டி வெற்றியடைந்தனரன்றி, அதிருஷ்டத்திலே அர்த்தமற்ற நம்பிக்கையைக் கொண்டிருக்க வில்லை. யார் எதனை விரும்புகிறானோ, அதனை அடைவதற்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராடுகிறானோ அதனை கண்டிப்பாக அடைவான். சோம்பேறியாக இருந்து யாரும் எதனையும் சாதிக்கவில்லை. ஒவ்வொருவரும், தனக்குத் தானே பகைவன் அல்லது தனக்குத் தானே நண்பன் என்பதையறிய வேண்டும். யாரால் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வியலாதோ அவனைக் காப்பாற்றுவதற்கு யாரும் இருப்பதில்லை. கண்டிப்பாக ஒருவன் தன் முயற்சியாலேயே, துயரம் நிறைந்த சூழ்நிலையிலிருந்து விடுபடுவான். ஆகையால் ஒவ்வொருவரும், சரியான வழியிலே நிஷ்டையுடன் முன்னேறவேண்டும். தைரியம் உடையவர்களும், ஸாஹஸம் செய்பவர்களும், ஞானிகளும் ஆன மகான்கள் யாரும் அதிருஷ்டத்திற்காகக் காத்துக் கொண்டு இருக்கவில்லை.

"அதிருஷ்டத்தின் கற்பனை தேவையற்றது. காரணம் என்னவெனின், நாம் எங்கு பார்த்தாலும் முயற்சி, மற்றும் உழைப்புமே பயனளிப்பதைக் காண்கின்றோமேயன்றி, உழைக்காத நிலையையன்று. உழைக்குமாற்றல் முழுமையாக மறைந்த பிணத்திலே அதிருஷ்டத்தினால் ஏதாவது நிகழ்வதை நாம் என்றுமே கேட்டதில்லை அதிருஷ்டம் எதையுமே செய்வதில்லை. நம் கற்பனையில் மட்டுமே அதிருஷ்டத்திற்கு இடமுள்ளது. அதிருஷ்டத்திற்கு அதனால் ஆனது என எதுவுமே இல்லை. அதிருஷ்டம் என்பது ஏற்கனவே நாம் செய்துள்ள செயல்களின் நல்லதான அல்லது கெட்ட பலன்களின்றி வேறு எதுவுமில்லை. ஒரு மனிதன் சுயமுயற்சியின் பயனாக எது நடைபெறுகிறதோ, அதனை நாம் அதிருஷ்டம் என்று கூறுகிறோம். ஒரு மனிதனின் முயற்சியையே, அவன் அடையும் வெற்றி சார்ந்து நிற்கிறது.

## விதியா - ஆற்றலா

நம் நாட்டிலே "தேன வினா த்ருணமபி ந சலதி" என்று ஒரு புல்கூட, கடவுளின் அருளின்றி அசையாது (அவனன்றி அணுவும் அசையாது என்று தமிழ் மொழியிலே இருப்பதைப்போல) என்னும் விதிவாதிகள் உள்ளனர் சுயமுயற்சியால் எல்லாவற்றையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையனும் என்றுகூறும் வீரவாதிகளும் உள்ளனர். மனிதர்கள் சூழ்நிலையின் அடிமைகள் என்று சிலர் கூறுகின்றனர். தன் ஒட்டுமொத்த இயல்புகளின் மேன்மையால் சூழ்நிலையையே மாற்றவல்ல திறமை மனிதனுக்கு இருக்கிறது என்று வேறு சிலர் கூறுகின்றனர். சுய முயற்சி, மற்றும் விதி என்பது தேரின் இரண்டு சக்கரங்களைப் போல, கத்திரிக்கோலின் இரண்டு அலகுகளைப் போன்றது என்றும் கூறுவார்கள். 'தலை எழுத்து', 'க்ரஹசாரம்', 'கர்மபலம்' என்னும் இவை, நாம் எந்தச் செயலிலாவது தோற்றால் கூறும் சொற்களாகும். 'தத்துவம்' என்னும் கோணத்திலிருந்து அவைகளுக்கு என்ன அர்த்தம் இருப்பினும், நம் போராடியே ஆக வேண்டும் ஸாஹஸத்துடன் தள்ளிக் கொண்டு போக வேண்டும். சுயமுயற்சியிலே நம்பிக்கை வைத்து, சிரத்தையுடன் உழைக்க வேண்டும். 'ஆறுவரைக்கும் மனிதனின் முயற்சி ஏழாவது கடவுளின் அருள் என்னும் கூற்று உள்ளது. சாதனையின்றி, உற்சாகமின்றி இடைவிடாத உழைப்பு இன்றி, இவ்வுலகத்திலே யாராவது உயர்ந்த நிலையை அடைந்துள்ளனரா?

விதி, அல்லது அதிருஷ்டத்தை நம்பிக்காத்துக் கொண்டு சோம்பேறியாகக் காலம் கழித்தால், எச் செயலையும் செய்ய வியலாது. அத்தகைய எண்ணம் மனிதனைக் கோழையாகச் செய்துவிடும். தாமஸ இயல்புகளிலேயே இருக்கும் அடிமையாகச் செய்து விடும். மனிதர்கள் தங்கள் பலவீனத்தினால் பல தவறுகளைச் செய்வதற்கே முயற்சிப்பார்கள். ஆனால் அந்தத் தவறுகளை விதியின்மீது, அதிருஷ்டத்தின் மீது, கிரகங்கள் நட்சத்திரங்களின் மீது ஏற்றிவிடுவார்கள். அத்தகைய ஒருமனிதன் கவனமின்றிக் கால் வழுக்கி விழுந்து நிலத்தைக் குறை கூறியதைப் போன்றதாகும். விதியைப் பழித்தலைப் போன்றதாகும். (நிலத்தைக் குறைகூறினானாம். விதியைப் பழித்தானாம்)

குறியை (இலட்சியத்தை) அடைவதற்கு, தடையாக இருக்கும் 'விதி' என்பது இருந்தால், சுயமுயற்சியின் மூலம் ஒவ்வொரு மனிதனிடத்தும் அடங்கியுள்ள உள் ஆற்றலை விழிப்படையச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதின் மூலம் வெல்லவியலும். விதியே, எல்லா ஆற்றலையும் பெற்றதாகியிருந்தால் நியாய – அநியாயங்கள் நல்ல – தீய இயல்புகள் ஆன்மசக்தி என்னும் இவைகுறித்த பேச்சே இருந்திருக்காது. மனிதர்கள் கற்பாறைகள் அல்ல. 'நான் அப்படிச் செய்வதற்கு விதிதான் காரணம். என் செயல்களுக்கு நான் பொறுப்பு இல்லை. உதவியற்ற நிலையிலே நான் அதிருஷ்டத்தின் மூலம் முன்னால் தள்ளப்பட்டு வருகிறேன்' என்னும் எண்ணங்களால் எந்த மனிதனுக்கும் முன்னேற்றம் என்பது சாத்தியமில்லை. தான் பலவீனமானவன் என்னும் கண்ணிற்குப் புலப்படாத அதிருஷ்டத்தின் கருணையால் தான் இருக்கிறோம் என்று உணர்வது மனிதனின் அஞ்ஞானம் மற்றும் கீழ்நிலையைத் தவிர வேறு ஒன்று அல்ல. யார் இறைவனிடம் தஞ்சமடைந்து, முழுமையான மனத்துடன் வேண்டிக் கொண்டு வாழும் ஆற்றலைப் பெற்றுள்ளானோ அவன் மட்டுமே நான் கருவி. கடவுள் இக்கருவியை இயக்குபவர் என்று சொல்லவல்லவன் ஆவான். அவன் கனவுகாணும் பொழுது கூட, தவறான அடியை எடுத்து வைக்க மாட்டான். யாருக்கும் தீங்கு செய்யமாட்டான். அவன் எப்போதும் அனைவரின் நலனை விரும்புபவன். தன்னலமற்ற தன்மையின் இருப்பிடமாகி, பிறரின் நன்மைக்காக வேண்டிக் கொள்ளும் பெருமையுடையவனாவான்.

## தகுதிக்குக் கிடைத்த அதிருஷ்டம்

அண்மையிலே, ஒரு இளைஞன், மிகவும் புகழ் பெற்ற விளையாட்டுப் பத்திரிகை ஏற்படுத்தியிருந்த ஒரு போட்டியிலே கலந்துகொண்டு பத்தாயிரம் ரூபாய் பரிசினைப் பெற்றான். அனைவரும் அவன் அதிருஷ்டத்தைக் கண்டு வியந்தனர். தம் மகிழ்ச்சியைப் புலப்படுத்தி நன்றியை வெளிப்படுத்தினர். அவன் நம் பள்ளியின் பழைய மாணவன் ஆவான். 'அத்தகைய பரிசு வரும் என்று கனவிலும் எண்ணவில்லை' என்று அவன் என்னிடம் கூறினான். "அதிருஷ்டத்தைத் தவிர வேறு என்ன" என்று அவன் நண்பர்கள் கூறினர். அவனும் சிரித்துக் கொண்டே 'ஆமாம்' என்பதைப் போலத் தலையாட்டினான். ஆனால் அது லாட்டரிப் போட்டியில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்கள் அனைவரும் சென்ற பிறகு அவன் மட்டும் இருந்த பொழுது, நான் ஒரு கேள்வி கேட்டேன். 'நீ எத்தனை ஆண்டுகளாக அந்த விளையாட்டுப் பத்திரிகையைப் படிக்கிறாய்?' 'ஆறாம் வகுப்பிலிருந்து படிக்கிறேன்' என்று கூறினான் இப்பொழுது அவன் பி.யு.ஸி முடிந்திருக்கிறான். இந்த ஆறு ஆண்டுகளிலே வெளிவந்த பத்திரிகையின் ஒவ்வொரு இதழையும் விடாமல் படித்தான். விளையாட்டுப் போட்டிகளிலே, அதன் தொடர்புடைய செய்திகளிலே அவனுக்கு முதலிலிருந்தே விருப்பம் இருந்தது. குழந்தைகள் இனிப்புப் பொருட்களை விரும்புவதுபோல அவன் அந்தப் பத்திரிகையை விரும்பினான். அது கைக்குக் கிடைத்தவுடனேயே, முதலிலிருந்து இறுதிவரை பலமுறைகள் அதை அவன் படிப்பான். இந்த ஆறு ஆண்டுகளிலே, பந்தயம் போட்டிகள் தொடர்பான எத்தனைச் செய்திகளை அவன் சேர்ந்திருக்கவியலும் என்பதை யோசித்துப் பாருங்கள். அந்த அறிவின் துணைகொண்டு, லட்சக் கணக்கானவர்கள் பங்கு பெற்ற போட்டியிலே, மிகவும் உயர்ந்த இடத்தை அடையும் ஆற்றலை அவன் பெற்றிருந்தான். பரிசு குறித்து அவன் என்றுமே எண்ணிப்பார்த்ததில்லை. தகுதியைத் தேடிக் கொண்டு, அது அவனிடம் வந்தது அல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RELIGION

All revolutions have failed except for religion. Religion is real and can change the world. People want to talk about change, however cling to the past. Therefore, the real revolution has been avoided while the unreal revolutions have been practiced. Revolutions, such as political, social, economic etc has been tried because people know they are doomed to fail. Having the joy of being a revolutionary, the person can move on with no risks. These revolutionaries are escapists used to avoid reality. For example, society does not exist; it is the individual that makes up a society that is real. Thus, in order to change, one must try to change the individual, not the society. For 5,000 years man has dreamt about a changed society. However, the society does not change, only the forms. One slavery changes into another; one type of ruler changes into another type of ruler; one oppression changes into another; while oppression continues, exploitation continues, and misery continues. However, religion is the only revolution that can change the man's consciousness and heart. You will say "Then what about all these religions such as Christianity, Hinduism, etc?" They are again escapes from the real. For instance, when Jesus comes to the world, he brings reality. He says "God is within you and you must change your existence with you by love and awareness. By these two means, you inner alchemy can totally transform." Jesus, however, was crucified because we cannot allow such dangerous people on earth. The Socrates was also crucified due to their continuous interest in other people's affairs. Although, whether you crucify Jesus or poison Socrates or worship Buddha, it is all the same. Worshipping is a way of escaping and far more cultured. If Jesus was born in India, he would not have been crucified. Indians know better ways of destroying; they would have worshipped him! Indians would have said "you are an avatara. Come to earth. Here, we will worship and admire you, but not follow you!" Thus, when you call someone an avatara you are referring them to be



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

superhuman. You are saying that it is perfectly good for you to talk about change (radical change) but since we are ordinary people we cannot transform. You are saying that naturally you come from god, thus you are good, whereas ordinary people are sinners. We can't have that intrinsic goodness, but will try! This statement gets forgotten and untried. Thus, it is considered to be a means of crucifying. For example, Christians are not what Christ wanted them to be; Hindus are not what Krishna wanted them to be; Buddhists are not what Buddha wanted them to be. Actually, they are the opposites. These opposite characters are reasons for postponing the practice of religion. For example, in Christianity, Jesus says "Ask and it shall be given. Seek and ye shall find. Knock and the door shall be opened unto you." Therefore, someone asked Meister Echkart (a very religious person) "When Jesus says ask and it shall be given, why don't people ask? If he says seek and ye shall find, and he says knock and the doors shall be opened, then why don't people knock?" Echkart laughed and said "for two reasons; first off people don't want to feel frustration if they ask and it is not given; secondly it is frightening if what is asked is given. Due to these two reasons, people do not try, they simply pay lip service. Although the world is generally religious, it is surrounded by a dark cloud of unconsciousness. You have to be aware of this, because it explains the wrong doing of people back in the day. Christianity, Hinduism, Islamic, Buddhism, Jainism are not true religions. Christ is true, but Christianity is false. Buddha is true, but Buddhism is false. Why? You may ask and I shall tell. All 'isms' are created by us to act according to our needs and prejudices. However, Buddha, Christ, Krishna, etc is not created by us. It is a real existence in spite of us. They fought to be! This exact reason is why the stories of Buddha, Christ, and etc are untrue. The real person is lost. We have created such a mist, such durst around, that the real person can not be seen. Nobody cares about the message any more. The message is very simple; become a Christ not a Christian; become a Buddha not a Buddhist and etc. The reason for this is because no 'ism'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

can contain Buddha like wise no church can contain Jesus and etc. If you understand the message, you will start looking for these gods inwards. He is not outside; he is in the innermost core of yours being. If religion really occurs, then there will not be religions but religiousness. The time for religious practice has come and it cannot be prevented. Man has become mature. This is why there is so much turmoil; no old religion is relevant. People are becoming anti-religious because the old religions do not apply no more. This is why people are becoming godless because god is rotten. Now, we need a new vision of god, a new approach. Man is too restricted and cannot live with the old religion. The current religions are impotent. Thus, either give a new religiousness to the world or the world is going to become irreligious. Therefore, man needs a new dispensation, and the new dispensation will not be a book or a sect or a church; that it will be quality, so people can be religious. Religiousness can become just a way of life. Religious people will walk differently for non religious people. The difference is awareness. Religious people will act differently than non religious people. The difference is that his action will come out of love. A religious person will be a conscious person; not Christian, not Hindu, not Mohammedan. It is at this moment where man is fed up. This simply shows that a quantum leap is possible. Now, religion cab be tried! Up till now God has been a parent figure, a child's projection. The projection provided protection, but now man is not afraid. Man wants to go into insecurity. Thus, now we can search for the truth of God, which can be found through the truth of consciousness. You can see only that for which you are ready. The more conscious you are, the more reality you experience. When you have reached the ultimate peak, Samadhi, then all is available to you. Now, is the time to bring together all that is beautiful in all those great adventures to build the foundation of a new religiousness. It is finally time! Man has internally suffered a lot! Now, man's roots have to be changed and the keys are available. Actually, they have always been available, but never been used.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி

*– சுவாமி விவேகானந்தர்*

## கல்வியின் முக்கியத்துவம்

கல்வி, கல்வி, கல்வி ஒன்றே இப்போது நமக்குத் தேவை. ஐரோப்பாவின் பல நகரங்களுக்கு நான் பிரயாணம் செய்திருக்கிறேன். அங்கே சாதாரண ஏழை எளிய மக்களுக்குக்கூடக் கிடைத்திருக்கும் வாழ்க்கை வசதிகளையும் கல்வியையும் நான் கவனித்திருக்கிறேன். அப்போதெல்லாம் நமது நாட்டு ஏழை எளிய மக்களை நினைத்து நான் கண்ணீர்விட்டு அழுதிருக்கிறேன். இந்த வேறுபாட்டிற்கு என்ன காரணம்? கல்வி என்பதுதான் எனக்குக் கிடைத்த விடை.

ஒரு நாட்டின் முன்னேற்றம் அதன் பொதுமக்களுக்கு கல்வி ஞானம் கிடைக்கும் அளவிலேதான் தங்கியுள்ளது. கைத்திறன் வாய்ந்த தொழிலாளர் நாளிற்கு நாள் ஐரோப்பிய போட்டியைத் தாங்காமல் மடியக் காரணம் கல்வியறிவின்மையே ஆகும். தாழ்ந்த நிலையிலுள்ள நம்முடைய மக்களுக்கு கல்வியைத் தந்து, இழந்துவிட்ட தங்களின் உயர்ந்த நிலையை வளர்த்துக் கொள்ளும்படி செய்ய வேண்டும். இதுதான் நாம் இப்போது செய்ய வேண்டிய ஒரே சேவையாகும். உயர்ந்த கருத்துக்களை அவர்களுக்குக் கொடுங்கள். அதன் விளைவாக மற்ற நன்மைகள் எல்லாம் தானே வந்து சேரும்.

## கல்வி என்றால்...

கல்வி என்றால் என்ன? அது புத்தகங்களைப் படிப்பதா? இல்லை! அல்லது அது பல்வேறு விடயங்கள் பற்றிய அறிவா? அதுவும் இல்லை!! எத்தகைய பயிற்சியின் மூலம் மனவுறுதியின் வேகமும், அது வெளிப்படும் தன்மையும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு, பயன்தரும் வகையில் அமைகிறதோ, அந்தப் பயிற்சிதான் கல்வி ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் உள்ளார்ந்த பரிபூரணம் நிறைந்தவன். அறிவு என்பது அனைத்து மனிதரிலும் இயல்பாக அமைந்துள்ள ஒன்று; அது வெளியேயிருந்து பெற்றுக் கொள்ளப்படுவதல்ல; அது அகத்தே அமைந்திருப்பது. ஆனால் இது ஒவ்வொரு மனிதரிலும், பல்வேறு காரணங்களால், பல்வேறு அளவுகளில் மறைக்கப்பட்டுள்ளது. மனிதனுக்குள் ஏற்கெனவே புதைந்து இருக்கும் அந்தப் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்த உதவுவது கல்வியேயாகும்.

## உண்மையான கல்வி

கல்வி என்பது மூளைக்குள் பல விடயங்களைப் போட்டு திணித்து வைப்பதல்ல. வெறுமனே விடயங்களைச் சேகரிப்பது மட்டுமே கல்வியாயின், வாசிகசாலைகளன்றோ மகான்களாகவும், அகராதிகளன்றோ மகரிஷிகளாகவும் இருக்க வேண்டும். நூற்றுக்கணக்கான நூல்களை நாம் படிக்கலாம். குழந்தையின் மனதில் நொடிக்கு 50,000 வார்த்தைகளைத் திணிக்கலாம். கொள்கை, கோட்பாடு கற்பிக்கலாம். ஆனால் உண்மை கற்பிப்பது ஒரேயொரு விஞ்ஞானம் – அதுதான் மனஇயல். வெறும் புள்ளிவிவரங்களைச் சேகரித்துக் கொண்டிருப்பதல்ல, மனதை ஒருமுகப்படுத்துவது தான் கல்வியின் அடிப்படையான இலட்சியமாகும். உண்மையில் கல்வி என்பது மூச்சை அடக்குவதில்தான் ஆரம்பிக்கிறது. மனஒருமைப்பாட்டைப் பெற்றபின்னர். அப்பரிபூரணமான கல்வியின் உதவியால், வேண்டிய பொழுது தேவையான தகவல்களைச் சுலபமாக சேகரித்துக்கொள்ள முடியும்.

வெளியே ஓடும் மனத்தைத் தடுத்து நிறுத்திய, தலைமுறை தலைமுறையாக நிலவிய கல்விமுறை இப்போது கிட்டத்தட்ட அழிக்கப்பட்டுவிட்டது. இதுவா கல்விமுறை? மனிதனை மெல்ல மெல்ல இயந்திரமாக்கிக் கொண்டு வருவதும் ஒரு கல்வியா? பல்கலைக்கழகங்கள் கடந்த ஐம்பது ஆண்டுகளில் எதைச் சாதித்திருக்கின்றன? சுயமாகச் சிந்திக்கும் உண்மையான மனிதன் ஒருவனையும் அவை உருவாக்கியதாகத் தெரியவில்லை. அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறும் தேர்வு நடாத்தும் நிறுவனங்களாக மட்டுமே இயங்கிக் கொண்டிருக்கின்றன. பொது நலத்திற்காக நம்மைத் தியாகம் செய்ய வேண்டும் என்ற கருத்து நமது நாட்டில் இன்னமும் வளராமலேயே இருக்கிறது.

வாழ்க்கைப் போராட்டத்தை எதிர்கொள்ளும் வலிமை பெற்றவர்களாக மக்களை மாற்ற உதவாத கல்வி, உறுதியான நல்ல ஒழுக்கத்தையும், பிறருக்கு உதவிசெய்யும் ஊக்கத்தையும், சிங்கம் போன்ற மனவுறுதியையும் வெளிப்படுத்த உதவாத கல்வி – அதைக் கல்வி என்று சொல்வது பொருத்தமா?

எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மனவலிமையை வளர்க்கச் செய்யுமோ, விரிந்த அறிவைத் தருமோ, தன்னம்பைக்கையைத் தந்து ஒருவனைத் தனது சொந்தக் கால்களில் நிற்கும்படி செய்கிறதோ, அதுதான் உண்மையான கல்வியாகும்.

## கற்றல்

கல்லினுள் நெருப்பு இருப்பது போல, மனிதனுள் அறிவு மறைந்துள்ளது. கல்லை ஒன்றோடொன்று மோதும் போது தீ வெளிப்படுகிறது. புறத்தே தோன்றும் குறிப்பின் மூலம் அறிவு வெளிப்படுகிறது. பழம் நிலத்தினை நோக்கி வீழ்ந்த குறிப்பினைக் கண்ட நியூட்டனின் பண்பட்ட உள்ளத்திலிருந்து வெளிப்பட்ட முடிவினை 'நியூட்டனின் ஈர்ப்பு விதி' என இன்று கற்கிறோம். ஆகவே எல்லாவிதமான சக்திகள் இயற்கையின் இரகசியங்கள், ஆற்றல்கள், அறிவு, ஞானம் எனப் பலவாறாக நாம் கூறும் அனைத்தும் நம்முள்ளேதான் இருக்கின்றன. மனித ஆன்மாவே சகல ஞானத்திற்கும் பிறப்பிடமாக இருக்கிறது. இது வெளிப்படாத வண்ணம் மூடியிருக்கும் திரைகளை அகற்றுதலே (கல்வி) கற்றல் ஆகும். இவ்வாறு அறியாமையெனும் திரையை, படிப்படியாக அகற்றுவது அறிவின் வளர்ச்சியாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதன் 'அறிகிறான்' அல்லது 'கற்கிறான்' என்று சொல்கிறோம். அதை மனோதத்துவ சாத்திரத்திற்கேற்ற மொழியில் சொல்வதனால் 'அதைக் கண்டுகொள்கிறான் அல்லது அறியாமைத் திரையை நீக்குகிறான்' என்றுதான் சொல்லவேண்டும். நான்றாக ஆராய்ந்து பார்க்குமிடத்து, எல்லையற்ற அறிவுக்களஞ்சியமாகிய ஆன்மாவை மூடியிருக்கும் அறியாமைத் திரையை நீக்குதலே 'கற்றல்' என்பதன் பொருளாகும்.

உண்மையில் எவரும் மற்றவரிடம் கற்பதில்லை. ஒவ்வொருவரும் தாமாகவே கற்றுக் கொள்ள வேண்டும். புறத்தேயுள்ள ஆசான் தூண்டுகிறார் – அகத்தேயுள்ள ஆசான் விழித்தெழுந்து அறிந்து கொள்ள நமக்கு உதவி செய்கிறார். நம்முடைய அனுபவத்தினாலும், எண்ணங்களினாலுமே எல்லாம் தெளிவாகின்றன.

## கற்றலுக்கு அவசியமானவை

கல்வி மற்றும் அறிவு வளர்ச்சிக்கு மிக அவசியமானது ஒன்று உண்டு – அதுதான் மனத்தை ஒருமுகப்படுத்துதல் என்பது. மனதை ஒருமுகப்படுத்துகிற அளவுக்கு அறிவு வளர்ச்சியும் அதிகம் ஆகும். பேராசிரியர்களும், மாணவர்களும், இன்னும் அறிவு வளர்ச்சிக்காகப் பாடுபடுவோர் அனைவரும் மனத்தை ஒருமுகப்படுத்துவதன் மூலமே தங்கள் அறிவை அபிவிருத்தி செய்து கொள்ளுகின்றனர்.

கவனம் சிதறாது, ஏனைய சிந்தனைகள் இல்லாது, குறித்ததொரு விடயத்தில் தொடர்ச்சியாக மன த்தை ஈடுபட வைக்கும் ஆற்றலே மனஒருமைப்பாடு ஆகும். ஒரு புள்ளியில் மனதை ஒருமைப்படுத்த நாம் விரும்பினால் மனம் அங்கே செல்ல வேண்டும். நாம் விடுவிக்க விரும்பினும் மனம் விலக வேண்டும். கவர்ச்சியான பொருளில் நம்மையும் மீறி மனம் குவிக்கப்படுகின்றது. அதை எளிதில் பற்றுவது போன்று, அதிலிருந்து விலக முடிவதில்லை. பற்றல், விலக்கல் ஆகிய இரண்டு ஆற்றல்களையும் வளர்க்க வேண்டும். மனதில் இருந்து அர்த்தமானவற்றை விலக்கும் ஆற்றல் இல்லாதது தான் பெரும்பாலான துன்பங்களுக்குக் காரணம். (பயனுள்ளவற்றை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றல், (பயனற்றவற்றை) விலக்கல் – இந்த இரண்டு ஆற்றல்களும் ஒருங்கே ஏற்படுவது தான் மனதின் ஒழுங்கான வளர்ச்சி.

செருப்புத் தைப்பவனுங்கூட தன் வேலையில் மனத்தை ஒருமுகப்படுத்தினால் நன்றாக செருப்புத் தைக்க முடியும்; சமையற்காரன் தன் வேலையில் மனத்தை ஒருமுகப்படுத்தினால் நன்றாகச் சமையல் செய்வான்; கல்வி கற்பதிலாகட்டும், பணம் சம்பாதிப்பதிலாகட்டும், கடவுளைத் தொழுவதிலாகட்டும் – எதைச் செய்வதிலாகட்டும் மன ஒருமைப்பாடு அதிகமாயிருக்கும் வரை அது நன்றாக நடைபெறும். எத்துறையில் வெற்றி பெறுவதாக இருந்தாலும் அது மன ஒருமைப்பாட்டில் தான் பிரதானமாகத் தங்கியுள்ளது.

சாதாரண மனிதன் தன் மனோசக்தியில் நூற்றுக்குத் தொண்ணூறு வீதத்தை வீண் செய்துவிடுகிறான். இதனால்தான் அவன் அடிக்கடி தவறுகள் செய்கிறான். பண்புடைய மனத்தைப் பெற்றவன் ஒரு தவறும் செய்யமாட்டான். மனிதனுக்கும் மிருகத்துக்கும் இடையிலான முக்கிய வித்தியாசம் மனதை ஒருமுகப்படுத்துவதில் தான் இருக்கிறது. ஏன் ஒரு மனிதனின் செயலாற்றுலுக்கும் இன்னொரு மனிதனின் செயலாற்றலுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டின் பிரதான காரணமும் இந்த மனதை ஒருமுகப்படுத்தும் சக்தியில் தான் தங்கியுள்ளது.

இந்த மன ஒருமைப்பாட்டை வளர்க்க முடியுமா? "முடியும்" என்கிறார்கள் எமது யோகிகள், மகான்கள். "மனதை முற்றிலுமாகக் கட்டுப்படுத்தலாம்" என்பது அவர்களின் கூற்று. நாம் தற்போது இருக்கும் நிலையில் எமது மனம் ஒருமுக்கடாது – பல நூறு விடயங்களைச் செய்வதால் நம் சக்தி வீணாகிறது. நம் மனத்தை ஒருமுகப்படுத்த முயன்றவுடன், நாம் விரும்பாத பல எண்ணங்களும் உணர்ச்சிகளும் தோன்றி மனத்தை ஒருமுகப்படாது முடியாமல் செய்கின்றன. இவற்றை அடக்கி மனத்தை நம் வசப்படுத்துவது எங்ஙனம் என்பதை இராஜ யோகம் நமக்குக் கற்பிக்கிறது. கிரமமாகத் தியானம் செய்து வருவது மனஒருமையைத் தரக்கூடிய சிறந்த சாதனமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றலுக்கு அவசியமான இன்னொன்று, பிரம்மச்சரியம். இதைச் சரிவரக் கடைப்பிடிக்கும் ஒரே ஒரு காரணத்தாலேயே, எல்லாவிதமான கல்வியறிவையும் மிகக் குறுகிய காலத்தில் கற்று தேர்ச்சி பெற்றுவிட முடியும். பிரம்மச்சரியம் பேணுபவன், ஒரேயொருமுறை தான் கேட்கும் விடயங்களைத் தெளிவாக கிரகித்துக் கொள்ளும் சக்தியையும், சிறந்த ஞாபக சக்தியையும் பெறுகின்றான்.

பிரம்மச்சரியம் என்பது காமத்தை அடக்கி, மனம், வாக்கு, காயம் என்ற மூன்றிலும் , எல்லா இடங்களிலும், சகல சந்தர்ப்பங்களிலும், பரிசுத்தமாயிருப்பது அகும். பிரம்மச்சாரியாக இருக்க விரும்புகிறவர், புறத்தூய்மையில் மட்டுமன்றி, தான் எண்ணும் எண்ணங்களிலும், பேசும் வார்த்தைகளிலும், செய்யும் செயல்களிலும் தூய்மை உடையவராக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு மாணவனுக்கும், பிரம்மச்சரியத்தை அனுசரித்து பரிசுத்தமான வாழ்க்கையைப் பின்பற்றத்தக்க பயிற்சி அளிக்கப்படல் வேண்டும்.

காம உணர்ச்சியை அடக்கி அதை மகத்தான ஆன்மீக சக்தியாக மாற்றிக் கொள்ளுங்கள். ஆன்மீக சக்தி அதிகரிக்கும் போதுதான் ஒருவனால் மாபெரும் காரியங்களைச் சாதிக்க முடியும், கடினமான காரியங்களைச் செய்துமுடிக்க முடியும். பிரம்மச்சரியத்தை சரிவர அனுஷ்டிக்காததால் தான் நம்நாடு இவ்வளவு சீர் குலைந்திருக்கிறது.

கற்றலுக்கு சிரத்தையும் தன்னம்பிக்கையும் அவசியம் ஆகும். வேதத்திலும், உயிர் போன்ற உட்பொருளாய் உரைக்கப்பட்டுள்ளது சிரத்தை, ஆர்வம் என்பவையே. இந்தச் சிரத்தையே, யமனை நேரிற்காணவும், யமனை எதிர்த்து வாதாடவும் தேவையான துணிவை நசிகேதனுக்கு அருளியது. ஒவ்வொரு மாணவனுக்கும் கல்வியில் அத்தகைய சிரத்தை இருக்க வேண்டும். சிரத்தையால் அடைய முடியாதது என்று எதுவுமே இல்லை. "அறிவற்றவன், சிரத்தை இழந்த மனிதன், ஐயுறுகின்ற மனிதன் கெட்டே போகிறான்." இதனால் தான் நாம் கேட்டின் அண்மையில் இருக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனைப் பலவானாக்குவது அவனிடமிருக்கும் தன்னம்பிக்கை. மற்றொருவனைப் பலவீனன் ஆக்குவது, அவனிடம் அந்தத் தன்னம்பிக்கை இல்லாமையே. ஒருவன் "நான் சகல சக்தியும் பெற்றவன், எதையும் செய்யக் கூடியவன்" என்று நினைப்பானானால் அவன் அப்படியே ஆவான். அதைவிடுத்து ஒருவன் "நான் சக்தியற்றவன், ஒன்றுமில்லாதவன், தாழ்ந்தவன்" என்று நினைப்பானானால் அவன் சக்தியற்றவனாகவே ஆகிறான்.

## ஆசிரியரின் கடமை

ஒரு செடி தனது இயல்பிற்கேற்பவே வளரும்; வெளியிலிருப்பவரது விருப்பங்களுக்கமைய அது வளர்வதில்லை. ஆனால் அதன் வளர்ச்சிக்கு உதவும் பொருட்டு நிலத்தைக் கிளறி விடலாம், வேலியிட்டு மற்றப் பிராணிகள் அதை அழிக்காமல் காப்பாற்றலாம்; அது வளருவதற்குத் தேவையான அளவு பசளை, தண்ணீர், ஒளி, காற்று முதலியவற்றை அவற்றுக்குக் கொடுக்கலாம் – இவ்வளவோடு நம் வேலை நின்றுவிடுகிறது. செடி, தனக்குத் தேவையானது அனைத்தையும், தானே உட்கொண்டு, தானே ஜீரணம் செய்ய வேண்டும். இரசாயனப் பொருட்களை உரிய சூழலில், உரிய அளவுகளில் ஒன்றாகச் சேர்த்து வைப்பதுதான் நம் கடமை. இயற்கை விதிமூலம் படிகமாதல் நிகழும். அது போலத் தான் மாணவர்களுக்கு ஆசிரியர் செய்யும் உதவியும்.

எமது சமய ஞானிகளின் கூற்றுக்களின்படி ஒரு சிறுவனிடம் முழு அறிவும் உள்ளது. அதனை வெளிப்படுத்துவதற்கு உதவி செய்வதே ஆசிரியரின் வேலை. ஆசிரியர் தான் கற்பிப்பதாக எண்ணுவாரானால் எல்லாவற்றையும் கெடுத்துவிடுகிறார்! சகல ஞானமும் மனிதனுக்குள்ளேயே இருக்கிறது; அதைத் தூண்டி எழுப்புவதே ஒரு ஆசிரியரின் வேலை. மாணவர்கள் தங்கள் கை, கால், கண், செவி, உடல் ஆகியவறைச் சரியாகப் பயன்படுத்தவும், தங்கள் சொந்த அறிவை உபயோகப்படுத்தவும் தெரிந்து கொள்ளும் அளவிற்கு ஆசிரியர்கள் அவர்களுக்கு உதவி செய்தால் போதுமானது. இதுவே ஒரு ஆசிரியரின் பிரதான கடமை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெற்றோரின் பங்கு

கழுதையை நன்கு புடைத்தால் அது குதிரையாகும் என்று யாரோ சொல்லக் கேட்டு அவ்விதமே ஒருவன் செய்தான் என்று ஒரு கதையுண்டு. இத்தகைய முறையிலேயே நம் பிள்ளைகளுக்கு தற்போது கல்வி வழங்கப்படுகிறது. பிள்ளைகளின் விஷயத்தில் பெற்றோர் அதிகமாகப் பிரவேசித்துச் சிறு விஷயங்களிலும் தங்கள் விருப்பம் போல் செய்யும்படி வற்புறுத்துவதாலேயே அவர்கள் சுயமாகச் சிந்திக்கும் பழக்கத்தை இழந்து சரியான வளர்ச்சியடையாமல் போய்விடுகின்றனர். எதிர்மறை எண்ணங்கள் பிள்ளைகளைப பலவீனப்படுத்துகின்றன. சில பெற்றோர்கள் "நீங்கள் உதவாக்கட்டைகள், மடச்சாம்பிராணிகள்" என்று தினமும் தமது பிள்ளைகளைத் திட்டுவதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். அப்பிள்ளைகள் பல சமயங்களில் உதவாக்கட்டைகளாகவும் மடையர்களாகவும் ஆகிவிடுவதை நீங்கள் கண்டதில்லையா?

உடன்பாட்டு முறையில் அவர்களுக்கு உயர்ந்த எண்ணங்களையும் இலட்சியங்களையும் கருத்துக்களையும் கொடுத்தால். அவர்கள் சுயேட்சையாகத் தாங்களே தங்கள் காரியங்களை நிர்வாகம் செய்யக்கூடிய சக்தியைப் பெறுவார்கள். கல்வியிலாகட்டும் அல்லது இதர கலைகளிலாகட்டும், வேறு எந்தச் செயலிலாகட்டும் பிள்ளைகள் செய்யும் குறைகளைக் காட்டிக் கடிவதில் மட்டும் பயனில்லை. அவர்கள் குற்றங்களின்றி எவ்விதம் இன்னும் நன்றாய் தங்கள் பணிகளைச் செய்ய முடியும் என்பதையும் எடுத்துக் காட்டவேண்டும். சுதந்திரமே மனித வளர்ச்சிக்கு முதல் அவசியம். ஒருவனுக்குச் சுயேட்சையளித்தால் அவன் பலம் பெற்றுச் சிங்கம் போலாக வழியுண்டு.

நீங்கள் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டிய பெரிய உண்மை இது. "நாம் அனைவரும் சர்வசக்தியும் வாய்ந்த இறைவனின் குழந்தைகள்; அந்த எல்லையில்லாத தெய்வீகச் சோதியினின்றும் தோன்றிய பொறிகள்; எப்படி நாம் சக்தியற்றவர்களாக முடியும்? நாம் சகல சக்தியும் பொருந்தியவர்கள்.; எக்காரியத்தையும் செய்துமுடிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லவர்கள்" என்ற தன்னம்பிக்கையை நீங்கள் அனைவரும் பெறுங்கள்! உயிர் கொடுக்கக்கூடிய இந்த உயர்ந்த சீரிய கொள்கையை உங்கள் குழந்தைகளுக்குப் பிறவியிலிருந்தே ஊட்டி வளர்ப்பீர்களாக!

## இன்றைய கல்வி முறை

இன்றைய கல்வியில் பலநல்ல அம்சங்கள் காணப்படினும் அவை மூலம் பெறப்படும் நன்மையை மறைக்கும்படி அதிக கெடுதலான அம்சங்களும் உள்ளன. கல்வி வாயிலாக நம்முள் உள்ள நம்பிக்கை, ஆர்வம், ஆற்றல், பக்தி பெருக வேண்டும்; இவற்றால் உள்ளுறையும் பேரான்மா விழித்தெழ வேண்டும்; மாறுதலற்ற அன்பு வடிவமான இறைவனிடம் நம்மைக் கொண்டுசேர்ப்பதே உண்மையறிவு. ஆனால் இன்றைய கல்வியோ மிக எதிர்மறையானதாகவே உள்ளது. மாணவர்கள் ஊக்கமின்மை, ஆர்வமின்மை காரணமாக தம்முள் இருக்கும் ஆற்றலை அறியாது உள்ளனர். இப்போது நிலவும் கல்விமுறை தவறானதே. சிந்திப்பது எப்படி? என்பதை அறியமுன் மனதில் பல உண்மைளைத் திணிக்கிறோம். மன ஒருமைப்பாடே முதலில் கற்பிக்கப்பட வேண்டியதொன்றாக இருக்கின்றது. இன்றைய கல்வி முறை ஒரு குறுகிய நோக்காகவே உள்ளது – எதிர்காலத்தில் சிறந்த மனிதநேயத்தையோ, சிறந்த மனிதத்தன்மையையோ வித்திடக் கூடியதாக இல்லை.

இன்றைய கல்வி முறையானது மேலைநாட்டவரின் பழக்க வழக்கங்களையே பின்பற்றுகிறது. நமது நாட்டில் பெரிய மனிதர்கள் பிறந்தார்கள் என்பதறியாது ஆங்கிலேயே முன்னோர்கள் பற்றி கற்கிறோம். இதனால் வறுமையை அகற்ற முடியவில்லை. உணவுக்காக எவ்வளவு பரிதாபக்குரல் எழுகிறது? சுதேச உடையையும், உணவையும், வாழ்க்கை முறையையும் கைவிடுவதால் ஒருவன் தேசியத்தை இழந்து விடுகின்றான். எல்லோரிடமிருந்தும் ஒருவன் கற்றுக்கொள்ளலாம். ஆனால் தேசியத்திற்கு எதிரான, உயர்நிலையை அடையத் துணைபுரியாத கல்வி தாழ்வையே தரும். ஆங்கிலேயர் நம்மை எளிதில் வெல்லக் காரணம் அவர்கள் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய சமுதாயமாய் இருப்பது ஆகும். அங்கு, உயர்ந்தவர் ஒருவர் இறப்பின் அதே வேகத்தில் வேறு பெரியவர் உருவாவர்.

அந்த நாடுகளில் கல்வி கற்ற ஆண், பெண்களின் எண்ணிக்கை அதிகமாய் உள்ளது. அதனால் அந்த நாடுகள் முன்நிலையில் உள்ளன. எனினும் வெறும் பௌதீகக் கல்விகளைக் கற்று நமது அன்றாடத் தேவைகள் அத்தனையையும் வெறும் இயந்திரங்களால் நிறைவேற்றிக் கொள்வது உயர்கல்வி அல்ல. உயர்கல்வி என்பது வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்க்க சிறந்த வழியினை வழங்குவதே.

## அனைவருக்கும் நலந்தரும் கல்வி

அறிவு உதித்து கல்வி பரவாவிடில் நாட்டில் எப்படி முன்னேற்றம் உண்டாகும்? சகல வகுப்பினரிடையேயும் கல்வியறிவு பரப்பப்படல் வேண்டும். ஏழை எளியவரிடமும் கல்வி பரப்பப்பட வேண்டும். அவர்களுடைய வறுமை அதன் மூலம் நிரந்தரமாக அகன்று போகும். ஆனால் அதில் பல கஷ்டங்கள் உள்ளன. ஒவ்வொரு கிராமத்திலும் இலவசப் பள்ளிகளை ஏற்படுத்தினாலும் ஏழைச் சிறுவர்கள் வயிற்றுப் பிழைப்புக்காக வேலைகளுக்கே செல்வார்கள். ஏழைச் சிறுவர்கள் கல்வியை நாடி வரமுடியாமல் போனால், கல்விதான் அவர்களை நாடிப்போய் அடைய வேண்டும்.

நாட்டிலுள்ள சுயநலமற்ற, நற்குணம் படைத்த கல்வி கற்றுள்ள நூற்றுக் கணக்கானோரைத் திரட்டி கிராமம் கிராமமாகச் சென்று, ஒவ்வொருவருடைய வீட்டையும் நாடிச் சென்று சமயப் பண்பு மற்றும் கல்வியைக் கொண்டு சேர்க்க வேண்டும். வேலை முடித்து பேசிப் பொழுது போக்கும் நேரத்தில் அங்கு சென்று வாய்மூலம் கல்வி புகட்டவேண்டும். கண்மட்டுமன்றி காதுவாயிலாகவும் இது அமையலாம். நம் நாட்டின் ஏழை எளிய மக்களுக்குச் செய்யப்பட வேண்டிய ஒரே சேவை கல்வி அளிப்பதே. அவர்கள் இழந்துபோயுள்ள தனித்தன்மையை வளரவைத்து சீரான கருத்துக்களை அளித்தாக வேண்டும். அது ஒன்றே அவர்களிற்குத் தேவையான உதவி;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனையவை எல்லாம் அதன் பயனாகக் கிடைத்துவிட வேண்டும் என்பதில்லை. அறிவு மேம்பாட்டுடன் சுயதொழிலைச் செய்பவர்களுள் ஞான வீரர்கள் பலர் தோன்றுவர்.

அதுமட்டுல்லாது நாட்டின் கண்களாயுள்ள பெண்களிடையேயும் கல்வியறிவு ஏற்படுத்தப்படல் வேண்டும். எல்லாத்துறையிலும் பெண்கள் பிரகாசிக்கவேண்டும். நல்லொழுக்கம் மிக்க ஆன்மீக வாழ்க்கையில் பெண்கள் பயிற்றுவிக்கப்படல் வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் நல்ல தாய்மாராக வளரமுடியும். கடவுள்பற்றிய கல்வியறிவுள்ள தாய்மார் வாழும் இல்லங்களில்தான் பெரிய மனிதர் பிறக்கின்றனர். பெண்கள் பிரச்சினையைத் தீர்க்க கல்வி மூலமே முடியும். பெண்களுக்கு கல்வியை வழங்குவதாயின் முதலில் கற்பு நெறியை அவர்களின் மனதில் பதியச்செய்ய வேண்டும். அத்துடன் விஞ்ஞானம் போன்றவற்றையும் புகட்டவேண்டும்.

விஞ்ஞானக் கல்வி அவசியம் தான். ஆனால் விஞ்ஞானக் கல்வியுடன் மட்டும் நின்றுவிடாதீர்கள். வேதாந்த ஞானம், பிரம்மச்சரியம் எனும் இலட்சியம், சிரத்தை, தன்னம்பிக்கை இவையெல்லாம் எமது கல்வியில் இணைக்கப்படல் வேண்டும். இந்த ஒரு வழியில்தான் ஒரு தேசிய சமுதாயம் உருவாக முடியும்.

எதிர்காலத்திற்கு நலன்புரிவதான கல்வி பரவினாலன்றி இப்பொழுது இருக்கின்றன நிலையை சீர்திருத்துவது கடினம். மிகுந்த நன்மை விளைவிக்கும் வேதங்களையும், கீதையையும், இதர சமயநூல்களையும் படிப்போம். அவ்வளவுதான் எங்கள் தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IF

If you can keep your head when all about you
Are losing theirs and blaming it on you,
If you can trust your self when all men doubt you,
But make allowance for their doubting too;
If you can wait and not be tired by waiting
Or being lied about, don't deal in lies,
Or being hated, don't give way to hating,
And yet don't look too good, nor talk too wise;

If you can dream-and not make dreams your master;
If you can think-and not make thoughts your aim;
If you can meet with Triumph and Disaster
And treat those two impostors just the same;
If you can bear to hear the truth you've spoken
Twisted by knaves to make a trap for fools.
Or watch the things you gave your life to, broken,
And stood and build 'em up with worn-out tools:


If you can make one heap of all your winnings
And risk it on one turn of pitch-and-toss,
And lose, and start again at your beginnings
And never breathe a word about loss;
If you can force your heart and nerve and sinew
To serve your turn long after they are gone.
And so hold on when there is nothing in you
Except the will which says to them, "Hold on!"

If you can walk with crowds and keep your virtue,
Or walk with Kings-nor lose the common touch,
If neither foes nor loving friends can hurt you,
If all men count with you, but none too much;
If you can fill the unforgiving minute
With sixty seconds' worth of distance run.
Yours is the Earth and everything that's in it,
And-which is more-you'll be a Man, my son!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாழ்வு மனப்பான்மை

"பயம்– சில குடும்பங்களில் தாய் தரும் நோய்" என்று மனநூலார் கருதுகின்றனர். "இருட்டில் போகாதே; அதைச் செய்யாதே; இதைத் தொடாதே; என்று எதற்கெடுத்தாலும் பயந்து தன் குழந்தையைக் கட்டுப்படுத்தும் தாய் தன் பாலுடன் பயத்தையும் ஊட்டுகிறாள் என்கிறார்கள். "போரில் புறமுதுகிட்டான் தன் மகன் என்று அவனுக்கு பாலூட்டிய தாய், தன் மார்பகங்களை வாளால் வெட்டியெறிந்த வீரத்தாய் தமிழ்த் தாய்" என்று நம் இலக்கியம் கூறுகிறது. இன்றைய நிலை என்ன?" நெஞ்சு பொறுக்கு தில்லையே–. இந்த நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்" என்று குமைகிறார் பாரதி.

பணிந்து போவது நல்லதுதான். ஆனால் அதற்கும் ஓர் எல்லை இருக்கிறது. இப்போது நாம் அதிகாரத்தைக் கண்டு அஞ்சுகிறோம். ஆணவத்திற்குத் தலை பணிகிறோம், மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவிக்கவும் தயங்குகின்றனர் படித்தவர்கள். பயம், பல நிலையில் மக்களைப் பாடாய்ப் படுத்துகிறது.

நமது பணிவு என்ற பண்பு, மறுகோடிக்குச் சென்று மனிதனைக் கோழையாய், பேடியாய் மாற்றி விட்டிருப்பதைக் காண முடிகிறது. எப்படியோ வாழ்ந்தால் போதும் என்ற மன நிலையை உணர முடிகிறது. பாரதியும் அதைத்தான் கூறினார், நம்மிடை நைச்சிய மனோபாவம் மிகுந்திருப்பதாக, அடிமைப் புத்தி மலிந்திருப்பதாக.

மாணவர்கள் பரீட்சையைக் கண்டு பயப்படுகின்றனர். பயப்படுவதினால் நம்மைப் பலவீனப்படுத்திக் கொள்கிறோம். பயம் நமது ஞாபகமறதியை அதிகமாக்கி, நமது அறிவு மிகவும் தேவைப்படும் நேரத்தில் அறிவைக் கைவிடச் செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்களைக்கண்டு மனிதர்கள் பணிவுகாட்டும் நிலை நமது ஊரில் முற்றிலும் விசித்திரமானது. அதிகாரிகள் பலர் நமக்குக் கீழே வேலை செய்பவர்களை, வேலைக்காரர்களாக கருதுகின்றனர். பிறருக்குக் கீழ் வேலை பார்ப்போர் பலர், தங்களைத் தாழ்த்திக் கொள்வதன் மூலம் அதிகாரியின் நிலையை உயர்த்தலாம் என்றும், அவரைத் திருப்திப்படுத்தலாம் என்றும் எண்ணுகின்றனர். நமது ஊரிலே மனிதன் மனிதனாய் வாழாமல் – வாழ முடியாமல் முதுகெலும்பற்ற மண்புழுவாய் நெளிக்கின்றான்; உழல்கிறான். நம்மிடையே அடிமைத்தனம் இல்லை என்று நாம் பெருமையோடு கூறிக்கொள்கிறோம். ஆனால் இருப்பவன் இல்லாதவனை நடத்தும் முறையும், அதிகாரிகளும் பதவியில் இருப்பவர்களும் குடிமக்களை நடத்தும் முறையும் நம் அடிமைப் புத்தியையே காட்டுகின்றன.

நம் அனைவருள்ளும் இப்பிரபஞ்ச அறிவு உறைகிறது. நம் அனைவருள்ளும் ஆண்டவன் குடியிருக்கிறான். அதை உணராது, நம்மை நாமே தாழ்த்திக் கொள்ளும் ஒரு மனநிலையை – தங்களைத் தாங்களே சிறுமைப்படுத்திக் கொள்ளும் ஓர் உள்ள நிலையை – உலகில் நாம் வேறெங்கும் காணமுடியாது.

நம்மால் முடியுமா?" என்ற சந்தேகம் "நம்மால் முடியாது" என்ற நம்பிக்கையாய் ஊறி நமது தாழ்வு மனப்பான்மையாய் வெளிவருகிறது. நமக்கேற்படும் பயத்தினால், நாம் பிறரைச் சார்ந்து நிற்க விரும்புகிறோம். பிறரிடம் நமது பொறுப்புக்களை ஒப்புவிப்பதன் மூலம் நமது பிரச்சினைகளிலிருந்து – அவற்றைச் சமாளிப்பதிலிருந்து தப்பிக்கப் பார்க்கிறோம்.

கடல் பூராவும் தண்ணீர் இருந்தாலும், கடல் நீர் கப்பலுக்குள் புகாதவரை, கப்பல் அமிழ்ந்து போவதில்லை, அதே போலத்தான் பயமும். மனம் என்ற கப்பலுக்குள் சஞ்சலம், பயம், திகில், பீதி, சந்தேகம் என்று ஓட்டைகள் ஏற்படாதவரை .எந்த உலகப் பிரச்சினைகளும் நம்மை அசைக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் எழுதும் கடிதங்கள் அழுகையாகவும், ஒப்பாரியாகவும் இருக்கும்போது, அவர்களுக்கு நான் கூறும் யோசனை, கொஞ்சம் தைரியத்தை விலைக்கு வாங்குங்கள் என்பதுதான். பலர், "தைரியம் எந்தக் கடையில் விற்கிறது?" என்று வியப்புடன் கேட்கிறார்கள். புத்தகக் கடைகளிலெல்லாம் "பாரதியின் பாடல்கள்" என்ற பெயரில் தைரியம் விலைக்கு விற்கப்படும்போது, ஏன் பலர் அழுகிறார்கள் என்பது புரியவில்லை.

மீசை வைத்துக்கொள்ளும் வழக்கமில்லாத ஒரு குடும்பத்தில் மீசை வைத்துக்கொண்டவர் பாரதி. அதுவும் எப்படிப்பட்ட மீசை? தொங்கு மீசையல்ல அவருடையது; வீரம் முறுக்கேறி நிற்கும் கொம்பு மீசை. அதன்மீது ஒரு கம்பீர முண்டாசு.

"பயமெனும் பேய்தனை அடித்தோம் பொய்மைப் பாம்பைப் பிளந்துயிரைக் குடித்தோம்" என்று வீரமுழக்கமிடுகிறார் பாரதி. நமது உள்ளத்திலே பயத்திற்கு மாற்றான வீர எண்ணங்களை உள்ளேவிட, பாரதியின் வீரம் செறிந்த பாடல்களைத் தவிர சக்தி மிகுந்தவை வேறில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது வாழும் முறைமையடி பாப்பா

ஓடி விளையாடு பாப்பா ! – நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா ! – ஒரு
குழந்தையை வையாதே பாப்பா !

பொய் சொல்லக் கூடாது பாப்பா ! – என்றும்
புறம் சொல்லல் ஆகாது பாப்பா !
தெய்வம் நமக்குத் துணை பாப்பா ! – ஒரு
தீங்கு வரமாட்டாது பாப்பா !

பாதகஞ் செய்பவரைக் கண்டால் – நாம்
பயங்கொள்ளலாகாது பாப்பா !
மோதி மிதித்து விடு பாப்பா ! – அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா !

துன்பம் நெருங்கி வந்த போதும் – நாம்
சோர்ந்து விடலாகாது பாப்பா !
அன்பு மிகுந்த தெய்வமுண்டு – துன்பம்
அத்தனையும் போக்கி விடும் பாப்பா !

சோம்பல் மிகக் கெடுதி பாப்பா ! – தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா !
தேம்பி யழுங் குழந்தை நொண்டி – நீ
திடங் கொண்டு போராடு பாப்பா !

சாதிகள் இல்லையடி பாப்பா – குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம் !
நீதி, உயர்ந்த மதி, கல்வி – அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர் ;

உயிர்களிடத்தில் அன்பு வேணும் ; – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும்
வயிரமுடைய நெஞ்சு வேணும் – இது
வாழும் முறைமையடி பாப்பா !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன் நம்பிக்கையின் பற்றுறுதி

✶ அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
இச் சகத்து ளோரெலாம் எதிர்த்து நின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
துச்சமாக எண்ணி நம்மைத் தூறு செய்த போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கை பெற்று விட்ட போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
இச்சை கொண்ட பொருளெல்லாம் இழந்துவிட்ட போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே

கச்சணிந்த கொங்கை மாதர் கண்கள் வீசு போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
நச்சைவாயி லேகொணர்ந்து நண்பரூட்டு போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
பச்சையூ னியைந்தவேற் படைகள் வந்த போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EDUCATION

Man is born as a seed, potentiality not actuality. This is very special because only man is born potentiality. Dog is born as a dog, but man is not born as a man. Man is born as a seed, which slowly blossoms into a unique flower. Thus, man is the only imperfect animal, which growth and evolution is possible. In the growing stage, education is the bridge between actuality and potentiality. Education helps you become that which you are from only a seed. What you learn during education facilities is not real education. It prepares you for a hob but it does not give a life. It may give you a better standard of living but not a better standard of life. It earns you bread and as Jesus says, "Man cannot live with only bread." This is what university has prepared you to do, earn bread in a different way. It is primitive education. It does not prepare you for live. There are so many robots such as clerks, deputy collectors, etc. These robots are beggars. None have tasted one bite of life. Yes, they earn but essentially they are poor. Education not only informs one but also gives inner richness. Primitive education is the result of fear of surviving. It becomes violent because of the competition between one another. Thus, slowly becomes a madhouse in which love cannot exist. Education should be taken as a celebration for life. Education should prepare you to fall in tune with it, with the trees, with the birds, with the sun and the moon. Education should prepare you to be yourself. There is no one like, has never been, will never be. This is a great respect that god has showered upon you. Do not become imitative, don't become carbon copies. Your education deprives you of your originality. Education means to draw out that which is within you. This education is poured unto you. However, real education brings out that which is hidden, what god has put in you as a treasure. The other meaning of education derives from educare, which means to lead you from darkness to light. In the beginning man lives in the dark (unconsciousness), but slowly becomes capable of being full of light. The flame is there, but has to be provoked. The consciousness is there, but it has to be awakened. Awareness, just awareness will fill one. Then life is a benediction.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ***MOTHER TERESA***

**if you start judging people you will be having no time to love them ...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GENERATION GAP

Since mankind went through a pre-defined way of living until the last generation, the term "Generation Gap" might sound very different to the man of the previous generation.

Unlike today's city life, the then way of living was so classy which eventually lead the younger one to be responsible for whatever his father was responsible. The average age the then society set for this responsibility transference was just 20 which made no room for the term to enter. This has got a huge connection to why people of today call problem of generation gap.

As time cycled some miles the above said way of living faced a change. A whole new way of learning that was independent of experience opened up. By this the elder one began to know a lot than the younger to know a lot than the which lead the elder one think that he was not given certain respect. Why was he gaining some respect fro the youngster before? Because he knew something that the younger one didn't. But now with the younger one being dependant on him only for his financial needs, and knowing many things that the elder one doesn't it became impossible for the elder one to get respect from the younger one. The younger one began to think that he knows things better than his father and began to expect for some respect for what he is now.

But the education he has got for which experience is not at all a necessity is not going to be the same. Keeping on with what is happening in his field right now is so important to keep him respectful in that way.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Generation gap is unfortunate. There is a strategy built by Osho for how can it be avoided.

We can see that one gap is created by education. The other gap meditation is going to create will be bigger and immense. This gap will extend the distance between the elder one and the younger one as two poles of the earth. Education is only something that is about outer world. But meditation is something that deals with your interiority. It makes you a fire that heals each and every wound and that is always cold. This sort of an education should be given to elders in the old age. That is education should be divided into 2 parts. 1st one should be given in the younger age as if to prepare the youngsters for livelihood and the other one should be given to elders as if to prepare them for death which is the doorway for eternity and which needs tremendous training. This education should contain meditation and all the other things which helps the older people make others happy. Doing so will eventually lead both the elder and the youngster to a point where the gap created by the education will be naught compared to the gap that has been created by his new strength that meditation has given him. The older one will be calm, peace, wise. Their advice will be listenable. Just sitting at their feet will be a blessing; the respect for the old will return.. The problem "Generation Gap" remains now because of the reason that respect has disappeared.

When education for livelihood and education for death are separated Generation gap will disappear in a beautiful way.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பு

- சுவாமி விவேகானந்தர்

## பண்பு என்றால்...

ஒரு மனிதன் நினைக்கும் ஒவ்வொரு எண்ணமும், செய்யும் ஒவ்வொரு செயலும் அவனது மனதில் ஒரு பதிவை உண்டாக்குகிறது. இன்பமும் துன்பமும் மனித ஆன்மாவைக் கடந்து செல்லும் போது ஆன்மாவின் மேல் பலவகையான அனுபவங்களை நுட்பமாகப் பதித்துச் செல்கின்றன. மனிதனிடம் அமையும் இந்த அனுபவங்களின் ஒட்டுமொத்தமான பதிவுகளே 'பண்பு' (குணம்) என்று அழைக்கப்படுகிறது. நாம் எந்தவொரு மனிதனின் பண்பை எடுத்துக் கொண்டாலும், உண்மையில் அது அவனுடைய உள்ளத்தின் உணர்வுகள் அத்தனையும் சேர்ந்து உருவானதொன்று என்பதையும், அவனுடைய எண்ணங்கள் அனைத்தினதும் திரண்ட வடிவம் என்பதையும் அறியலாம்.

'சமஸ்காரம்' எனும் பதத்திற்கு 'இயற்கையால் அமைந்த மனநிலை' என்று பொருள் கொள்ளலாம். மனம் என்னும் ஏரியில் எழும் சிற்றலைகள் முற்றிலும் மறைந்து போகாமல், தாம் திரும்பி வருவதற்கான அறிகுறிகளை விட்டுச் செல்கின்றன. இவற்றையே சமஸ்காரம் என்று கூறுகிறோம் எண்ணப்பட்ட எண்ணம் ஒவ்வொன்றும் தொடர்ந்து வாழ்கின்றது. அவை தம்மைச் செயல்களாக உருவாக்கிக் கொள்வதற்கு இடையறாது முயற்சி செய்துகொண்ருக்கின்றன. சமயம் கிடைக்கும் போது, அவை புதிய உருவத்துடன் வெளிவருகின்றன. இத்தகைய ஒவ்வொரு எண்ணமும், எண்ணத்தின் விளைவான ஒவ்வொரு செயலும் மனத்தில் பதிவுகளை ஏற்படுத்துகின்றன. அவை வெளிப்படையாக தெரியாமல் இருந்தாலும், உள்மனதில் நம்மை அறியாமலே விளைவுகளை உண்டாக்கும் அளவிற்கு வலிமைபடைத்தவையாகும். நாம் ஒவ்வொரு கணமும் எப்படி? என்ன மனநிலையில்? எத்திசையில்? இருக்கிறோம் என்பதை ஒட்டுமொத்தமான இந்த மனப்பதிவுகளே நிர்ணயிக்கின்றன. இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமிடத்தில் நான் என்னவாக இருக்கிறேனோ, அது என்னுடைய கடந்தகால சம்ஸ்காரத்தின் விளைவாக அமைந்ததேயாகும். இதுவே ஒருவனுடைய பண்பு என்று அழைக்கப்படுகிறது. நாம் இறக்கும் போது இந்தப் பதிவுகளின் கூட்டுமொத்தப் பலனே எஞ்சி நிற்கும்; இதுவே ஆன்மாவுக்கு வழிகாட்டுகிறது. முழு அனுபவம் பெறும்வரை ஆன்மா வெவ்வேறு உடல் எடுக்கிறது. அதன் பின்னர்தான் அது தான் உண்மை இயல்பை அறிந்துகொள்கிறது; முழுமையடைகிறது; முக்தியடைகிறது.

## பண்பின் நிர்மானம்

ஒவ்வொரு மனிதனும், தன் பண்பைத் தானே உருவாக்கிக் கொள்கிறான். அவன் தன் வாழ்க்கையில் மனத்தாலும், உடலாலும் செய்த செயல்களின் பலனே அவனது பண்பாக உருப்பெறுகிறது. பண்பை உருவாக்குவதில், இன்பமும் துன்பமும் சரிசமமான இடத்தைப் பெறுகின்றன. நமது எண்ணங்களுக்கு ஏற்பவே நாம் உருவாகிறோம். தொடர்ச்சியான எண்ணம் ஒருவரின் செயலாக உருப்பெறுகிறது: தொடர்ந்து செய்யும் செயல் ஒருவரின் பழக்கவழக்கமாக (நடத்தையாக) மாறுகின்றது; இத்தகைய பழக்கவழக்கங்கள் வலிமையான பதிவுகளை மனதில் ஏற்படுத்துகின்றன. இப்பதிவுகளின் (பழக்கவழக்கங்கள்) தொகுப்பே, ஒருவனது பண்பு எனப்படும் மாபெரும் சக்தியாகும்.

ஒரு மனிதன் தொடர்ந்தும் தீயவற்றைக் கேட்டு, தீயவற்றைப் பார்த்து, அவற்றையே சிந்தித்துக் கொண்டிருந்தால், அவன் தீய செயல்களையே செய்கிறான். அவனது மனம் முழுவதும் தீய சிந்தனைகளால் நிரப்பப்படுகிறது. உண்மையில் இத்தீய பதிவுகள் அவன் உள்மனதில் எப்பொழுதும் வேலை செய்தபடியே இருக்கின்றன. இத்தீய பதிவுகள் தீயனவற்றைச் செய்யத் தூண்டும் வலிமை வாய்ந்த மனநிலையை உருவாக்கும். இதன் விளைவாக அவன் தீயவனாக, கொடியவனாக இருக்கிறான். அவனே நல்லவனாக முன்றாலும், அவனால் அத்தனை சுலபத்தில் அத்தீய பண்பில் இருந்து விடுபட்டுவிட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபக்கம், ஒரு மனிதன் தொடர்ந்தும் நல்லவற்றைக் கேட்டு, நல்லவற்றைப் பார்த்து, நல்ல எண்ணங்களையே எண்ணிக் கொண்டிருந்தால், அவன் மனதில் நல்லவையே பதியப்பெறும். அவை நல்ல செயல்களைச் செய்ய அவனைத் தூண்டும். அவனது மனம் முழுவதும் நல்ல சிந்தனைகளால் நிரப்பப்படுகிறது. இதனால் அவன் உள்ளத்தில் நல்லதையே செய்யவேண்டும் என்ற தவிர்க்க முடியாத போக்கு உண்டாகிறது. அவனாகத் தீயவற்றைச் செய்ய விரும்பினாலும், நன்மையின் மொத்த வடிவமாகவுள்ள அவனது உள்ளம் அவனை அவ்வாறு செய்யவிடாது. அவன் பூரணமாக நற்சுபாவங்களின் வயப்பட்டுவிடுகிறான். இவ்வாறு அமையும் போதுதான் ஒரு மனிதனின் சிறந்த பண்பானது முழுமையாக நிர்மாணிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது.

## நல்ல எண்ணங்கள், செயல்களின் விளைவுகள்

ஒரு மனிதனின் பண்பை உருவாக்குவதில் செயலின் பங்கு முக்கியமானதாகும். இன்று நாம் உலகில் காண்கின்ற எல்லாவிதமான செயல்கள், சமுதாயத்தில் நடக்கின்ற சகலவிதமான இயக்கங்கள், நம்மைச் சுற்றி நடக்கும் வேலைகள் அனைத்தும் எண்ணங்களின் வெளிப்பாடுகளே; மனவுறுதியின் வெளிப்பாடுகளே. அதனால் எண்ணுவது குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஒவ்வொரு எண்ணத்திலும் நமது இயல்பு படிந்திருக்கிறது. நாம் எண்ணும் ஒவ்வொன்றும், நமது உடல் என்னும் இரும்புத் துண்டின் மீது சுத்தியலைப் போன்று தாக்கி, நாம் விரும்பும்வண்ணம் அதை உருவாக்குகிறது. நாம் எண்ணும் ஒவ்வொன்றும், எமது செயல்களாக பரிணமிக்கின்றன.

ஒருவனின் செயல் எத்தன்மையதோ, அத்தன்மையதே அவனது மனவுறுதியின் வெளிப்பாடும். இந்த உலகம் இதுவரை தோற்றுவித்துள்ள மிகச்சிறந்த மனவுறுதியுடைய மனிதர்கள் எல்லோருமே, மற்றவர்கள் கனவிலும் நினைக்காத, உலகமே பார்த்து ஆச்சரியத்தால் வெலவெலத்துப் போகும் காரியங்களைச் செய்பவர்களாக, தங்களது ஈடிணையற்ற மனவுறுதியால் உலகங்களைத் தலைகீழாகக் கவிழ்ப்பவர்களாக இருந்திருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய மனவுறுதியை அவர்கள் பிறவிதோறும் இடைவிடாது தொடர்ந்த கடினமான பயிற்சியினால் பெறுகின்றார்கள். அத்தகைய பிரமாண்டமான மன ஆற்றல்தான் பின்னர் ஒரு புத்தராகவும், ஒரு ஏசுவாகவும் உருவெடுக்கிறது. இத்தகைய ஆற்றல்கள் ஒரே பிறவியில் உருவாகிவிடுவதில்லை.

## பண்பறிதல்

நீங்கள் ஒரு மனிதனின் உண்மையான பண்பை அறிய விரும்பினால், அவனுடைய மகத்தான செயல்களைப் பார்த்து முடிவுக்கு வராதீர்கள். ஒரு முட்டாள்கூட குறிப்பிட்ட நேரத்தில் அல்லது சில நேரங்களில் அரும்பெருஞ் செயல்களைச் செய்து மகத்தான மனிதன் ஆகிவிடுவான். அந்த மனிதன் செய்கின்ற மிகமிகச் சாதாரணமாண செயல்களைக் கவனியுங்கள். உண்மையில் அவைதாம் அந்த மனிதனின் உண்மையான பண்பை உங்களுக்குத் தெரிவிக்கவல்லவை. குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்கள், மிகக்கீழான மனிதர்களைக்கூட ஒருவகையான மகத்தான நிலைக்கு உயர்த்திவிடும். ஆனால், எந்தச் சூழ்நிலையிலும், எந்தக் காலத்திலும் யாருடைய பண்பு உயர்ந்ததாக இருக்கிறதோ அவனே உண்மையில் சிறந்த மனிதன் ஆவான்.

## மனிதனின் உண்மையான சுபாவம்

உங்கள் இயல்பே தீமையானது, ஏதோ சில தவறுகள் செய்துவிட்டால் நீங்கள் வீட்டிற்றுச் சென்றதும் அதையே எண்ணி அழுதுகொண்டிருக்க வேண்டும் என்று கூறினால் அது உங்களுக்கு உதவி புரிவதாகாது. மாறாக, அது உங்களை மேலும் பலவீனப்படுத்தவே செய்யும்; அப்படிக் கூறினால் நான் உங்களுக்கு நன்மைக்கான வழியைவிடத் தீமைக்கான வழியையே காண்பிப்பதாக அமைந்துவிடும். இருண்ட அறையிலிருந்துகொண்டு, "ஐயோ இந்த அறை ஒரே இருளாக இருக்கிறதே" என அழுவதால் அந்த இருள் மறைந்துவிடுமா? ஒரு தீக்குச்சியை உரசுங்கள், மறுகணத்தில் இருள் மறைந்து ஒளி வந்துவிடும், அது போலவே நல்ல பண்புகளை நிர்மாணித்துக் கொள்ளுங்கள்; தீயவை தானாகவே மறைந்துவிடும். எனவே செய்த தவறுகளுக்காக அழுதுகொண்டே இருக்க வேண்டாம். நீங்கள் பாவிகள் அல்லர். இக்கணத்திலிருந்து செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளவற்றை நல்லதாகவே செய்யுங்கள். முடிவில் எல்லாம் சரியாகிவிடும் என்பதில் உறுதி கொள்ளுங்கள். ஏனெனில் நன்மையே எமது உண்மையான சுபாவம்; தூய்மையே நமது உண்மையான இயல்பு.

## மனித வாழ்வின் இலட்சியம்

மனித சமுதாயத்தின் இலட்சியம் ஞானத்தை அடைவதே. மனித வாழ்வின் இலட்சியம் இன்பமல்ல ஞானம் ஒன்றுதான். இந்த இன்பங்களும் மகிழ்ச்சியுமே வாழ்வின் இலட்சியங்கள் என்று நினைப்பது தவறாகும். இன்று உலகத்தில் காணப்படும் எல்லாவிதமான துன்பங்களுக்கும் காரணம் மனிதன் முட்டாள்தனமாக தன் வாழ்வின் இலட்சியம் இன்பம் என நினைத்து அதைத் தேடி அலைவதுதான். பலகாலம் இப்படித் தேடியலைந்த பிறகுதான் அவனுக்கு புரிகிறது. இன்பமும் துன்பமும் பெரிய ஆசிரியர்கள்; நன்மையைப் போலவே தீமையிலிருந்தும் பெரும் பாடத்தை மனிதன் கற்றுக் கொள்கிறான். மனிதன் தமன் இலட்சியதை (ஞானத்தை) அடைவதற்கு, அதாவது இயற்கை நம்மீது கொண்டிருக்கும் ஆதிக்கத்தை நீக்குவதற்காக, நம்மை பரம்பொருள் தத்துவமாக ஆக்கிக் கொள்வதற்கு நாம் செய்யும் முயற்சியே நல்லொழுக்கம் (நற்பண்பு நிர்மாணம்) ஆகும். அதனால் தான் ஸ்ரீ இராமகிருஷ்ண பமரஹம்சர் "முதலில் நல்ல பண்பைத் தேடிக்கொள், பிறகு ஞானத்தைத் தேடு, பலன் தானே கிடைக்கும்" என்று கூறியுள்ளார்.

மிகச்சிறிய அமீபாவிலிருந்து இந்த மனிதநிலைக்கு உங்களை உயர்த்தியது ஆற்றல்மிக்க நற்செயலகளின் பலனே. இவ்வளவு உயர்ந்த நிலைக்கு உங்களைக் கொண்டுவந்தது, மேலும் உயர்ந்த நிலைக்கு உங்களைக் கொண்டு போகும்; உங்களுக்கு வேண்டியது சிறந்த பண்புகளே.

எனவே, நீங்கள் நற்பண்பை முதலில் நிர்மாணித்துக் கொள்ளுங்கள்; அத்துடன் ஒளிமயமான, பிரகாசிக்கின்ற, என்றும் தூய்மையான உங்களது உண்மையான இயல்பை வெளிப்படுத்துங்கள். மேலும் நீங்கள் காணும் ஒவ்வொருவரையும் அக்கண்ணோட்டத்துடனேயே காண்பீர்களாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் தனது விதியைத் தானே அமைக்கிறான்

முகமது நபியோ புத்தரோ நல்லவராக வாழ்ந்தார் என்பதை நான் ஏன் பொருட்படுத்த வேண்டும்? அது என்னுடைய நல்ல இயல்பையோ கெட்ட இயல்பையோ மாற்றி அமைக்கப்போகிறதா? நமது நன்மைக்காக, நமது விருப்பத்திற்காக நாம் நல்லவர்களாக இருப்போம்.

அந்தக் காலத்தில் யாரோ ஒருவர் நல்லவராக இருந்தார் என்பதற்காக நாம் நல்லவராக இருக்க வேண்டியதில்லை.

நாம் இப்போது இருக்கும் நிலைமைக்கும் நாமே பொறுப்பாளிகள். நாம் எப்படி எல்லாம் இருக்க வேண்டும் என்று விரும்புகிறோமோ அப்படி நம்மை அமைத்துக்கொள்ளும் ஆற்றல் நம்மிடமே இருக்கிறது. நாம் இப்போது இருக்கும் நிலை நம்முடைய முன்வினைகளின் பலன் என்றால், எதிர்காலத்தில் நாம் எப்படி எல்லாம் இருக்க வேண்டுமென்று விரும்புகிறோமோ அதை நாம் நம்முடைய தற்போதைய செயல்களால் உண்டாக்கிக் கொள்ள முடியும் என்பது வெளிப்படை. எனவே எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

இந்த மனித உடல்தான் பிரபஞ்சத்திலேயே மிகச் சிறந்த உடலாகும். மனிதனே மேலான ஜீவன், எல்லா மிருகங்களைக் காட்டிலும், எல்லாத் தேவர்களைக் காட்டிலும் மனிதன் உயர்ந்தவன். மனிதனைவிட உயர்ந்தவர் யாருமே இல்லை.

இயற்கையை மீறி மேலெழுவதற்குப் போராடிக் கொண்டிருக்கும் வரையில்தான் மனிதன் மனிதனாக இருக்கிறான். இந்த இயற்கையானது அகம் புறம் என்று இரண்டு வகைப்படும். பல வேறு நாடுகளின் வரலாற்றை ஆழ்ந்து படித்துப் பார்த்தால் – இயற்கையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்று தங்களை உயர்த்திக் கொள்ள முயற்சி செய்யும் மக்கள் அதிகரிக்கும் போதுதான் ஒரு நாட்டிற்கு எழுச்சி வருகிறது என்பதை எப்போதும் நாம் காணலாம். இலௌகி லாபத்தில் மட்டும் கருத்துச் செலுத்துபவர்கள் (Utilitarians), மெய்ப்பொருளை நாடும் இந்த முயற்சி பயனற்றது என்று எவ்வளவுதான் சொன்னாலும், அத்தகைய முயற்சி நின்றுவிடும்போது சமுதாயத்திற்கு அழிவு ஆரம்பித்து விடுகிறது. அதாவது, ஒவ்வொரு மனித இனத்தின் வலிமைக்கும் உயிர்நாடி அதன் ஆன்மிகப் பண்பில்தான் அடங்கியிருக்கிறது. என்றைக்கும் ஆன்மிகம் தனது செல்வாக்கை இழந்து உலகாயதம் தலையெடுக்க ஆரம்பிக்கிறதோ, அன்று முதல் அந்தச் சமுதாயத்திற்கு அழிவும் ஆரம்பித்துவிடுகிறது.

இந்த உலகம் மிகப் பெரிய ஓர் உடற்பயிற்சிக் கூடம். இங்கு நாம் நம்மை வலிமையுடையவர்களாக்கிக் கொள்வதற்காக வந்திருக்கிறோம்.

நன்மை தரக்கூடிய எல்லா சமுதாய மாற்றங்களும், உள்ளே இருந்து இயங்கிக் கொண்டிருக்கும் ஆன்மிகச் சக்திகளின் வெளித்தோற்றங்களே ஆகும். இந்தச் சக்திகள் வலிமை யுடையனவாகவும், சரிவரப் பொருத்தமாக அமையக்கூடியனவாகவும் இருந்தால், சமுதாயமும் தன்னை அதற்கு ஏற்றபடி அமைத்துக் கொள்ளும்.

ஒவ்வோர் மனிதனும் தன்னுடைய சொந்த முக்திக்காகத் தானே வேலை செய்தாக வேண்டும். இதைத் தவிர வேறு வழி இல்லை. தனி மனிதனுக்குப் பொருந்தும் இந்த உண்மை நாடுகளுக்கும் பொருந்தும்.

...சமுதாயத்திலே இருந்து வரும் ஸ்தாபனங்களிலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவது மிகவும் எளிது. ஏனென்றால், எல்லா நிறுவனங்களும் அதிக அளவிலோ குறைந்த அளவிலோ குறைபாடு உடையவையாகவே இருக்கின்றன. ஆனால் தனியொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனுக்கு – அவன் எத்தகைய நிறுவனத்தின் ஆதிக்கத்தின் கீழ் உட்பட்டு வாழ்ந்தபோதிலும், அவன் தன் குறைபாடுகளை நீக்கிக் கொள்வதற்கு யார் ஒருவர் உதவி செய்கிறாரோ அவரே மனித சமுதாயத்திற்கு உண்மையான நன்மை செய்பவராவார்.

தனிமனிதர்களின் நிலை உயர்த்தப்பட்டால், தேசமும் அதன் நிறுவனங்களும் உயர்வடைந்தே தீரும்.

உனக்குள் இருக்கும் ஆற்றல் புறத்தில் வெளிப்படும் வகையில் நீ வளர வேண்டும். வேறு எவரும் உனக்குக் கற்பிக்கவும் முடியாது. உன்னை ஆன்மிகவாதி ஆக்கிவிடவும் முடியாது. உனது சொந்த ஆன்மாவைத் தவிர வேறு ஆசிரியர் யாருமில்லை.

மக்கள் பொதுவாக வாழ்க்கையிலுள்ள குறைபாடுகளை எல்லாம் தங்களுடன் வாழ்பவர்கள் மீதோ, அல்லது அது தவறினால் தெய்வத்தின் மீதோ சுமத்துகிறார்கள். அல்லது புதிதாக அவர்கள் ஏதோ பேய் பிசாசு என்று கற்பித்துக்கொண்டு, அதைத் தலைவிதி என்று சொல்கிறார்கள்.

விதி என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது? எதை விதைத்தோமோ அதைத்தான் அறுவடை செய்கிறோம். நமது விதியை நாமே வகுத்துக்கொள்கிறோம். எனவே, அதன்பொருட்டுத் தூற்றுவதற்கும் ஒருவருமில்லை. பாராட்டுவதற்கும் ஒருவருமில்லை. காற்று வீசியபடி இருக்கிறது. பாய்மரங்களை விரித்துக் காற்றைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் கப்பல்கள், தங்கள் வழியே முன்னேறிச் செல்கின்றன. ஆனால், பாய்களை சுருட்டி வைத்துள்ள கப்பல்கள் காற்றை ஏற்றுப் பயன் பெறுவதில்லை. இது காற்றினுடைய குற்றமாகுமா?

நான் அனுபவித்துக் கொண்டிருக்கும் இந்தத் துன்பம், என்னுடைய சொந்தச் செயல்களாலேயே உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த ஒரு நிலையே, என் ஒருவனால் மட்டுமே அது நீக்கப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்பதைக் காட்டுகிறது' என்று சொல். நான் எதைப் படைத்தேனோ அதை என்னால் அழிக்கவும் முடியும். பிறரால் படைக்கப்பட்ட ஒன்றை ஒருபோதும் என்னால் அழிக்க முடியாது. எனவே, எழுந்து நில், தைரியமாக இரு. வலிமையுடன் இரு. பொறுப்பு முழுவதையும் உன்தோள்மீதே சுமந்துகொள். உனது விதியைப் படைப்பவன் நீயே என்பதைப் புரிந்துகொள். உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே குடி கொண்டிருக்கின்றன.

உனது எதிர்காலத்தை நீயே உருவாக்கு. ஏற்கனவே நடந்து முடிந்ததைக் குறித்து வருந்தாதே. எல்லையற்ற எதிர்காலம் உன் முன்னால் விரிந்து பரந்திருக்கிறது. உன்னுடைய ஒவ்வொரு சொல்லும் சிந்தனையும் செயலும், அதற்கு ஏற்ற பலனைத் தரும் வகையில் உன் மனதில் இடம் பெறும் என்பதை எப்போதும் நீ நினைவில் வைக்க வேண்டும். உனது தீய எண்ணங்களும் செயல்களும் புலிகளைப் போல் உன்மீது பாய்வதற்குத் தயாராக இருக்கின்றன. அதைப் போலவே உனது நல்ல எண்ணங்களும் செயல்களும் ஒரு நூறாயிரம் தேவதைகளின் ஆற்றலுடன் உன்னை எப்போதும் நிரந்தரமாகப் பாதுகாப்பதற்குத் தயாராக இருக்கின்றன என்னும் ஊக்கம் தரும் நம்பிக்கையும் இருக்கிறது. இதை நீ எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

ஏன்? எதற்கு? என்ற ஆராய்ச்சிகளில் ஈடுபடுவது நமது வேலையன்று, மாறாக, செயலில் ஈடுபட்டுச் செத்து மடிவது ஒன்றுதான் நமது கடன். மகத்தான காரியங்களைச் செய்வதற்காக ஆண்டவன் நம்மைத் தேர்ந்தெடுத்திருக்கிறான் என்றும், அவற்றை நாம் செய்து முடிப்போம் என்றும் உறுதியாக நம்பு.

துரதிருஷ்டவசமாக இந்த வாழ்க்கையில் மக்களில் மிகப் பெரும்பாலானவர்கள் எந்த விதமான ஓர் உயர்ந்த இலட்சியமும் இல்லாமல், இருளடைந்த இந்த வாழ்க்கையில் தட்டுத் தடுமாறிச் சென்று கொண்டிருக்கிறார்கள். உயர்ந்த இலட்சியம் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் ஒருவன் ஆயிரம் தவறுகள் செய்தால், இலட்சியம் ஒன்றும் இல்லாமல் வாழ்பவன் ஐம்பதினாயிரம் தவறுகளைச் செய்வான் என்று நான் உறுதியாகச் சொல்வேன். எனவே உயர்ந்த ஒரு இலட்சியத்தைக் கொண்டிருப்பது மேலானது.

மனிதன் இயற்கையை எதிர்த்துப் போராட ஆரம்பிக்கிறான். அதில் அவன் பல தவறுகளைச் செய்கிறான். அதனால் துன்பப்படுகிறான். ஆனால் இறுதியில் அவன் இயற்கையை வென்று தனது சுதந்திரத்தையே பெறுகிறான். அவன் சுதந்திரத்தை அடைந்தவுடனே இயற்கை அவனுக்கு அடிமையாகிவிடுகிறது.

'இயற்கையின் விதிகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதுதான் சுதந்திரம்' என்ற கருத்தை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். அந்தக் கருத்தின் பொருள் என்ன என்று எனக்குப் புரியவில்லை. மனித வளர்ச்சியின் வரலாற்றின்படி, இயற்கைக்குக் கீழ்ப்படியாமல் இருப்பதுதான் மனித சமுதாயத்தின் வளர்ச்சியாகும். அதுதான் மனித சமுதாயத்தின் வளர்ச்சியை ஆக்கியமைத்திருக்கிறது.

நமது வாழ்க்கை சிறந்ததாகவும், தூய்மையுடையதாகவும் இருந்தால் மட்டும்தான், உலகமும் சிறப்பும் தூய்மையும் பெற்றதாக இருக்க முடியும். அது காரியம்; நாம் அதை விளைவிக்கும் காரணம். எனவே நம்மை நாம் தூய்மைப்படுத்திக் கொள்வோமாக. நம்மை நாம் பரிபூரணர்களாக்கிக் கொள்வோமாக.

சண்டையிடுவதிலும் குறை சொல்லிக் கொண்டிருப்பதிலும் என்ன பயன் இருக்கிறது? நிலைமையைச் சீர்படுத்தி அமைக்க அவை நமக்கு உதவப் போவதில்லை.

தான் செய்ய வேண்டிய கடமையாக அமையும் சிறிய அற்பமான வேலைகளுக்கு முணுமுணுப்பவன் எல்லாவற்றுக்கும் முணுமுணுக்கவே செய்வான். எப்போதும் முணுமுணுத்தபடியே அவன் துன்பம் பொருந்திய வாழ்க்கை வாழ்வான். அவன் தொடுவது எல்லாமே தோல்வியில் முடியும். ஆனால் தன் கடமைகளைத் தவறாமல் ஒழுங்காகச் செய்து கொண்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னால் ஆனவரை வாழ்க்கையில் முயன்றுகொண்டிருப்பவன் கட்டாயம் ஒளியைக் காண்பான். மேலும் மேலும் உயர்ந்த கடமைகள் அவனது பங்காக அவனைத் தேடித் தாமாக வந்து சேரும்.

உலக இயந்திரத்தின் சக்கரங்களிலிருந்து தப்பி ஓடாதே. மாறாக, அதன் உள்ளேயே நின்று கொண்டு, கர்மயோகத்தின் இரகசியத்தைக் கற்றுக் கொள். இயந்திரத்தின் உள்ளே இருந்து சரியானபடி வேலை செய்வதன் மூலமும் அதிலிருந்து வெளியே வந்துவிடுவது சாத்தியமே.

நாம் நினைக்கும் ஒவ்வோர் எண்ணமும், நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும், குறிப்பிட்ட ஒரு காலத்திற்குப் பிறகு சூட்சுமத் தன்மையை அடைகிறது. பின்பு அது வித்து வடிவத்தைப் பெற்று மறைந்திருக்கும் நிலையில் தமது சூட்சும சரீரத்தில் வாழ்கிறது. மீண்டும் சிறிது காலத்திற்குப் பிறகு அது வெளிப்பட்டு வந்து தனக்கு உரிய பலன்களைத் தருகிறது. இந்தப் பலன்களே மனிதனுடைய வாழ்க்கையை நிர்ணயிக்கின்றன. இவ்விதம் மனிதன் தனது வாழ்க்கையைத் தானே உருவாக்கிக்கொள்கிறான். தனக்குத் தானே அமைத்துக் கொள்ளும் விதிகளைத் தவிர, வேறு எதற்கும் மனிதன் கட்டுப்பட்டவன் அல்ல.

என்னுடைய இலட்சியத்தை, உண்மையில் ஒரு சில சொற்களில் சொல்லி முடித்துவிடலாம். அதாவது, மக்களுக்கு அவர்களுடைய தெய்விகத் தன்மையை எடுத்துப் போதிப்பதும், வாழ்க்கையின், ஒவ்வோர் இயக்கத்திலும் அதை எப்படி வெளிப்படுத்திக் காட்டுவது என்பதை எடுத்துச் சொல்வதும்தான் அது.

தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும். அத்துடன் இவை அனைத்திற்கும் மேலாக **அன்பு** இருந்தாக வேண்டும்.

எப்போதும் விரிந்து மலர்ந்துகொண்டே இருப்பதுதான் வாழ்க்கையாகும். சுருங்கிவிடுவது மரணம்தான். தன்னுடைய சொந்த சுக வசதிகளை மட்டும் கவனித்துக்கொண்டு, சோம்பல் வாழ்க்கை வாழும் சுயநலக்காரனுக்கு நரகத்திலுங்கூட இடம் கிடைக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு ஆண்டவன் கொடுத்துள்ள அறிவாற்றலைப் பயன்படுத்தாமல், கண்மூடித்தனமாக நம்புகிறவனை மன்னிப்பதைவிட, தன்னுடைய பகுத்தறிவை முறையாகப் பயன்படுத்தி நம்பாமலிருக்கும் ஒருவனைக் கடவுள் மன்னித்துவிடுவார் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நாம் பகுத்தறிவைப் பயன்படுத்தி ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஒவ்வொரு நாட்டிலுமுள்ள புராதன நூல்களில் கூறப்பட்டிருக்கிற தீர்க்கதரிசிகள், பெரியோர்கள் ஆகியவர்களைக் குறித்த உண்மைகளை நமது பகுத்தறிவானது உண்மை என்று ஏற்றுக்கொள்ளும் போது, அவர்களிடம் நாம் நம்பிக்கை வைக்கலாம். அதன் பின் அத்தகைய தீர்க்கதரிசிகளை நாம் நம்மிடையே பார்க்கும்போது அவர்களிடம் நம்பிக்கை வைப்போம். குறிப்பிட்ட ஒரு சில கொள்கைகளுக்கு எடுத்துக்காட்டுகளாகத்தான் அவர்கள் விளங்குகிறார்களே தவிர, அவர்கள் விநோதமான மனிதர்கள் அல்லர் என்பதை அப்போது நாம் புரிந்துகொள்வோம்.

உன்னுடைய குறிக்கோளை அடைவதற்கு நீ ஏன் முயற்சி செய்யக்கூடாது? தோல்வியின் மூலம் மேலும் நாம் புத்திசாலிகளாகிறோம். காலம் எல்லையற்றது. இதோ இந்தச் சுவரைப் பார். இந்தச் சுவர் எப்போதாயினும் பொய் பேசியிருக்கிறதா? ஆனாலும் அது எப்போதும் ஒரு சுவராகத்தான் இருந்து கொண்டிருக்கிறது.

மனிதன் பொய் பேசுகிறான் – ஆனால் அவனே பிறகு ஒரு தெய்வமாகவும் ஆகிவிடுகிறான். ஏதாயினும் ஒன்றைச் செய்துகொண்டிருப்பது மேல். அது தவறாகவே இருந்தாலும்கூட அதை நீ பொருட்படுத்த வேண்டியதில்லை. ஒன்றுமே செய்யாமலிருப்பதை விட அது எவ்வளவோ மேலானது. பசு ஒருபோதும் பொய் சொல்வதில்லை. ஆயினும் காலமெல்லாம் அது ஒரு பசுவாகத்தான் இருக்கிறது. ஏதாவது ஒன்றைச் செய்!

தொடர்ந்து புனிதமான எண்ணங்களையே சிந்தித்தபடி நன்மையைச் செய்து கொண்டிரு. தீய சம்ஸ்காரங்களைத் தலைகாட்டாதபடி அழுத்தி வைப்பதற்கு அது ஒன்றே ஒன்றுதான் வழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் எந்த மனிதனையும் உருப்படாதவன் என்று சொல்லாதே. ஏனென்றால், அவன் ஒருவிதப் பழக்க வழக்கங்களின் தொகுப்பாக, குறிப்பிட்ட ஓர் ஒழுக்கத்தின் அடையாளமாக மட்டும்தான் விளங்குகிறான். அவனிடமுள்ள பழைய குணங்களை மேலும் சிறந்த புதிய பழக்க வழக்கங்களால் தடுத்துவிட முடியும்.

ஒழுக்கம் என்பது மீண்டும் மீண்டும் செய்யப்படும் பழக்கங்களால்தான் உருவாகிறது. எனவே, மேலும் மேலும் மேற்கொள்ளும் பழக்கங்களால்தான் ஒழுக்கத்தை மேலும் சிறந்ததாகச் சீர்படுத்தி அமைக்கமுடியும்... பிரம்மசரியம் அனுஷ்டிப்பவனுடைய மூளைக்கு அபாரமான ஆற்றலும் அதீதமான மனவலிமையும் உண்டு.

இடையறாத பயிற்சியின் மூலம் கஷ்டங்களை நாம் வெல்ல முடியும். எளிதில் பாதிக்கப்படும் வகையில் நம்மை நாமே விட்டு வைத்தாலன்றி, நமக்கு எதுவும் தேர்ந்துவிட முடியாது என்பதை நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

நான் ஒரு சமயம் இமயமலைப் பகுதியில் பிரயாணம் செய்துகொண்டிருந்தேன். நெடுஞ்சாலை ஒன்று எங்கள் முன்பு நீண்டு இருந்தது. ஏழைத் துறவிகளாகிய எங்களைத் தூக்கிச் செல்வதற்கு ஆள் வைப்பது எங்களுக்கு இயலாத காரியம்.

எனவே, வழி முழுவதும் நாங்கள் நடந்தே செல்ல வேண்டியிருந்தது. எங்கள் கூட்டத்தில் வயோதிகரான கிழவர் ஒருவர் இருந்தார். அவர் 'ஐயோ, இதை எப்படிக் கடந்து செல்வது? இதற்கு மேல் ஒரு அடியும் என்னால் நடக்க முடியாது! என் நெஞ்சு வெடித்துவிடும் போல் இருக்கிறது" என்று சொன்னார்.

"கீழே குனிந்து உங்கள் கால்களைப் பாருங்கள்" என்று நான் சொன்னேன். அவரும் அவ்விதமே நான் சொன்னபடி செய்தார். பிறகு அவரிடம் நான், "இப்போது உங்கள் கால்களின் கீழே உள்ள இந்தப் பாதை, ஏற்கனவே நீங்கள் கடந்து வந்த சாலையாகும். மேலும் அதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலையைத்தான் நீங்கள் உங்கள் முன்னால் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்... விரைவில் அதுவும் உங்கள் கால்களின் கீழ் வந்துவிடப் போகிறது" என்று கூறினேன்.

மிக உயர்ந்த பொருள்களெல்லாம் உங்கள் காலடியின் கீழ் இருக்கின்றன. ஏனென்றால், உண்மையில் நீங்கள் தெய்விக நட்சத்திரங்களாக இருந்துகொண்டிருக்கிறீர்கள்.

கோழைகளும் முட்டாள்களும் 'இதுதான் விதி' என்று சொல்வார்கள் என்பதாகச் சமஸ்கிருதப் பழமொழி ஒன்று சொல்லுகிறது. ஆனால் வலிமையுடைய மனிதனோ எழுந்து நின்று, 'என்னுடைய தலைவிதியை நானே அமைத்துக் கொள்வேன்' என்று சொல்லுகிறான். வயதாகி மூப்பு நிலையை அடைந்து கொண்டிருப்பவர்தாம் விதியைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பார்கள். இளைஞர்கள் பொதுவாக ஜோதிடத்தின் பக்கம் வருவதில்லை.

ஒருவனுடைய இயல்பு எப்படிப்பட்டது என்பதை உண்மையில் நீ தீர்மானிக்க விரும்பினால், அவன் செய்யும் பெரிய காரியங்களைக் கவனிக்காதே.

ஒவ்வொரு முட்டாளும் ஒரு சமயம் இல்லாவிட்டால் மற்றொரு சமயம் வீரனாகிவிடுவான். ஒரு மனிதனை அவன் செய்யும் மிகச் சாதாரணமான காரியங்களின் போது நீ கவனித்துப் பார்க்க வேண்டும். ஏனென்றால் இத்தகைய சாதாரணச் செயல்கள்தாம், பெரிய மனிதன் ஒருவனுடைய உண்மையான இயல்பை உனக்குத் தெரிவிப்பனவாக இருக்கும். வாய்ப்புகள் மிகப் பெருமளவில் கிடைக்கும்போது மிகத் தாழ்ந்த மனிதன்கூட ஏதோ ஒரு வகையாக உயர்ந்த நிலைக்கு உயர்த்தப்பட்டுவிடுகிறான். ஆனால் எங்கு இருந்தாலும், யாருடைய இயல்பு எப்போதும் ஒரே மாதிரியான பெருந்தன்மை உடையதாக இருக்கிறதோ அவன்தான் உண்மையில் மிகப் பெரிய மனிதனாவான்.

பிரதிபலன் எதையும் சிந்திக்காமல், நாம் உலகிற்குச் செலுத்தும் ஒவ்வோர் நல்லெண்ணமும் நமக்குள் சேகரித்து வைக்கப்படுகிறது. அத்தகைய நல்ல எண்ணம் நமது கர்மச் சங்கிலியை இணைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணி ஒன்றை உடைத்தெறிகிறது. மக்களுள் மிகவும் தூயவர்களாகும் வரை மேலும் மேலும் அது நம்மைத் தூய்மைப்படுத்திக் கொண்டே இருக்கிறது.

பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால், அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்துவிடும். வேறு எந்தச் சக்தியாலும் அவற்றைத் தடுத்து நிறுத்த முடியாது. ஒரு முறை நீ அவற்றை இயங்கச் செய்துவிட்டால் அதனால் வரும் விளைவையும் நீ ஏற்றே ஆகவேண்டும். இதை நீ நினைவில் வைத்துக்கொண்டால், தீய செயல்களைச் செய்வதிலிருந்து அது உன்னைத் தடுத்து நிறுத்தும்.

இயற்கையை எதிர்த்துப் போராடும் எல்லாவற்றிலும் உயிர் உணர்ச்சி இருக்கிறது. இத்தகைய எதிர்ப்பு உள்ள இடத்தில் உயிர் வாழ்வதற்கான அறிகுறி வெளியாகிறது. ஒரு சிற்றெறும்பைக் கொள்வதற்கு நீ முயற்சி செய்தால், அதுகூடத் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக உடனே எதிர்த்து நிற்கும். எங்கே போராட்டம் இருக்கிறதோ, அங்கு உயிர் இருப்பதற்கு உரிய அடையாளம் இருக்கிறது. உயிர் வாழ்வதற்கான உணர்ச்சி அங்கு வெளிப்படுகிறது.

மனிதன்தானே பணத்தை உண்டுபண்ணுகிறான்? பணம் மனிதனை உண்டுபண்ணியதாக எங்கேயாவது எப்போதாவது நீ கேள்விப்பட்டிருக்கிறாயா? நீ உன்னுடைய எண்ணங்களையும் சொற்களையும் முற்றிலும் ஒன்றாக இருக்கும்படி செய்தால், அதைச் செய்ய உன்னால் இயலுமானால், பணம் தண்ணீரைப் போலத்தானாக உனது காலடியில் வந்து கொட்டும்.

இந்தப் பிரபஞ்சத்திலேயே நன்மைக்கு அழைத்துச் செல்லும் பாதைதான் மிகவும் கரடுமுரடாகவும் செங்குத்தானதாகவும் இருக்கிறது. அந்தப் பாதையில் இத்தனைபேர் வெற்றி பெற்றிருக்கிறார்களே என்பதுதான் வியப்புக்கு உரிய விஷயம். பல பேர் தோல்வி அடைந்து விழுந்து போனதில் ஆச்சரியமே இல்லை. ஆயிரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைஇடறி விழுவதன் மூலம் தான் நல்ல ஒழுக்கத்தை உறுதியாக நிலைநிறுத்த வேண்டும்.

ஒவ்வொரு பணியும் மூன்று நிலைகளைக் கடந்ததாக வேண்டும். ஏளனம், எதிர்ப்பு, பிறகு கடைசியில் ஏற்றுக்கொள்ளப்படுதல். தனது காலத்தைவிட்டு முற்போக்காகச் சிந்திக்கும் ஒவ்வொரு மனிதனும் நிச்சயம் தவறாகவே புரிந்து கொள்ளப்படுவான். எனவே எதிர்ப்பும் அடக்குமுறையும் வரவேற்கத் தக்கவையே.

ஆனால் நாம் மட்டும் உறுதியாகவும், தூய்மையாகவும், கடவுளிடம் அளவு கடந்த நம்பிக்கை உடையவனாகவும் இருக்கவேண்டும். அப்படி இருந்தால் இந்த இடைஞ்சல்கள் எல்லாம் மறைந்து போய்விடும்.

ஒவ்வொரு ஜீவான்மாவிலும் தெய்விகத் தன்மை மறைந்திருக்கிறது. வெளியேயும் உள்ளேயும் இருக்கும் இயற்கையைக் கட்டுப்படுத்தி, உள்ளே குடிகொண்டுள்ள இந்தத் தெய்விகத் தன்மையை மலரும்படி செய்வதுதான் முடிவான இலட்சியமாகும்.

இதைத் கர்மயோகம், கடவுள் வழிபாடு மனக்கட்டுப்பாடு, தத்துவ விசாரம் என்னும் இவற்றுள் ஒன்றினாலோ, பலவற்றினாலோ, எல்லாவற்றினாலோ செய்து சாதித்ததுச் சுதந்திரமாய் இரு.

இதுவே சமயத்தின் முழு உண்மை ஆகும். சமய சித்தாந்தங்களோ, ஆகமக் கட்டுப்பாடுகளோ, சமயச் சடங்குகளோ, சாஸ்திரங்களோ, கோவில்களோ இவை போன்ற மற்றவையோ இதற்கு உதவி புரியும் இரண்டாம் தரமான முக்கியத்துவமுடைய சாதனங்களாக மட்டுமே அமைந்திருக்கின்றன.

ஒவ்வொருவனும் தன்னுடைய வழிதான் சிறந்தது என்று நினைக்கிறான். மிகவும் நல்லது. ஆனால் உனக்கு வேண்டுமானால் அது நல்லதாக இருக்கலாம் என்பதை நீ நினைவில் வைக்க வேண்டும். ஒருவனால் சிறிதுகூட ஜீரணிக்க முடியாத ஓர் உணவு, மற்றொருவனுக்கு எளிதில் ஜீரணமாகக் கூடியதாக இருக்கும். உனக்குப் பொருத்தமாக இருப்பதனாலேயே ஒவ்வொருவனுக்கும் அதுதான் வழி. சங்கரனுக்குப் பொருத்தமான சட்டை சந்திரனுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரிக்கும் பொருத்தமாக இருக்க வேண்டும் என்ற முடிவிற்குத் தாவிவிடாதே. கல்வியறிவில்லாத, பண்பாடற்ற, சிந்தனையில்லாத ஆண் பெண் அனைவரும் இத்தகைய குறுகலான சட்டைக்குள் புகுத்தப்பட்டிருக்கிறார்கள்!

நீயாகவே சிந்தித்துப் பார். நாத்திகனாக இருந்து விட்டுப் போ! இந்த உலகமே பெரிது என்று நினைக்கும் இலெகிகனாக இருந்துவிட்டுப் போ! அதுகூட எவ்வளவோ பரவாயில்லை மனதைப் பயன்படுத்திச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த மனிதனுடைய வழி தவறானது' என்று சொல்வதற்கு உனக்கு என்ன உரிமை இருக்கிறது? உனக்கு வேண்டுமானால் அது தவறாக இருக்கலாம். அதாவது, நீ அந்த வழியைப் பின்பற்றினால் அதனால் உனக்குக் கேடு விளையக்கூடும். ஆனால் அதற்காக அந்த வழியால் அவன் கீழ்நிலையை அடைந்து விடுவான் என்பது அதன் பொருளல்ல.

எனவே, உன்னிடம் அறிவு இருந்து, மற்றொருவன் பலவீனனாக இருப்பதை நீ பார்த்தால், அதற்காக அவனை நீ கண்டிக்காதே. உனக்கு இயலுமானால் அவனுடைய நிலைக்கு இறங்கிச் சென்ற அவனுக்கு நீ உதவி செய். தானாகவே அவன் வளர்ச்சி பெற வேண்டும். நான் அவனுடைய தலைக்குள் ஐந்து மணி நேரத்தில் ஐந்து கூடை அறிவைத் திணித்துவிடுவேன். ஆனால், அதனால் என்ன நன்மை ஏற்பட்டுவிடப் போகிறது? அவன் முன்பு இருந்ததைவிட மேலும் சற்று அதிகம் மோசமானவனாகத்தான் இருப்பான்.

77. "எழுந்திருங்கள், விழித்துக் கொள்ளுங்கள், இனியும் தூங்க வேண்டாம். எல்லாத் தேவைகளையும் எல்லாத் துன்பங்களையும் நீக்குவதற்கான போராற்றல் உங்கள் ஒவ்வொருவருக்குள்ளேயும் இருக்கிறது. இதை நம்புங்கள். அப்போது அந்தப் பெரிய சக்தி உங்களிடமிருந்து வெளிப்படும்" என்ற இந்த உண்மையை அனைவருக்கும் சென்று போதிப்பாயாக... எல்லையற்ற வலிமையும், எல்லையற்ற ஞானமும், வெல்ல முடியாத ஆற்றலும் உனக்குள்ளேயே குடிகொண்டிருப்பதை நீ உணரமுடிந்தால், நீ அந்த ஆற்றலை வெளியே கொண்டுவர முடியுமானால், நீயும் என்னைப் போல் ஆக முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணப்பம் :-

மனதி லுறுதி வேண்டும்.

வாக்கினி லேயினிமை வேண்டும்.

நினைவு நல்லது வேண்டும்.

நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்.

கனவு மெய்ப்பட வேண்டும்.

கைவசமாவது விரைவில் வேண்டும்.

தனமும் இன்பமும் வேண்டும்.

தரணியிலே பெருமை வேண்டும்.

கண் திறந்திட வேண்டும்.

காரியத்தி லுறுதி வேண்டும்.

பெண் விடுதலை வேண்டும்.

பெரிய கடவுள் காக்க வேண்டும்.

மண் பயனுற வேண்டும்

வானகமிங்கு தென்பட வேண்டும்.

உண்மை நின்றிட வேண்டும்.

ஓம் ஓம் ஓம் ஓம்....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில சித்திரவதைகள்

## [அர்த்தமுள்ள இந்துமதம் கண்ணதாசன்]

உன்னை நீ அறிய விடாமல் தடுக்கும் இன்னொரு சக்தி எது?

குடும்பம்.

உனக்கு மனைவி மக்கள் இல்லையென்றாலும் கூட, பெற்றோர் இருப்பார்கள், உடன் பிறந்த அண்ணன் – தம்பிகள், அக்காள் – தங்கைகள் இருப்பார்கள். ஏதேனும் ஒரு சிக்கல் இருந்து கொண்டே இருக்கும்.

*"வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்*
*வாசல் தோறும் வேதனை இருக்கும்*
*வந்த துன்பம் எதுவென்றாலும்*
*வாடி நின்றால் ஓடுவதில்லை!*

இப்படி ஒரு பாடலை நான் படத்தில் எழுதியுள்ளேன்.

வாழ்க்கை என்றால் வேதனை இருந்து கொண்டேதானிருக்கும்.

அதில் நீ எண்ணிப் பார்க்க வேண்டியது என்ன?

*"உனக்கும் கீழே உள்ளவர் கோடி*
*நினைத்துப் பார்த்து நிம்மதி தேடு!"*

*"தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை*
*அம்மா பெரிதென்று அகமகிழ்க!"*
என்றார் குமரகுருபர சுவாமிகள்.

காலுக்குச் செருப்பு இல்லையே என்று ஒருவன் கவலைப் பட்டானாம். அவன் ஒரு கோயிலுக்குப் போனானாம். அங்கே இரண்டு கால்களும் இல்லாமல் ஒருவன் உட்கார்ந்து இருந்தானாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஆண்டவனே! எனக்குச் செருப்பில்லா விட்டாலும் பரவாயில்லை; இரண்டு கால்களும் இருக்கிறதே” என்று பெருமிதத்தோடு திரும்பி வந்தானாம்.

அந்தக் கால் இல்லாதவன், சற்று ஊர்ந்து போனானாம். அங்கே கண்ணில்லாத ஒருவன் உட்கார்ந்திருந்தானாம்.

“ஆண்டவனே! எனக்குக் கால்கள் இல்லாவிட்டாலும் பரவாயில்லை; உலகத்தைக் காணக் கண்களையாவது கொடுத்தாயே, அதுவரைக்கும் நன்றி!” என்றானாம்.

“உனக்கு வருகின்ற துன்பத்தைப் பார்த்து அழாதே. உனக்கும் கீழே உன்னை விடத் துன்பப் படுகிறவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள் என்று எண்ணி, அவர்களைப் பார்த்துச் சந்தோஷப்படு!” என்றார்கள் நம்முடைய மூதாதையர்கள்.

குடும்பத்தில் அவ்வளவு சிக்கல் இருக்கும். அதிலேயும் மனைவி மக்கள் என்று மாட்டிக் கொண்டால், சிக்கல் அதிகமாகும்.

நாளுக்கு நாள் நீ உனக்காகவே வாழ்ந்தது போய், அவர்களுக்காக வாழ வேண்டியிருக்கும். ஒரு யந்திர மனிதனாக நீ வாழ வேண்டியிருக்கும்.

நாளைக்கு என்ன செய்வது என்று எண்ணினால், உன்னைச் சிந்திக்காமல் உறவையே சிந்திக்க வேண்டியிருக்கும்.

உறவிலே யாராவது ஒருவர் ஏதாவது சொல்லி விட்டால், சந்தேகம் வரும்; ‘ஐயோ! தாங்க முடியவில்லையே!’ என்று கதறத் தோன்றும். செத்துப் போகலாமா?’ என்ற எண்ணம் வரும். ‘எங்கேயாவது ஓடி விடலாமா?’ என்ற ஆசை வரும். ‘இப்படி என்னாலே வாழ முடியாது!’ என்று தலையில் அடித்துக் கொள்ளத் தோன்றும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றா? இரண்டா? குடும்பத்துக்குள்ளே ஏராளமான கலவரங்கள், சங்கடங்கள் குழப்பங்கள், மயக்கங்கள் வந்து கொண்டே இருக்கும்.

அதிலே சிக்கிக் கொண்ட பிறகு, நீ உன்னை அறிவது எப்படி?

மனம் இவர்களுக்கிடையிலே சின்னாபின்னப் பட்ட பிறகு, அந்த மனதைப் பக்குவப் படுத்துவது, பாடம் பண்ணுவது எப்படி?

அதற்காக, 'குடும்பத்திலே மாட்டிக் கொள்ளாதே! கல்யாணம் செய்து கொள்ளாதே! சந்நியாசியாகி விடு!' என்று நான் போதிக்க வருகிறேனா என்றால் இல்லை.

பட்டும் படாமலும், தொட்டும் தொடாமலும் இருக்க வேண்டும்.

'எண்ணெயை உடம்பிலே தேய்த்துக் கொண்டு என்னதான் மண்ணிலே புரண்டாலும், ஒட்டுவதுதான் ஒட்டும்' என்று கிராமங்களில் சொல்வார்கள்.

'இவ்வளவுதான் நமக்கு வந்தது; இவ்வளவுதான் நமக்கு இறைவன் கொடுத்து' என்று அமைதி அடைந்து விடு.

மனதிலே டென்ஷன் – கவலை இவற்றை வளர்த்துக் கொள்ளாதே.

மனைவி ஒரு பக்கம் நின்று திட்டிக் கொண்டிருப்பாள்; மக்கள் தலைமாட்டிலே நின்று ஏசுவார்கள்; மருமக்கள் வேறு பேசுவார்கள்.

பேரன் பேத்திகளைத் தூக்கி வைத்துக் கொண்டு, இவர்களை எல்லாம் மறந்து விடு. பேரன், பேத்திகளே உனக்கு விரோதமாக மாற மாட்டார்கள்.

ஏனென்றால், 'எந்தக் காலத்திலேயும் மூன்றாவது பரம்பரை என்பதுதான், உன்னைக் காப்பாற்றுகின்ற பரம்பரை' என்று நம்முடைய மூதாதையர்கள் கருதினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால்தான், 'பாட்டனுடைய பேரை வைப்பவன்' என்கிற பொருளிலே 'பேரன்' என்கின்ற வார்த்தையைக் கொடுத்தார்கள்.

பேரெடுக்கின்ற பெண்ணாதலால், 'பேத்தி' என்று பேத்தியைச் சொன்னார்கள்.

நல்ல மனைவி வாய்த்தால், ஆண்டவனுடைய கருணை; நல்ல பிள்ளை வாய்த்தால், ஆண்டவனுடைய அருள்; இல்லையென்றால் கூட நீ கவலைப்பட்டு என்ன ஆகப்போகிறது?

கண்ணீர் வடிப்பதாலே கவலைகள் தீர்ந்து விடப் போகின்றனவா?

அதைத்தான் சொன்னேன், 'வந்த துன்பம் எதுவென்றாலும் வாடி நின்றால் ஓடிவிடாது' என்று.

ஒருவர் செத்துப் போகிறார்; பத்துப் பேர் அழுகிறார்கள். 'இவ்வளவு பேர் அழுகிறார்களே, நான் ஏன் சாக வேண்டும்?'' என்று செத்தவன் திரும்பி வந்து விடுகின்றானா?

வந்துவிட்டது கவலை. 'ஐயோ!' என்று நீ தலையில் அடித்துக் கொள்வதால், அந்தக் கவலை போய் விடப் போகிறதா?

குடும்பம் சின்னா பின்னமாகப் போய்விட்டது. அப்படி ஆகிவிட்டது. இப்படி ஆகிவிட்டது என்று மனதைப் போட்டு அலைக்கழித்து, அழிச்சாட்டியம் பண்ணி, துயரங்களிலேயே மனதை ஊற வைத்து, 'போதும்! போதும்!' என்று ஏங்கி, கடைசியில் ஒரு நாள் 'செத்தால் போதும்' என்று முடிவு கட்டுவதை விட, வாழ்க்கையில் நரகம் வேறு என்ன இருக்கிறது?

'டேக் இட் ஈஸி' எதையும் சுலபமாக ஏற்றுக்கொள்.

எவ்வளவு பெரிய துயரம் வந்தாலும், எவ்வளவு பெரிய கொடுமை நிகழ்ந்தாலும், அதை மிகச் சுலபமாக எடுத்துக் கொண்டு விட்டால், 'இது சகஜம்; இது நடக்கத் தான் செய்யும்; இதை நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்ப்பார்த்திருக்க வேண்டும்' என்று எண்ணிவிட்டால், பிறகு கவலையே கிடையாது.

'ஐயோ! நாம் இதை எதிர்பார்க்கவில்லையே' என்று எண்ணும்போது தான் கவலை வருகிறது.

கேளாத செய்தி ஒன்றைக் கேட்டால்தான், உடம்பு நடுங்குகின்றது; மனம் நடுங்குகிறது.

'இது கேட்க வேண்டிய செய்திதான்' என்று உடனேயே எண்ணிவிட்டால் அந்த நடுக்கம் தீர்த்து போய் விடுகிறது.

மனம்தானே காரணம். முன்பு நான் சொன்னபடி, கிராமங்களில் அதைத்தானே சொல்வார்கள், 'எல்லாவற்றுக்கும் மனசுதான் காரணம்' என்று.

கட்டிய மனைவி அழகாக இல்லாவிட்டாலும் கூட, அவள் அழகாக இருக்கிறாள் என்று மனசு நினைத்து விட்டால், அதைவிட அழகு உலகத்திலேயே கிடையாது.

என் பிள்ளை யோக்கியன்தான் என்று மனசு நினைத்து விட்டால், அதற்கு ஈடான நிம்மதி கிடையாது.

'எனக்கு வருகின்ற வருமானம் போதும்; இதை விட எவனுக்கு வந்து கிழித்து விட்டது' என்று எண்ணி விட்டால், அதை விட ஒரு நிம்மதி வேறு கிடையாது.

கோயிலுக்கு நீ ஏன் ஓட வேண்டும்?

'துன்பம், துன்பம்' என்று நீ ஆண்டவனிடம் ஓடி முறையிட்டுக் கொள்ளலாம். முறையிட்டுக் கொண்டு ஓடி வந்து, 'ஐயோ! ஐயோ!' என்று தலையிலடித்துக் கொண்டால், நீ கோயிலுக்குப் போனதற்கே மரியாதை இல்லாமற் போய் விடும்.

கோயிலிலே போய் உட்கார்ந்து கொண்டு பூஜை செய்; 'ஆண்டவனே! எனக்கு என்ன துன்பம் வரட்டும்,' எவ்வளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயரங்கள் வரட்டும், உனக்காகத் தாங்கிக் கொள்ளுவேன்; இந்த பூமியிலே நான் பிறந்தாகி விட்டது. வாழ்ந்தாக வேண்டும். தற்கொலை செய்து கொள்ள நான் தயாராக இல்லை. மரணம் என்ற ஒன்றை அனுப்பி என்னை நீ எடுத்துக் கொள்கிற வரையில், இங்கே வாழ்வது என்று நான் முடிவு கட்டிவிட்டேன். அந்த வாழ்க்கைச் சாலையில் எது வந்தாலும், எது குறிக்கிட்டாலும் கூட நான் கவலையில்லாமல் உன் சந்நிதியிலே நிற்பேன்; வாழுவேன்; எனக்காக யார் வாழுகிறார்களோ அவர்களைக் காப்பாற்றுவேன். யாருக்காக நான் வாழ வேண்டுமோ, அவர்களுக்காக வாழுவேன்' என்று ஆண்டவனிடம் வேண்டிக் கொண்டு வீட்டுக்குத் திரும்பிவிடு.

இரவிலே, வீடு பற்றி எரிந்தால் கூட, நிம்மதியாகத் தூங்கப் பழகு.

சுற்றுமுற்றும் சண்டைகள் நடந்து கொண்டிருந்தாலும் கூட, ஒரு குறிப்பிட்ட அளவாவது சாப்பிடப் பழகு.

டாக்டர் என்ன கேட்கிறார், 'வயிறு பசிக்கிறதா? தூக்கம் வருகிறதா?' என்று இரண்டை மட்டும் தானே கேட்கிறார்.

மனம் கெட்டுப் போனால், பசி அடங்கிப் போகும்; தூக்கம் கெட்டுப் போகும்.

மனதை அடக்குகின்ற பயிற்சியிலே குடும்பத்திற்குள் இருப்பவனும் இறங்கியாக வேண்டும். அவனுக்கும் அந்தப் பயிற்சி வந்து விட்டால், பிறகு குடும்பமே அவனை அண்டி நிற்கும்.

'நீங்கள் என்ன சொன்னாலும் என் காதில் ஏறாது; நீங்கள் என்னையே திட்டுங்கள், கவலை இல்லை' என்று சொல்லிவிட்டு, அவன் நிம்மதி கொண்டு விட்டால், பிறகு அத்தனை பேரும் அமைதி கொண்டு விடுவார்கள்.

சண்டை போடுகிறவர்களைச் சமாதானப்படுத்த ஆயிரம் வார்த்தைகள் தேவையில்லை, மௌனம் ஒன்றே போதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சும்மா இருப்பதே சுகம்' என்றார்கள். மௌனமாக இருந்தால், அமைதியாக இருந்தால், அந்த அமைதியும் மௌனமும் அடுத்தவர்களே அடக்கி ஆளும் அங்குசமாகப் பயன்படும்.

எவ்வளவு பெரிய யானையும் பயப்படக்கூடிய ஒரே அங்குசம், நாம் நம்மையறிந்து மௌனமாகக் கட்டுண்டு கிடப்பதே.

சும்மா இருத்தல் – அதன் மூலம் குடும்பம் அடங்கும்; உறவு அடங்கும்; சுற்றம் அடங்கும்; அத்தனை பேரும் அடங்குவார்கள்.

அடக்குவது மனதை; அதன் மூலம் அடங்குவது உலகம்.

ஆகவே. நான் சொல்லக் கூடியது இறுதியாக ஒன்றுதான்.

உடம்பைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்; மனதை அடக்குங்கள்.

இந்த இரண்டும் பத்திரமாக இருக்குமானால், உலகம் உங்கள் கையிலே.

'உடம்பு உடம்பு' என்று நான் ஒவ்வோர் தடவையும் ஏன் கூறுகிறேன் என்றால், எந்த உடம்பை அலட்சியப் படுத்தினேனோ, அதன் மீது இப்போது எனக்கு அக்கறை பிறக்கிறது.

சுவரை வைத்துக் கொண்டு தானே சித்திரம் என்பார்கள். உடம்பைப் பேணி வைத்துக் கொண்டால், உலகத்தையே வெல்லலாம் என்பார்கள்.

அப்பொழுதெல்லாம் அது தோன்றவில்லை. ஆனால், இப்பொழுது நோய்வாய்ப்பட்டு விடுமோ, உடல் படுத்து விடுமோ, எழ முடியாதோ, எழுத முடியாதோ என்றெல்லாம் எண்ணும்போது உடம்பைப் பற்றிய கவலை பெரும் கவலையாகி விடுகிறது.

ஆகவே உடல், உள்ளம் – இரண்டு தான் நம்மிடம் இருக்கின்ற பெரும் சொத்துகள் என்பதை மனதிலே கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விவேகானந்தர் பேசுகிறார்.....

1. இரும்பு போன்ற தசைகளும், எஃகு போன்ற நரம்புகளும் எதனாலும் தடுக்க முடியாத வஜ்ராயுதம் போன்ற அளவற்ற மனவலிமையும் வாய்ந்தவர்களே இப்போது நம் நாட்டிற்குத் தேவை. இந்த அண்ட கராகரங்களின் அந்தரங்க இரகசியங்களை யெல்லாம் ஊடுருவி ஆழ்ந்து அறியக்கூடிய மனவலிமை, ஆழ்ந்த கடலின் அடித்தளத்துக்குப் போக வேண்டியிருந்தாலும், மரணத்தை நேருக்கு நேரே சந்திக்க வேண்டி வந்தாலும், எடுத்த காரியத்தை எவ்வாறேனும் முடிக்கும் அஞ்சாநெஞ்சம் – இவையே நமக்கு இப்போது வேண்டும்.

2. முன்னேறிக்கொண்டே இரு! முறையற்ற ஒரு செயலைச் செய்துவிட்டதாகவே நீ நினைத்தாலும், அதற்காக நீ திரும்பிப் பார்க்க வேண்டாம் அவை போன்ற தவறுகளை முன்பு செய்யாமல் இருந்திருந்தால், இன்று நீ இருக்கும் நிலையை அடைந்திருக்க முடியும் என்று இப்போது நம்புகிறாயா? நீ செய்த தவறுகளை வாழ்த்து ; அந்தத் தவறுகள் நீ அறியாமலே தெய்வங்களாக இருந்திருக்கின்றன. துன்பங்களுக்கு நல்வாழ்த்துக்கள்! இன்பங்களுக்கும் நல்வாழ்த்துக்கள் ! உன்நிலை எப்படிப்பட்டதாக இருந்தாலும், அதைக்குறித்து நீ கவலைப்பட வேண்டாம்! இலட்சியத்தை உறுதியாகப் பற்றிக் கொண்டு முன்னேறியபடியே இரு!

3 அறிவு, உள்ளம் ஆகிய இரண்டில் எதை பின்பற்றுவது என்ற போராட்டம் எழும்போது உள்ளம் சொல்வதையே நீங்கள் பின்பற்றுங்கள். ஏனென்றால் அறிவுக்கு, பகுத்தறிவு என்னும் ஒரு நிலை மட்டும்தான் உண்டு அந்த ஒரு நிலைக்குள் இருந்தபடியே அறிவு வேலை செய்கிறது. தனக்கு உரிய அந்த எல்லையைக் கடந்து அறிவு செல்ல முடியாது. அறிவாற்றலால் ஒரு போதும் செல்லவே முடியாத உயர்ந்த மனநிலைக்கு இதயம் ஒருவனை அழைத்துக்கொண்டு போகிறது. இதயம், அறிவையும் கடந்து தெய்வீக அருள் என்னும் நிலையை அடைகிறது. அன்புள்ளம் கொண்ட மக்களுக்குப் பாலிலிருந்து வெண்ணெய் கிடைக்கிறது. அறிவாற்றல் நிறைந்த மிக்க மக்களுக்கோ எஞ்சியுள்ள மோரே கிடைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஅருட்பா

முன்னவனே யானை முகத்தவனே முத்திநிலம்
சொன்னவனே தூய்மெய்ச் சுகத்தவனே – என்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின்தாள் சரண்.

....

அப்பா நான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீ பொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும் வேண்டுவனே.

....

நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து நெகிழ்ந்துநெகிழ்த் தன்பே
நிறைந்துநிறைத் தூற்றெழுங்கண் ணீரதனால் உடம்பு
நனைந்துநனைந் தருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று
வனைந்துவனைந் தேத்தும்நாம் வம்மின்உல கியலீர்
மரணமிலாப் பெருவாழ்நாளில் வாழ்ந்திடலாம் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல் கின்றேன்
பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே
அருட்சோதித் தெய்வம்எனை ஆண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்தத் தெய்வம்
பொருட்சாரும் மறைகள் எலாம் போற்றுகின்ற தெய்வம்
போதாந்தத் தெய்வம்உயர் நாதாந்தத்தெய்வம்
இருட்பாடு நீக்கிஒளி ஈர்த்தருளும் தெய்வம்
எண்ணிய நான் எண்ணியவா றெனக்கருளும் தெய்வம்
தெருட்பாடல் உவந்தெனையும் சிவமாக்கும் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழைஅடி வாழைஎன வந்ததிருக் கூட்ட
மரபினில்யான் ஒருவன் அன்றோ வகைஅறியேன் இந்த
ஏழைபடும் பாடுனக்குந் திருவுளச்சம் மதமோ
இதுதகுமோ இதுமுறையோ இது தருமந் தானோ
மாழைமணிப் பொதுநடஞ்செய் வள்ளால்யான் உனக்கு
மகன் அலனோ நீஎனக்கு வாய்த்ததந்தை அலையோ
கோழை உல குயிர்த்துயரம் இனிப்பொறுக்க மாட்டேன்
கொடுத்தருள்நின் அருள்ஒளியைக் கொடுத்தருள் இப்பொழுதே

....

படமுடியா தினித்துயரம் படமுடியா தரசே
பட்டதெல்லாம் போதும் இந்தப் பயந்தீர்த்திப் பொழுதென்
உடல்உயிரா தியஎல்லாம் நீஎடுத்துக் கொண்டுன்
உடல் உயிரா தியஎல்லாம் உவந்தெனக்கே அளிப்பாய்
வடலுறுசிற் றம்பலத்தே வாழ்வாய்என கண்ணுள்
மணியேஎன் குருமணியே மாணிக்க மணியே
நடனசிகா மணியேஎன் நவமணியே ஞான
நன்மணியே பொன்மணியே நடராச மணியே.

....

தடித்தஓர் மகனைத் தந்தைஈண் டடித்தால் தாயுடன்
அணைப்பள்தாய் அடித்தால்
பிடித்தொரு தந்தை அணைப்பன் இங் கெனக்குப் பேசிய
தந்தையும் தாயும்
பொடித்திருமேனி அம்பலத் தாடும் புனிதநீ ஆதலால் என்னை
அடித்தபோதும் அணைத்திடல் வேண்டும் அம்மைஅப் பாஇனி
ஆற்றேன்

....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கொண்ட விரதம்நின் அடிஅலால் பிறர்தம்மை
நாடாமை ஆகும் இந்த
நல்விரத மாம்கனியை இன்மைஎனும் ஒருதுட்ட
நாய் வந்து கவ்வி அந்தோ
தான்கொண்டு போவதினி என்செய்வேன் என்செய்வேன்
தளராமை என்னும் ஒருகைத்
தடிகொண் டடிக்கவோ வலியிலேன் சிறியனேன்
தன்முகம் பார்த்தருளுவாய்
வான்கொண்ட தெள்அமுத வாரியே மிகுகருணை
மழையே மழைக்கொண்டலே
வள்ளலே என் இருகண் மணியே என் இன்பமே
மயில் ஏறு மாணிக்கமே
தான்கொண்ட சென்னையில் கந்தகோட்ட டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவுவேண்டும்
உள்ஒன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ்பேசவேண் டும்பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்மத மானபேய்
பிடியா திருக்கவேண்டும்
மருவுபெண் ஆசையை மறக்கவே வேண்டும்உனை
மறவா திருக்கவேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வு நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட்ட டத்துள் வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளம் எனது வசம்நின்ற தில்லைஎன் தொல்லைவினை
ஒல்லைவிட் டிடவுமில்லை
உன்பதத் தன்பில்லை என்றனக் குற்றதுணை
உனை அன்றி வேறும் இல்லை
இளையவன் அவ னுக்கருள வேண்டும் என் றுன்பால்
இசைக்கின்ற பேரும் இல்லை
ஏழையவ னுக்கருள்வ தேன் என் றுன் எதிர் நின்
றியம்புகின் றோரும்இல்லை.

....

திருஓங்கு புண்ணியச் செயல் ஓங்கி அன்பருள்
திறலோங்கு செல்வம் ஓங்கச்
செறிவோங்க அறிவோங்கி நிறைவான இன்பம்
திகழ்ந்தோங்க அருள் கொடுத்து
மருஓங்கு செங்கமல மலர்ஓங்கு வணம்ஓங்க
வளர்சருணை மயம்ஓங்கி ஓர்
வரம்ஓங்கு தெள் அமுத வயம்ஓங்கி ஆனந்த
வடிவாகி ஓங்கிஞான
உருஓங்கும் உணர்வின்நிறை ஒளிஓங்கி ஓங்கும் மயில்
ஊர்ந்தோங்கி எவ்வுயிர்க்கும்
உறவோங்கும் நின்பதம்என உளம்ஓங்கி வளம்ஓங்க
உய்கின்ற நாள் எந்தநாள்
தருஓங்கு சென்னையில் கந்தகோட்ட டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் உண்டு பொழிகின்ற கார்உண்டு விளைகின்ற
நிலம்உண்டு பலனும் உண்டு
நிதிஉண்டு துதிஉண்டு மதிஉண்டு கதிகொண்ட
நெறிஉண்டு நிலையும்உண்டு
ஊர் உண்டு பேர் உண்டு மணிஉண்டு பணிஉண்டு
உடைஉண்டு கொடையும் உண்டு
உண்டுண்டு மகிழவே உணவுண்டு சாந்தம் உறும்
உளம்உண்டு வளமும்உண்டு
தேர் உண்டு கரிஉண்டு பரிஉண்டு மற்றுள்ள
செல்வங்கள் யாவும் உண்டு
தேன் உண்டு வண்டுறு கடம்பணியும் நின்பதத்
தியானமுண் டாயில் அரசே
தார்உண்ட சென்னையில் கந்தகோட்ட டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Memories of our grandmother

What are our memories of our ammamma? Some have been passed on from her children, our mother, uncles and aunts. How at the age of 12, she almost single handedly raised her youngerbrother after her mother died. Those days there were not many people from Nainativu reside in Jaffna. She always welcomes all of them who needed help and look after them. She never asked for anything in return, content with the knowledge that it was her duty to take care of them.

Some memories of her, we have on our own.

- Her independence, even she got older, in taking care of herself.
- Her love of sweet tea.

Towards the end of her life, there were many things she forgot-where she was, people and places. But the one thing constant in her life was thatha.Whenever she was in discomfort, it was thatha she called out to and the sound of his voice always seemed to calm her down. The love they shared for each other with stood everything that life put in front of them. We hope wherever you have gone to ammamma, you are not in any pain. We hope you know that when you need some kind of reassurance, we are going to be right here and the sound of our voices will carry you through. We may no longer see you but we'll always have these special moments we shared with you.

**"May your soul rest in peace!"**

*Loving*
*grandchildren,*
**Anassuya and Sumangalai.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

மண்ணை நீத்த அன்னையது
மரணச் சடங்கிற் கலந்து கொண்டோர்
எண்ணும் பணிகள் பல புரிந்து
எமக்கு உதவி அளித்து நின்றோர்
கண்ணீர் துடைக்க அனுதாபக்
கடிதம் தந்தி அனுப்பி வைத்தோர்
நண்ணி அந்தி யேஷ்டி வந்தோர்
யார்க்கும் உளமார எம் நன்றிகள்

*இங்ஙனம்*
***குடும்பத்தினர்.***

*இல – 02,*
*ரஞ்சன் றோட்,*
*வெள்ளவத்தை,*
*கொழும்பு – 06.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

கதிரேசு தம்பையா *
\+
இராமாசிப்பிள்ளை *

- சுப்பிரமணியம் *
- சோமசுந்தரம் *
- கிருஷ்ணசாமி *
- நாகம்மா *
- தம்பிமுத்து
- இரத்தினசபாபதி *

வைத்திலிங்கம் குமாரசாமி *
\+
செல்லம்மா *

- சொர்ணம்மா
- பாலசுந்தரம் *
- இராமச்சந்திரன் *
- தனலக்ஷ்மி *
- சாந்தலிங்கம்

தம்பிமுத்து + சொர்ணம்மா

- சச்சிதானந்தன் + பரமேஸ்வரி
- சிவானந்தன் + குருகுல ராணி
- அருளானந்தன் + சகுந்தலாதேவி
  - சாம்பவி
- அம்பிகை + இராமச்சந்திரன்
  - அநசூயா
  - சுமங்கலை
- குகானந்தன் + வெள்ளிவீதியார் செஞ்சுடர்
- அம்பாலிகை + மருதயினர்
  - ஆரணி
  - பிரணவன்
- அமுதாம்பிகை + கருணாரட்ணம்
  - வர்ஜிதா

* அமரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு நாகபூஷனி அம்மன் ஆலயம்.



நற்கதி வழங்கும் நற்பதி நயினை
சொற்பதம் கடந்த சொற்பதி நயினை
அற்புத நாயகி அருள் தரும் நயினை
கற்பனைக் கெட்டா கவின் பெறு நயினை
இப்பதி தனில் இல்லையே துன்பம்.

UNIE ARTS 2330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org